TAMIL VERSION

सत्यमेव जयते

Competition Act, 2002

2002ம் ஆண்டு வணிகப் போட்டி சட்டம்

# வணிகப் போட்டியினை ஆதரித்தல்



## மிகச்சிறந்த பயனுக்கான நேர்மையான வணிகப் போட்டி

Fair Competition
For Greater Good

भारतीय प्रतिस्पर्धा आयोग

COMPETITION COMMISSION OF INDIA

## எதிர்காலக் கனவு

*நியாயமான, ஒன்றோடொன்று போட்டியிடுகின்ற மற்றும் புதுமுறையான வணிகங்களுக்குத் தூண்டு கோலாய் விளங்கிடும் பணி ஈடுபாடு மற்றும் வலியுறுத்தி நடைமுறைப்படுத்துதல் வாயிலாக, இயலக்கூடியதாகச் செய்கின்ற போடிப் பண்பாட்டினை ஊக்குவித்தலும் அதனை நீடித்து நிலைபெறச் செய்தலும் நுகர்வோர் நலத்தினை உயர்த்துதலும் பொருளாதார வளர்ச்சியினை ஆதரித்தலும்.*

## *பணித்திட்டம் - 2020*

*இந்திய வணிகப் போட்டி ஆணையம் உரம்மிக்க (வலுவான) போட்டியுடன் கூடிய சூழலை, பின் வருபவனவற்றின் வாயிலாக (போட்டியுடன்) கூடிய சூழலை, பின் வருபவனவற்றின் வாயிலாக*

- *நுகர்வோர் தொழிற்சாலை, அரசு மற்றும் பன்னாட்டு ஆட்சியெல்லைகள் உள்ளிட்ட அனைத்துப் பங்குரிமையாளர்களுடனும் தமது சுய ஆற்றல் மிகுந்த (தாமே தொடக்கம் செய்து, சூழ்நிலையொன்றினை உருவாக்குகின்ற) பணி ஈடுபாடு.*
- *உயர் தகுதி அளவுகளுடன் ஓர் அறிவுச் செறிவான நிறுவனமாக விளங்குதல்*
- *செயல் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதலில், தொழில் வல்லமை, வெளிப்படைத் தன்மை, உறுதியாக முடிவெடுக்கும் தன்மை மற்றும் மதிநுட்பம்.*

## பொறுப்புத் துறக்கம்

*இந்த விரைவுக் கையேடு வணிகப் போட்டியினை ஆதரித்தல் மற்றும் இந்திய வணிகப் போட்டி ஆணையத்தின் விழிப்புணர்வுத் திட்டம் ஆகிவற்றின் ஒரு பகுதியாக விளங்குகிறது. (அதே நேரத்தில்) இதனுள் கூறுப்பட்டுள்ள கருத்துகள், எவ்வகையிலும் ஆணையத்தில் அதிகாரப்பூர்வமான கருத்துகளாகக் கருதப்படல் கூடாது. (மேலும்) இந்நூலினைப் படிப்போர் யாவரும், அவ்வப்போது திருத்தம் செய்யப்பெற்று வந்துள்ள 2012 ஆம் ஆண்டு வணிகப் போட்டிச் சட்டத்தினை மிகுந்த கவனத்துடன் படித்துப் பார்த்து, தேவைப்படின், சட்டம் சார்ந்த அறிவுரையினைக் கோரிப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.*

# வணிகப் போட்டியினை ஆதரித்தல்

மிகச்சிறந்த பயனுக்கான
நேர்மையான வணிகப் போட்டி

# பொருளடக்கம்

**1. வணிகப் போட்டி இணக்கம் ...... 10**
— நிறுவனங்களின் இணக்க ஏற்பாடுகள் ...... 11
— புலனாய்வுகளுக்காக ஊழியர்களைத் தயார் படுத்துதல் ...... 17
— இடர் வாய்ப்பிலுள்ள பணியாளர்களையும் பிரிவுகளையும் (கோட்டங்களையும்) கண்டறிதல் ...... 17
— இரகசியத் தன்மை ...... 17

**2. தகவலினை அதிகாரப்பூர்வமாக எவ்வாறு பதிவு செய்வது ...... 22**
— தகவலினை யார் பதிவு செய்ய/தாக்கல் செய்ய முடியும்? ...... 23
— தகவலினைப் பதிவு செய்யக்கூடிவை (தாக்கல் செய்யக்கூடியவை) குறித்தான சிக்கல்கள் யாவை? ...... 23
— போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்களின் மீதான, 2002 ஆம் ஆண்டு வணிகப் போட்டிச் சட்டத் (திருத்தப் பெற்றுள்ளவாறு) (சட்டம்) தின் குறிப்பிட் விதித்துறைகள் யாவை? ...... 23
— 2002-ஆம் ஆண்டு வணிகப்போட்டி சட்டத்தில் ஆதிக்க நிலையைத் தவறாகப் பயன்படுத்துதல் மீதான, குறிப்பிடப்பட்ட விதித்துறைகள் யாவை? ...... 24
— இந்திய வணிகப்போட்டி ஆணையத்தின் முன்பாக, தகவலினை எவ்வாறு தாக்கல் செய்வது? ...... 25
— உரிய நடவடிக்கையை மேற்கொள்ள யாரிடம் முறையிடுவது? தகவலை எங்கு தாக்கல் செய்வது? ...... 26
— செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் யாவை? ...... 26
— கட்டணம் எவ்வாறு செலுத்துவது? ...... 26

**3. பொது ஆதாய நோக்கிலான வணிகக் குழுக்கள்/கூட்டமைப்பு/ கூட்டுச்சதி ...... 28**
— அறிமுகம் ...... 29
— பொது ஆதாயநோக்கிலான வணிகக்குழுவாவது யாது? ...... 29
— எல்லை தாண்டிய சட்டம் ...... 30
— தீங்கு விளைவிக்க கூடியவை என்று ஊகிக்கப்படும் கூட்டமைப்புகள் ...... 30
— கூட்டமைப்புகளின் பொதுவான பண்புக்கூறுகள் ...... 31
— கூட்டமைப்புகளை உருவாக்குதற்கு உகந்த சூழல் ...... 31
— கூட்டமைப்புகள் குறித்து விசாரணை ...... 31
— ஆணையத்தின் அதிகாரங்கள் ...... 32
— பெருந்தன்மைத் திட்டம் ...... 32
— இடைக்கால உத்தரவு ...... 33
— மேல்முறையீடு ...... 33

*4.* ***ஏல மோசடி*** ..... *34*
— *அறிமுகம்* ..... *35*
— *ஏல மோசடியாவது யாது?* ..... *35*
— *ஏல மோசடி என்பது வணிகப் போட்டிக்கு எதிரானது* ..... *35*
— *ஏல மோசடி வடிவங்கள்* ..... *36*
— *ஏல ஒடுக்கம்* ..... *36*
— *பாராட்டு முறையான ஏலம் கேட்டல்* ..... *37*
— *ஏல சுழற்சி* ..... *37*
— *துணை ஒப்பந்த உருவாக்கம்* ..... *37*
— *சில சந்தேகத்திற்குரிய (ஐயப்படும்படியான) நடத்தை வடிவமைப்பு மாதிரிகள்* ..... *37*
— *ஏலமோசடி குறித்த விசாரணை* ..... *38*
— *ஆணையத்தின் அதிகாரங்கள்* ..... *38*
— *அபராதம்* ..... *39*
— *இடைக்கால உத்தரவு* ..... *39*
— *மேல்முறையீடு* ..... *40*

*5.* ***(அரசின்) பொதுக் கொள்முதல்*** ..... *41*
— *பொதுக் கொள்முதல்* ..... *42*
— *பொது கொள்முதல்களில் போட்டி தொடர்பான உறுத்தல்கள்* ..... *42*
— *பொதுக் கொள்முதலில் வணிகப் போட்டியின் முக்கியத்துவம்* ..... *43*
— *பொதுக் கொள்முதலில் போட்டி முகமையின் பங்கு* ..... *43*
— *வஞ்சகக் கூட்டு உடன்படிக்கையினை ஆதரிக்க உதவும் தொழிலகம், தயாரிப்பு மற்றும் சேவை பன்புக் கூறுகள்* ..... *44*
— *ஏலசூழ்ச்சிக்கான எச்சரிக்கை சமிஞ்சைகள்* ..... *45*
— *ஏல மோசடியினைக் கண்டறிய, கூடுதல் தகவல் பட்டியல் :* ..... *48*
— *ஏல மோசடி இடர் வாய்ப்பினைக் குறைக்கும் வழிமுறை* ..... *49*
— *ஏலசூழ்ச்சியின் இருப்பைப் பற்றிய ஐயம் வந்தால் கொள்முதல் அலுவலர்கள் செய்யவேண்டியவை* ..... *52*
— *போட்டித்தன்மையை குலைக்கும் பிற காரணிகள்* ..... *52*
— *முடிவுரை* ..... *53*

*6.* ***ஆதிக்கத்தின் முறையற்ற பயன்பாடு*** ..... *55*
— *அறிமுகம்* ..... *55*

— *ஆதிக்கம் என்றால் என்ன?* ...... *55*

— *தொடர்புடைய சந்தை* ...... *55*

— *ஆதிக்கநிலையைக் கண்டறிவதற்கான காரணிகள்* ...... *56*

— *ஆதிக்கத்தின் முறையற்ற பயன்பாடு* ...... *56*

— *சுரண்டல் மற்றும் தவிர்த்தல் நடத்தை* ...... *57*

— *அறிவுசார் சொத்துக்களும் ஆதிக்கநிலையின் முறையற்றப் பயன்பாடுகள்* ...... *58*

— *ஆதிக்கத்தின் முறையற்ற பயன்பாட்டின் மீதான விசாரணை* ...... *58*

— *ஆணையத்தின் அதிகாரங்கள்* ...... *59*

— *இடைக்கால ஆணை (INTERIM ORDER)* ...... *59*

— *மேல்முறையீடு* ...... *59*

— *இழப்பீடு (பிரிவு 53N)* ...... *60*

***7. சேர்க்கைகள்* ...... *61***

— *அறிமுகம்* ...... *62*

— *சேர்க்கை என்றால் என்ன?* ...... *62*

— *சேர்க்கைகளை தீர்மானிக்க சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகள்* ...... *62*

— *விலக்கு அறிவிக்கைகள்* ...... *64*

— *எவ்வித சேர்க்கைகளுக்கு அறிவிப்பு பொதுவாக தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை.* ...... *64*

— *சேர்க்கை அறிவிப்பு* ...... *66*

— *பொது நிதி நிறுவனங்கள், துணிகர மூலதன நிதிகள், போன்றவையின் கையகப்படுத்துதல் அல்லது நிதி வசதி* ...... *66*

— *இணைப்புகளை புலனாய்வு செய்வதற்கான செயல்முறை* ...... *67*

— *போட்டியின் மீதான குறிப்பிடத்தக்க பாதகமான விளைவின் மதிப்பீடு* ...... *67*

— *பசுமை வழி* ...... *68*

— *மேல்முறையீடுகள்* ...... *68*

***8. கனிவான போக்கு* ...... *69***

— *அறிமுகம்* ...... *70*

— *கனிவான போக்குத் திட்டம்* ...... *71*

— *முறைப்படுத்துதல் - 2009ஆம் ஆண்டு இந்திய போட்டி ஆணையம் (குறைந்த அபராதம்)* ...... *72*

— *ஒழுங்குமுறை நெறிகள்* ...... *72*

— *கமுக்கத்தன்மை ........ 74*

— *நிறைவுரை ........ 74*

— *ஆணையத்தை எவ்வாறு தொடர்பு கொள்வது? ........ 75*

— *பின்னிணைப்பு –I ........ 76*

— *பின்னிணைப்பு –II ........ 77*

***9. அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள் ........ 84***

— *சந்தையில் போட்டி என்றால் என்ன? ........ 85*

— *சந்தையில், போட்டி நமக்கு ஏன் தேவைப்படுகிறது? ........ 85*

— *நியாயமற்ற போட்டியின் பொருள் என்ன? ........ 85*

— *வணிகப்போட்டி சட்டம் மற்றும் கொள்கை என்ன? ........ 85*

— *2002 ஆம் ஆண்டு (வணிகப்) போட்டிச் சட்டத்தின், (திருத்தப்பட்டபடி), குறிக்கோள்/ நோக்கங்கள் என்ன? ........ 86*

— *சட்டத்தின் குறிக்கோள்/ நோக்கங்கள் எவ்வாறு அடையப்படும்? ........ 86*

— *இந்திய போட்டி ஆணையத்தின் செயல்பாடுகள் என்ன? ........ 86*

— *சட்டத்தின் கீழ் “ஒப்பந்தம்" என்றால் என்ன? ........ 86*

— *போட்டி எதிர்ப்பு ஒப்பந்தம் என்றால் என்ன? ........ 86*

— *ஆதிக்க நிலையை தவறாக பயன்படுத்துவதனை எது உருவாக்குகிறது? ........ 87*

— *போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்கள் / ஆதிக்க நிலையை தவறாகப் பயன்படுத்துதல் குறித்து ஆணையம் விசாரணையை எப்போது தொடங்கலாம்? ........ 87*

— *தகவலை யார் அளிக்க முடியும்? ........ 87*

— *ஒரு விசாரணைக்காக யார் குறிப்பினை அளிக்க முடியும்? ........ 88*

— *இந்தியப்போட்டி ஆணையம் தானாகவே முன்வந்து விசாரணையை தொடங்கமுடியுமா? ........ 88*

— *இந்தியப்போட்டி ஆணையம் ஒரு விசாரணையை எவ்வாறு மேற்கொள்ளும்? ........ 88*

— *.புலனாய்வுக்குப்பின் ஆணையம் என்ன செய்யும்? ........ 88*

— *போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்கள் / ஆதிக்க நிலையை தவறாகப் பயன்படுத்துதல் இருப்பின், ஆணையம் என்ன உத்தரவுகளை (ஆணைகளை) பிறப்பிக்க முடியும்? ........ 88*

— *சட்டத்தின் படி சேர்க்கைகள் என்றால் என்ன? ........ 89*

— *சேர்க்கைகளை தீர்மானிக்க சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகள் என்ன? ........ 89*

— *சேர்க்கையை முன்மொழிகின்ற ஒரு நிறுவனம் அதை ஆணையத்திற்கு அறிவிக்க வேண்டுமா? ........ 91*

— ஒரு சேர்க்கை செயலுக்கு வருவதற்கு கட்டாயமான காத்திருப்பு காலம் என்று ஏதேனும் உள்ளதா? ... 91

— சேர்க்கைகளை புலனாய்வு செய்வதற்கான நடைமுறை யாது? ... 91

— ஒரு சேர்க்கை விஷயத்தில் ஆணையம் என்ன உத்தரவுகளை (ஆணைகளை)ப் பிறப்பிக்க முடியும்? ... 91

— அதாவது ஒரு போட்டிக்கு எதிரான ஒப்பந்தத்தைப்பற்றி தகவல் தரும் நபருக்கு கனிவான போக்கு வழங்கப்படுமா? ... 92

— ஆணையத்திற்க்கு முன் ஒருவரின் பிரிதிநிதியாக யார் விளங்க முடியும்? ... 92

— . ஒரு போட்டி கொள்கையின் மீது யார் ஒரு குறிப்பினை அனுப்ப முடியும்? ... 92

— . ஒரு போட்டி பிரச்சனையின் மீது யார் ஒரு குறிப்பினை அனுப்ப முடியும்? ... 92

— வணிகப்போட்டி ஆணையம் ஒரு சட்டரீதியான அதிகாரத்திற்கு குறிப்பினை அனுப்ப முடியுமா? ... 92

— போட்டி ஆணையத்தின் ஆணைகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்கான வழிவகைகள் யாவை? ... 92

— தகவலை தாக்கல் செய்வது எப்படி? ... 92

— பரிந்துரைக்கப்பட்டுள்ள கட்டணங்கள் எவை? ... 93

Regulations Notified by the Competition Commission of India ... 94

# வணிகப் போட்டி இணக்கம்

## வணிகப் போட்டி இணக்கம்

### வணிக நிறுவங்களுக்கான போட்டி இணக்கத் திட்டம்

*2002 ஆம் ஆண்டு வணிகச் சட்டத்தை, தொழில் முனைவகங்கள் பின்பற்றுவதற்கான பரிந்துரைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பு.*

**நிறுவனங்களின் இணக்க ஏற்பாடுகள்**

**போட்டி இணக்கத்தின் பொருளும் வரையெfdல்லையும்**

*போட்டி இணைக்கத் திட்டம் எனப்படுவது வணிகத்தை உறுதி செய்வதற்கானதொரு முறையான உள்கட்டமைப்பு ஆகும். அதாவது, மேலாண்மைப் பொறுப்பிலுள்ளோரும் தனியராக உள்ள ஊழியர்களும் தாமாகவே முன்வந்து போட்டி வணிகச் சட்டத்தினைப் பின்பற்றுவதற்கான ஒரு திட்டமாகும் இது. இது, அறிந்தோ, அறியாமலோ சட்டத்தை மீறும் இடர் வாய்ப்பினைத் தடுப்பதற்கான நோக்கத்தைக் கொண்டுள்ளதோடு, "வருமுன் காப்போம்" என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது.*

*சந்தையின் செயல் திறன்களைக் குறைக்கின்ற அல்லது நுகர்வோருக்கு ஊறுவிளைவிக்கின்ற விலை நிர்ணயம், நுழைவுத் தடைகளை உருவாக்கிடுதல், விளைவின் அளவை (வேலை அளவை) வேண்டுமென்றே குறைத்தல், சந்தைகளை ஒதுக்கீடு செய்தல், ஏலமோசடி, ஒரு பொருளின் கொள்முதலை மற்றொரு பொருளின் விற்பனையுடன் கட்டயமாக்குவது, சூறையாடும் விலை நிர்ணயம், பாரபட்சமான விலை நிர்ணயம் போன்ற போட்டி எதிர்ப்பு நடத்தையைக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளில் தொழில் நிறுவனங்கள் ஈடுபடக் கூடாது.*

*வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள 'தொழில் முனைவோர் சங்கங்கள்', பொதுத்துறை நிறுவனங்கள், அரசுத் துறைகள் ஆகியவை உள்ளிட்ட அனைத்துப் பொருளாதார முகவாண்மை-தயாரிப்பாளர்கள், சேவை வழங்குநர்கள், வணிகர்கள், விற்பனையாளர்கள், வாங்குபவர்கள் முதலானோர் இச்சட்டத்துள் அடங்கபவராவர். வர்த்தக சங்கத்தின் உறுப்பினர்கள், எடுத்துக்காட்டான போட்டியாளர்களாக உள்ளனர். மேலும் சங்க நடவடிக்கைகளில் பங்கேற்கும் போது, சங்கக் கூட்டங்களில் கலந்து கொள்ளும்போது, போட்டி சட்டத்தை மீறுகின்ற இடர் வாய்ப்பினை உணர வேண்டும்.*

*ஆதிக்க தொழில் முனைவகங்கள், தங்களது நடத்தையால் ஆதிக்க நிலை தவறான பயன்பாடு விளைந்து விடக்கூடாது என்பதில் கூர்மையாக இருக்க வேண்டிய சிறப்புப் பொறுப்பினைக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று தொழில் முனைவகங்கள் / நிறுவனங்கள் ஒரு சேர்க்கை அல்லது அதன் எந்தவொரு பகுதியையும் நிறைவு செய்வதற்கு முன், சட்டத்தின் தொடர்பான விதிமுறைகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும். விசாரணை மற்றும் புலன் விசாரணைகள், தேடல் மற்றும் பறிமுதல் முதலியவற்றின்போது, பின்பற்றுவதற்கான முறையான வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். மேலும் சட்டமீறல் ஏதேனும் கண்டறியப்பட்டால், இந்திய வணிகப் போட்டி ஆணையத்திற்கு, அதனை முறையாகத் தெரிவிக்க வேண்டும்.*

***வினா 1: வணிகப் போட்டி இணக்கத்திட்டம் என்றால் என்ன?***

**விடை**: *சட்டத்தின் விதித்துறைகளைப் பின்பற்றுவதற்கு, ஒரு நிறுவனத்தின் பங்காக அமைந்துள்ள தீவிர முயற்சிகளை உள்ளடக்கியதாக சட்ட இணக்கம் இருக்கிறது. தொழில் முனைவகமானது / நிறுவனமானது தேவையானதும், உறுதியானதுமான சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, அறிந்தோ அறியாமலோ அது சட்டத்தின் விதிமுறைகளை மீறுவதில்லை என்பதனை உறுதிப்படுத்துமிடத்து, அது வணிகப் போட்டி இணக்கத் திட்டத்தைப் பின்பற்றுவதாகக் கூறலாம்.*

***வினா 2: வணிகப் போட்டி இணக்கத்திட்டத்தின் குறிக்கோள் யாவை?***

**விடை**: வணிகப் போட்டி இணக்கத்திட்டம், கீழ்க்காணும் மூன்று முக்கியக் குறிக்கோள்களைக் கொண்டிருக்க வேண்டும். அவையாவன:

*(1)* சட்ட மீறலைத் தடுத்தல், அதாவது *2002*ஆம் ஆண்டு சட்டத்தினையும், அதன் கீழ் வகுக்கப்பட்டிருக்கும் அனைத்து விதிகள்,

*(2)* ஒழுங்குமுறை நெறிகள் மற்றும் உத்தரவுகள் *(ஆணைகள்) மீறப்படுவதினைத் தடுத்தல் (ஆகியவற்றைப் பின்பற்றுதல்).*

*(3) இணக்கத்துக்கான (சட்டங்களை மதிப்பதற்கான) பண்பாட்டினை ஊக்குவித்தல்; மற்றும் நல்ல நிறுவன குடிமைத் தன்மையினை ஊக்குவித்தல்*

***வினா 3: வணிகக் போட்டி இணக்கத் திட்டத்தைப் பேணுவதன் நன்மைகள் யாவை?***

***விடை**: விரிவாக நோக்கின், வணிகப் போட்டி இணக்கத் திட்டம் பின்வரும் நன்மைகளை வழங்குகிறது.*

- *அமைப்பு முழுவதிலும், ஓர் இணக்கக் கலாச்சாரத்தை (பண்பாட்டை) நெஞ்சில் ஆழப்பதிய வைக்கிறது. இது வணிகங்களுக்கு ஆக்கப்பூர்வமான பயன்களைத் தந்து ஒரு வணிக மேம்பாட்டாளராக விளங்கச் செய்கிறது.*

- *யாதொரு விதிமீறலையும், தொடக்கக் கூட்டத்திலேயே கண்டறிந்து, நிறுவனங்கள் / தொழில் முனைவகங்கள் தமது நன்மைக்காக சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலம், வணிகப் போட்டிசார் பயன்களை அளிக்கின்றது.*

- *நிறுவனங்களின் புகழை உயர்த்திடவும் நற்பெயரை வளர்த்திடவும் இது உதவுகிறது. சட்டத்தின் விதிமுறைகளை மீறும் நிறுவனங்கள், அவற்றின் நற்பெயருக்குக் களங்கத்தினைத் தேடிக் கொள்வதோடு, பல்லாண்டுகளாக, மிகுந்த கவனத்துடன், சந்தைப் படுத்துதலில் உள்ள அதன் திறனைக் கெடச் செய்து, அவ்வணிக நிறுவனத்துக்குரிய சின்னத்திற்கும் அவமதிப்பினை உண்டாக்கும்.*

- *ஒழுங்கு முறைத் தலையீடு மற்றும் வழக்காடுதலின் செலவுகளையும் எதிர்வினைபுரியத்தக்க விளைவுகளையும், இது நீக்கிடவோ குறைத்திடவோ செய்கிறது.*

- *நிறுவனங்கள் (யாவும்) சமூக அக்கறையையும் பொருளாதார ஒழுக்கயியலையும் தேசிய நலனையும் தங்கள் இதயங்களில் கொண்டுள்ளன என்பதை இது நிறுவுகிறது.*

- *நிருவாகத்தின் இணக்கத்திற்கான ஆர்வத்தைப் பிரதிபலிக்கும் வலுவானதொரு வணிகப் போட்டி இணக்க இருப்பு (சட்ட) மீறலுக்காக வழங்கப்படக் கூடிய தண்டனையின் தீவிரத்தை நினைவூட்டும்.*

***வினா 4: இணக்கமல்லாதவற்றின் சில பெருஞ்செலவுகள் யாவை?***

***விடை**: இணக்கமற்ற நிலை அல்லது தன்மை நிறுவனங்களுக்கு மிகவும் செலவுகளை ஏற்படுத்துவதாக அமையும். எனவே, சட்டத்திற்கு இணங்காத நிறுவனங்களுக்கு / தொழில் முனைவகங்களுக்கு, தண்டனை வழங்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். விதிமீறலின் விளைவாக, நிறுவனங்கள் சந்திக்க வேண்டிய நிலை கீழ்க்காணும் ஒன்றாகவோ அதற்கு மேற்பட்டதாகவோ இருக்கலாம்:*

- *மிகுந்த பொருட்செலவிலான கடின உழைப்பில் உருவான புகழ் களங்கப்பட்டு விடும்*

- *கடுமையான அபராதம்: வணிகப் போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்களுக்காகவும், ஆதிக்கத்தைத் தவறாகப் பயன்படுத்தியதற்காகவும், முந்தைய மூன்றாண்டுக் காலத்துக்குரிய விற்று முதல் சராசரியில் 10 சதவீதத் தொகை (பத்து விழுக்காடு அளவிலான தொகை), தொழில் முனைவகங்களிடமிருந்து / நிறுவனங்களிடமிருந்து அபராதமாக வசூலிக்கப்படும். கூட்டமைப்பின் நேர்வில், கூட்டமைப்பிலுள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும், அப்படிப்பட்ட கூட்டமைப்பு தொடரும் ஆண்டு ஒவ்வொன்றிற்கும், அக்கூட்டமைப்பின் லாபத்தைப் போல் மூன்று மடங்கிலான ஒரு தொகை அல்லது, கூட்டமைப்பு தொடரும் ஒவ்வொரு ஆண்டிற்கும் அதன் விற்று முதலில் 10 விழுக்காடு அளவிலானதொரு தொகை ஆக, இவ்விரண்டில், எது அதிகமோ, அத்தொகை அபராதமாகக் கூட்டமைப்புக்கு விதித்திடுதற்குரிய சட்ட விதிமுறைகள் உள்ளன. எக்ஸ்ஸெல் பயிர் பராமரிப்பு நிறுவனமும் அதற்கெதிரணியான வணிகப்போட்டி ஆணையமும் தொடர்பான வழக்கில் 08.05.2017 நாளிடப்பட்ட உச்சநீதிமன்ற ஆணையின்படி / உத்தரவின்படி (2014ஆம் ஆண்டின் சிவில் மேல் முறையீடுகளின் எண். 53-55, 2874 & 2922) சட்டத்திற்கு எதிரான செயல்களால் / சட்ட மீறல்களால் பாதிக்கப்பட்டுள்ள, கேள்விக்குரிய தயாரிப்புகள் மற்றும் சேவைகள் தொடர்பான நிறுவனம் ஒன்றின் விற்றுமுதல் மீது அபராதம் விதிக்கப்படும்.*

- *ஆதிக்கத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், ஆதிக்க நிறுவனத்தின் பிரிவை, ஆணையத்தால் கட்டளை இடப்படக்கூடிய நிலையினைத் தோற்றுவிக்கும்.*
- *ஆணையத்தால், ஒரு (சட்ட) மீறல் உறுதி செய்யப்பட்டால், பாதிக்கப்பட்ட தரப்பினர் இழப்பீட்டுக்காக, தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தை அணுக முடியும். இந்த இழப்பீடு மீறல் வகையினைப் பொறுத்து மிகப் பெரியதாக இருக்கும்.*
- *வணிகப் போட்டி சட்ட மீறல் வழக்குகளைக் கையாளுவதில் வள ஆதாரங்களின் ஆற்றல் இழத்தல்.*
- *வலிமை மிக்க வாடிக்கையாளர்கள் / முதலீட்டாளர்கள் / கூட்டு நிறுவனப் பங்குதாரர் (வணிகக் கூட்டு முயற்சியிலுள்ள பங்குதாரர்) தள்ளி வைக்கப்படலாம் என்பதால் நேரிடக்கூடிய வணிக இழப்பு.*

***வினா 5: போட்டிச் சட்டத்துடன் இணங்குவதன் நன்மைகள் என்ன?***

**விடை**: *இணக்கத்தின் நன்மைகள் பின்வருபனவற்றை உள்ளடக்கியவையாகும்.*

- *அபராதங்களைத் தவிர்க்க அல்லது அபராதத்தின் அளவினைக் குறைக்க உதவுகின்றது.*
- *செல்லத்தக்கனவல்லாத அல்லது சட்டப்படிக் கட்டுப்படுத்த முடியாத வலுவற்ற ஒப்பந்தங்களைத் தவிர்க்க முடியும்*
- *இழப்பீடுக்கான ஆற்றல்மிக்க நடவடிக்கையினைத் தவிர்க்க முடியும்*
- *மற்றபடி தவிர்க்கக்கூடிய பல செலவுகளைத் தவிர்க்க முடியும்*
- *சட்ட விதிமுறைகளின், 'கருணை காட்டும்' தன்மையிலிருந்து பயனடைய உதவுகிறது.*
- *ஊழியர்களுக்கிடையே, வணிகப் போட்டி சட்டம் குறித்த விழிப்புணர்வினை அதிகரிக்க உதவுகிறது.*

***வினா 6: வணிகப் போட்டி இணக்கத் திட்டத்தின் கூறுகள் யாவை?***

**விடை**: *நன்கு உருவாக்கப்பட்டதும், போதிய அளவினதுமான இணக்கத் திட்டம், தொடர்புடைய தொழில் முனைவகத்தால் / நிறுவனத்தால் எதிர் கொள்ளப்படும் வணிக உண்மை நிலைகளைக் கண்டறிந்து தேவையான உதவியினை அளிப்பதாக அமைந்திட வேண்டும்.*

*அடிப்படைச் சிக்கல் என்பது சந்தையில் ஒரு நிறுவனச் சூழலாகும். அதாவது சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளவாறு அந்நிறுவனம், (சந்தையில்) ஓர் மேலாதிக்கம் மிக்க போட்டியாளராக இருக்கிறதா என்பதாகும்.*

*ஓர் மேலாதிக்கம் பெற்ற நிறுவனம் சந்தையில், குறிப்பாக அதன் நடத்தை குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில், மேலாதிக்கம் செலுத்தும் தொழில் முனைவகங்களின் / நிறுவனங்களின் சில வகைகளிலான நடத்தையினை, சட்டம் வெளிப்படையாகவே தடை செய்கிறது. குழு மேலாதிக்கத்தினையும் சட்டம்அங்கீகரிக்கிறது. ஒவ்வொரு மேலாதிக்க நிறுவனமும் அதன் ஊழியர்களுக்கு, குறிப்பாக மூத்த நிர்வாகிகளுக்கு, கவனமாக தவிர்க்கப்பட வேண்டிய நடத்தை வகையினைப் பற்றி கற்பிப்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும்.*

*ஒப்பந்தங்களில் நுழைந்துள்ள அல்லது ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் செயல்முறையில் இருந்து வருகின்ற நிறுவனங்கள், போட்டியாளர்கள் குறித்து மிகுந்த எச்சரிக்கையாக இருந்து அத்தகைய போட்டியாளர்கள் சட்டத்திற்குப் புறம்பான எதனையும் செய்திட மாட்டார்கள் என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*தொழில் / வணிகச் சங்கங்களின் உறுபபினர்களாக உள்ள நிறுவனங்களுக்கு வணிகப் போட்டி சட்டம் குறித்துத் தெளிவான கருத்து இருந்திடல் வேண்டும்.*

*அன்றாட அடிப்படையில், இது நடைமுறைப் பயன்பாட்டில் உள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள ஓர் இணக்கத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். அன்றாட அடிப்படையில் பணியை*

*மேற்கொண்டு வரும் சட்டப்படி பயிற்சி பெறாத ஊழியர்களுக்கு ஓர் அதிநவீன சட்ட கட்டுரைகளை கொண்ட திட்டம் பொருத்தமான ஆவணமாக இருக்காது.*

*இணைக்கத் திட்டங்கள் ஒவ்bhவாரு நிறுவனத்துக்கும் வழக்கத்திலுள்ள அடிப்படையைக் கொண்டதாக இருக்க வேண்டும். மேலும் 'வெளிப்படையற்ற திட்டம்' இந்நோக்கத்தை நிறைவேற்ற சாத்தியமாக இருக்காது.*

*நிறுவனத்தின் சந்தை நிலையைப் பிரதிபலித்திட நடைமுறை வழிகாட்டுக் குறிப்புகள் கிடைக்கச் செய்யப்பட வேண்டும்.*

*வழிகாட்டுக் குறிப்புகளில் அடங்கக்கூடிய சில பகுதிகள் வருமாறு:*

- *எப்போதும் தடை செய்யப்படும் வெளிப்புற விவாத வகைகள் (எடுத்துக்காட்டாக விலை நிர்ணயம்)*
- *சட்டப்பூர்வமாக பரிமாறிக் கொள்ளக் கூடிய தகவலையும் இரகசிய அல்லது வணிக ரீதியிலான கூருணர்வுடைய குறிப்புகளின் மீதான தகவலையும் வரையறுக்கும் வழிகாட்டுக் குறிப்புகள்*
- *வணிகப் போட்டியாளர்களுடன் (வழக்குநர்களுடன் / வாடிக்கையாளர்களுடன்) கூட்டங்களை முறையாக நடத்தவதற்கான வழிகாட்டுக் குறிப்புகள்*
- *நேரடியான மற்றும் மறைமுகமான விலை நிர்ணயம் குறித்த வழிகாட்டுக் குறிப்புகள் (பொருத்தமான இடத்தில், மறு விற்பனை விலை பேணுகை உள்ளிட்ட)*
- *வாடிக்கையாளர்கள் மற்றும் / அல்லது வழங்குபவர்களிடமிருந்து வரும் புகார்களை எப்படிக் கையாளுவது என்பது குறித்த வழிகாட்டுதல்.*
- *வாடிக்க¡யாளர்களுடனும் / வழங்குபவர்களுடனும் தொடர்பு கொள்கையில் கவனிக்க வேண்டிய மேலாதிக்க நிறுவனங்களுக்கான வழிகாட்டுதல்*
- *நிறுவன வணிகத்திடமிருந்து, இயல்பான வாழ்க்கையின் உண்மையான நிகழ்வுகள் சார்ந்த எடுத்துக்காட்டுகளுடன், "செய்ய வேண்டியவையும், செய்யக் கூடாதவையும்" ஆகியவற்றின் நடைமுறை எடுத்துக் காட்டுகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.*

**வினா *7:* வணிகப்போட்டி இணைக்கத் திட்டத்தின் இன்றியமையாக் கூறுகள் யாவை?**

**விடை***: வணிகப் போட்டித் திட்டத்தின் இன்றியமையாக் கூறுகளாவன:*

- *போட்டி இணைக்கத் திட்டத்திற்கு மூத்த நிர்வாக பொறுப்புறுதிப்பாட்டின் வெளிப்படையான அறிக்கை*
- *ஒரு தொழில் முனைவகத்தின் / நிறுவனத்தின் இணக்கக் கொள்கை கிடைக்கப் பெறும் நிலை*
- *பயிற்சி மற்றும் ஊழியர்களின் கல்வி*
- *இணக்கக் கையேடு*
- *இணக்கக் கொள்கையின் முக்கியக் கோட்பாடுகள், எளிதல் புரிந்து கொள்ளத்தக்க எளிமையான, தெளிவான மொழியில் அமைந்திருத்தல் வேண்டும்.*
- *ஓர் இணக்கமான கட்டமைப்புக்குள் தங்களது வாணிகச் செயல்பாடுகளை நிகழ்த்திக் கொள்வதற்கும், சட்டத்தின் ஒரு விதி மீறலை விளைவிக்கும் ஊழியர்களின் செயல்களுக்கு எதிராக அத்தகைய ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குமான ஓர் எழுத்து மூலமான உறுதிமொழியினை கோரிப் பெறுதலும் உள்ளிட்டவை, பயன் தரத்தக்கதோர் இணக்கக் கொள்கையுள் அடங்கும்.*
- *ஒரு குறிப்பிட்ட பரிவர்த்தனை, போட்டிச் சட்டத்திற்கு இணங்கும் வகையில் உள்ளதா என்பது குறித்த அறிவுரையை, ஊழியர்கள் தேடிப் பெற்றிடுதற்கு ஏதுவாகவும், சட்டமீறல் இருக்குமென ஐயங் கொள்கின்ற நடவடிக்கைகள் குறித்துத் தகவல் அளிப்பதற்கு ஏதுவாகவும் தொடர்புடைய*

*நடைமுறைகள் அமைந்திட வேண்டும். அத்தகைய நடைமுறைகள் நிறுவனத்தின் "மிகச் சிறந்த நடைமுறை"களுடன் சேர்க்கப்பட வேண்டும்.*

*இந்நிறுவனங்கள் பயன்தரத் தக்கதோர் இணக்கக் கொள்கையினை வகுத்திடுதற்காகக் கீழ்க்காணும் இன்றியமையாக் கூறுகளைக் கருதிப் பார்த்திடலாம்:*

- *வணிகப் போட்டி சட்டம் மற்றும் இந்திய அரசு மற்றும் இந்திய வணிகப் போட்டி ஆணையத்தால் வழங்கப்பட்ட ஒழுங்கு முறைகள், உத்தரவுகள் மற்றும் வழிகாட்டு முறைகளைப் பின்பற்றிடுதற்கான பெருவிருப்பத்துடன் கூடிய ஓர் உறுதிப்பாடுக்கான உறுதிமொழி.*

- *இந்த ஒட்டுமொத்தக் கொள்கையினுள் அனைத்து ஊழியர்கள் மற்றும் இயக்குநர்கள், தங்களது வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இவ்வகையில் அவர்கள் அனைவரும் செயல்படுவர் என்பதற்கான ஓர் எழுத்துப்பூர்வமான உறுதிமொழியினைக் கோரிப் பெறுவதற்கான ஒரு கடமையை அவர்களை ஏற்கச் செய்வது.*

- *சட்ட விதிமுறைகளின் ஒரு மீறலில், நிறுவனத்தை வேண்டுமென்றோ, அலட்சியப் போக்கினாலோ ஈடுபடுத்திடும் ஊழியர்களுக்கு / தலைமைச் செயல் அலுவலர்களுக்கு / இயக்குநர்களுக்கு / நிறுவன உரிமையாளர்களுக்கு / நிறுவனப் பங்குரிமையாளர்களுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்வதற்கான ஓர் உறுதிமொழி / செயல் உறுதிப்பாடு.*

***வினா 8: மூத்த நிர்வாகத்தின் (மேலாண்மையின்) செயல் உறுதிப்பாட்டை எவ்வாறு வெளிப்படையாக வெளிப்படுத்த முடியும்?***

**விடை**: *மூத்த நிர்வாகத்தின் (மேலாண்மையின்) ஆதரவு, தெளிவாகத் தெரியக் கூடியதாகவும், செயல்துடிப்பு மிக்கதாகவும், ஒழுங்கமைவுடன் உரமூட்டுவதாகவும் அமைந்திடல் வேண்டும். இத்தகைய கொள்கையினைச் செயல்படுத்தும் பொறுப்பினை மூத்த நிர்வாகம் ஏற்று, தனது அர்ப்பணிப்பு உணர்வினால் மிக உயர் மட்டத்திலிருந்து அடிமட்டம் வரை வழிகாட்டிட வேண்டும். அர்ப்பணிப்புப் பண்புக் கூறு பின்வருவன உள்ளிட்ட பல வகைகளில் மிகச் சிறப்பாக எய்தப்படக் கூடும்:*

- *நிறுவனத்திலுள்ள மிக மூத்த அதிகாரிகளிடமிருந்து, வணிக இணக்கத் திட்டதின்பால் தங்களுக்குள்ள அர்ப்பணிப்புணர்வினை வெளிப்படுத்தி, பணியாளர்களுக்கு தனிப்பட்டதொரு செய்தியாக அறிவித்தல்*

- *நிறுவனத்தின் 'குறிக்கோள் அறிக்கை' அல்லது நடத்தை விதிமுறை மற்றும் ஒழுக்க நெறிமுறைகளில் இணக்கக் கொள்கையினைக் குறிப்பிடுதல்.*

- *தொழில் முனைவகத்தின் / நிறுவனத்தின் ஒட்டுமொத்த குறிக்கோள்களில் ஒன்றான திட்டத்தைக் கடைப்பிடிப்பது.*

- *ஓர் இணக்கத்திட்டம் என்பது,*

  — *முறையாக வடிவமைக்கப்பட்டுள்ளதும்*

  — *தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதும்*

  — *திறம்படச் செயல்படுத்தப்பட்டு வருவதும்*

  — *இயக்குநர்கள் குழுவிற்கு முறையான இடைவெளியில் தெரிவிக்கப்படுதலும் ஆகிய கூறுகளைக் கொண்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்திடும் வகையில், ஒட்டுமொத்த பொறுப்பினை (இணக்க அலுவலர்) மேற்கொள்ள ஒரு மூத்த நிர்வாகக் குழு உறுப்பினரைப் பணி அமர்த்துதல்*

*ஒரு நிறுவனத்தின் மனித வளம் மற்றும் ஒழுங்குமுறைக் கொள்கையுடன், இணக்கக் கொள்கை இணைக்கப்பட்டிருந்தால் அக் கொள்கையின் செயல்திறன் மேம்படுத்தப்படும். இணக்கச்*

சிக்கல்களின் தீவிரத்தை நன்குணர, இது ஊழியர்களைத் தூண்டும். தவிர வணிகப் போட்டி ஆணையத்தைப் பொறுத்த வரை, இணக்கத்திற்கான நிருவாகத்தின் தீவிரத்தை இது பிரதிபலிக்கும்.

பல்வேறு அளவுகளிலான, வணிகச் சட்ட மீறல்களைக் கையாளும் போது, அவற்றுள் மிகக் கடுமையான விதி மீறல்களில் ஈடுபடுவோரைத் தண்டித்திட, தயவு தட்சண்யமின்று பதவியிலிருந்து நிரந்தரமாக விலக்கி வைத்திடுதற்கான போதுமான அதிகாரத்தை உரிய அதிகாரிகளுக்கு அதிகரிப்பதன் மூலம், அத்தகைய விதி மீறல்களைப் பெருமளவு கட்டுப்படுத்த முடியும்.

தற்போதிருந்து வரும் வணிக இணக்க விதி மீறல்களையும் தாங்கள் அறிந்திருக்கவில்லை என்பதனை, ஊழியர்கள் உறுதிப்படுத்திட, ஒரு படிவத்தில் கையெழுத்திட அவர்கள் தவறாமல் கோரப்படும் பொருட்டு, தற்போது இருந்துவரும் ஊழியர்களின் / பணியாளர்களின் மதிப்பீட்டு நடைமுறைகளுக்குள்ளும் வணிகப் போட்டி இணக்கம் உருவாக்கப்பட முடியும். ஆரம்ப கட்டத்தில் இருக்கக்கூடிய வணிகப் போட்டிக்கு எதிரான எந்த ஒரு நடைமுறையையும் கண்டறிய இது உதவிடும்.

கணக்கியல் மற்றும் வரி நோக்கங்களுக்கான நிதித் தகவலைத் தக்க வைத்துக் கொள்ள பெரும்பாலான தொழில் முனைவகங்கள் / நிறுவனங்கள் ஒரு கொள்கையைக் கொண்டுள்ளன. சட்ட விதி மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் எழுந்தால், பாதுகாத்துக் கொள்ள முடியாத சங்கடத்தைத் தவிர்த்திட, நிறுவனமும், அதன் ஊழியர்களும், வணிகப் போட்டி சட்ட விதிமுறைகளைப் பின்பற்றி வருவதனை மெய்ப்பித்திடுதற்கான பொருத்தமான ஆவணங்கள் போதுமான காலத்திற்குத் தக்கவைத்துக் கொள்ளப்பட வேண்டியிருக்கும்.

ஒரு நிறுவனத்தின் மனித வளம் மற்றும் ஒழுங்குமுறைக் கொள்கையுடன், இணக்கக் கொள்கை இணைக்கப்பட்டிருந்தால் அக் கொள்கையின் செயல்திறம் மேம்படுத்தப்படும்.

***வினா 9: வணிகப் போட்டி இணக்கத் திட்டத்தில் பயிற்சியின் பங்கு என்ன?***

**விடை**: பெருநிறுவன இணக்கங்களில், நிபுணத்துவமும் அனுபவமும் கொண்ட அறிவுத்திறன் மிக்க தொழில்முறை சார்ந்தவர்களின் அறிவுறுத்தலை உள்ளடக்கிய ஒரு தீவிரப் பயிற்சித் திட்டத்தை இது கொண்டுள்ளது என்பதனை ஒரு நிறுவனம் கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு பயிற்சி என்பது, இயன்றவரையில், நடைமுறைக்கு ஏற்புடையதாக உள்ள, ஒரு நிறுவனத்தின் உண்மையான அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட எடுத்துக்காட்டாக அமைந்துள்ள ஆய்வுகள் உள்ளிட்ட அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அது, சட்ட விதி மீறல்களின் விளைவுகளையும் வலியுறுத்த வேண்டும்.

அனைத்து அலுவலர்கள் / அதிகாரிகள் தங்கள் வணிகத்துடன் தொடர்புள்ள சட்டத்தினை மீறும் செயல்பாட்டினை அடையாளங் காணுதற்கான திறன்களை வளர்த்துக் கொள்ளச் செய்வதே அதன் நோக்கமாகும். இணக்கக் கல்வியினுள், போதுமான நடைமுறைக்கு உகந்த விளக்கம் / கடினமான சட்டக் கருத்துகள் மற்றும் சிக்கல்கள் மீதான எடுத்துக்காட்டுகள் அடங்கியிருக்க வேண்டும். எனவே, நிறுவனத்தின் ஒட்டுமொத்த பயிற்சி மற்றும் கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாக, இணக்கக் கல்வியினை நிறுவனங்கள் ஒருங்கிணைப்பது உசிதமானதாகும். நிறுவனத்தின் சட்ட இணக்கக் கொள்கை, திட்டத்தின் நோக்கம் மற்றும் இணக்க நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பொறுத்தவரை, அனைத்து அதிகாரிகளுக்கும் / அலுவலர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும், சட்ட இணக்கக் கல்வியினைக் கட்டாயமாக்குவதற்கு, இணக்கத் திட்டத்தினை முதன்முறையாக அறிமுகப்படுத்துவது ஒரு நிறுவனத்திற்கு உசிதமானதாகும்.

- வணிகச் சூழலில் மாற்றங்கள்
- சந்தையில் பங்கு
- தொடர்புடைய சந்தையில் வணிகப் போட்டி
- போட்டி சட்ட அதிகார வரம்பு மாற்றங்கள்

ஆகியனவற்றைக் கருத்திற் கொண்டு, வணிகப் போட்டி இணக்கத் திட்டத்தைத் திறம்பட இயக்கி செயல்படுத்துகின்ற அந்த நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டும் திரும்பத் திரும்ப செய்வதனையே செய்து கொண்டிருப்பதை விட்டு விட்டு நிரலை முறையாகத் திருத்த வேண்டும்.

***புலனாய்வுகளுக்காக ஊழியர்களைத் தயார் படுத்துதல்***

*ஒரு விசாரணையை எதிர்கொள்ளும் பொழுது, புலன் ஆய்வாளர்கள், பணிக்குப் பொறுப்பானவர்களுடன் இணைந்து செயல்புரிவார்கள். இருப்பினும், ஊழியர்கள், பொதுவாக அப்படிப்பட்ட விசாரணைகளின் சாத்தியக் கூறினை அறிந்து வைத்திருத்தல் வேண்டும். மேலும் விசாரணை முகவாண்மைக்கு இயலக் கூடிய அனைத்து ஒத்துழைப்பினையும் அளித்திட வேண்டும்.*

***இடர் வாய்ப்பிலுள்ள பணியாளர்களையும் பிரிவுகளையும் (கோட்டங்களையும்) கண்டறிதல்***

*போட்டிச் சட்ட இடர் வாய்ப்புகளுக்கு ஆளாகக்கூடிய ஊழியர்களையும், பிரிவுகளையும் (கோட்டங்களையும்) அடையாளம் காண வேண்டியது அவசியம். இவை பொதுவாக பின்வருமாறு இருந்திடக் கூடும். அவையாவன:*

- *விற்பனை மற்றும் சந்தைப்படுத்ததலைச் செய்வோர்*
- *போட்டியாளர்களுடன் நேரடித் தொடர்பு வைத்திருப்போர்*
- *நிறுவுவதிலும் அல்லது அமைத்தலிலும் மற்றும் வழங்குதல் ஏற்பாடுகளின் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளோர்*
- *கூட்டுகளைக் கையாளும் வினைமுறைத் திறங்கள்*
- *போட்டி இணக்கத் திட்டத்தை ஊழியர்கள் கடுமையாகப் பின்பற்றிட மூத்த நிர்வாகத்தினரின் ஈடுபாடு அவசியம்*

***இரகசியத் தன்மை***

*இரகசியத் தன்மை காக்கப்படும் என்ற உறுதி வழங்கப்படாதவரை, ஊழியர்கள், குறிப்பாக, தமக்குத் தெரிந்தவர்கள் சட்ட விதி மீறல்களில் ஈடுபட்டிருந்தால், அதனைப் பற்றித் தெரிவித்திட முன்வராமல் போகலாம். முதல் நிகழ்வில், வாய்மொழியாகத் தெரிவித்திட, இணக்க அதிகாரியுடன் தொடர்பு கொள்வது, இரகசியம் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கையை விதைக்க உதவும். கூறப்பட்ட பிரச்னை புறந்தள்ளப்பட்டிருக்கவில்லையென்பதனை அல்லது அமைதியாகஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதனை உறுதி செய்திடும் பொருட்டு, ஆவணப்படுத்துதல் பின்தொடரப்பட வேண்டும்; (அதுபோன்றே) நடவடிக்கை எடுக்கப்பட்ட அறிக்கையும் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.*

***வினா 10: செயல்திறமுடைய இடர்வாய்ப்பு மேலாண்மையாவது யாது? இணக்கச் செயல்பாட்டில் அதன் அணுகுகை ஏன் முக்கியமானதாக உள்ளது?***

***விடை**: இணக்கத்திட்டம் ஒரு தொழில் முனைவகத்திற்கு / நிறுவனத்தற்கு விதி மீறல்களைத் தவிர்ப்பது / விதி மீறல்களின் இடர் வாய்ப்புகளைக் குறைப்பது என்பதோடு விதிகள் பின்பற்றப்படாததின் விளைவுகளைக் குறைப்பது என்பதனையும் நோக்கமாகக் கொண்டதாகும்.*

*இவ்வாறிருப்பினும் சட்டம் உருவாகும்போது, நடைமுறைகளும், ஒழுங்குமுறைகளும் தொடர்ந்து நெறிப்படுத்தப்படுகின்றன. மேலும், சிக்கல்கள் குறித்த பார்வைகளும் / கருத்துக்களும் கண்ணோட்டமும் மாறுகின்றன. இணக்கத் திட்டத்தின் வழியாக இடர் மேலாண்மை நோக்கிய ஒரு நிலையான கொள்கை பயன்தராது! (மாறாக) இது ஓர் எதிர்வினையாற்றக் கூடியதாகக் கூட ஒரு நிலையைத் தோற்றுவிக்கலாம். மாறுதலுடன் கூடிய ஆற்றல்மிகு சூழலுக்கு தீவிர ஓர் இடர் மேலாண்மை தேவை. நேற்று வணிகப் போட்டிச் சட்டத்திற்குப் பொருத்தமாக இருந்தது இன்று பொருத்தமற்றதாக அறிவிக்கப்படலாம். அல்லது, நடத்தை (ஒன்றின்)யின் கீழ் இன்று பொருத்தமானவை என்று கருதப்படும் நிலைமைகள், நாளை(யே) வெவ்வேறான நிலைமைகளில் பொருத்தமற்றவயாகப் போய்விடலாம். எனவே (தான்) ஆற்றல் வாய்ந்த / செயல்திறமுடைய மேலாண்மை கோரப்படுகிறது. ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை, இது மற்ற எதனையும் விட முக்கியமானதாகும்.*

**ஒப்பந்தங்களின் நேர்வில் முனைப்பான / செயல்திறம் மிக்க இடர் மேலாண்மை**

- *நிறுவனத்தால் கையொப்பமிடப்பட்டதும் வணிகப் போட்டி இணக்கத் தன்மைக்கானதுமான அனைத்து ஒப்பந்தங்களையும் பதிவு செய்து வைதிருப்பதென்பது முக்கியமானதாகும். ஆணையத்தால், வணிகப்போட்டி சட்டத்தின் விதி முறைகள் மீறப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ள ஓர் ஒப்பந்தத்திலிருந்து ஏற்படக்கூடிய இடர் வாய்ப்பானது ஒரு தொழில் முனைவகத்தின் / ஒரு நிறுவனத்திற்கு மிகவும் பாதிப்பினை ஏற்படுத்துவதாக இருக்கலாம்.*

- *வணிகப்போட்டி கோணத்தலிருந்து, ஒப்பந்தத்தின் தகுநிலையை மறு ஆய்வு செய்திட கால அட்டவணை ஒன்று இருத்தல் வேண்டும். இதனைப்பற்றி தொடர்புடைய அதிகாரியிடம் நினைவூட்டிட ஓர் அமைப்பு இருக்க வேண்டும். வர்த்தகப் பிரிவின் ஒரு மூத்த அதிகாரியிடம் இந்தப் பொறுப்பினை ஒப்படைக்கலாம், ஏனெனில், வர்த்தக் பிரிவினால் இவ்விடர் வாய்ப்பு / ஆபத்து அதிகம் உணரப்படுகிறது.*

- *சந்தைப்படுத்துதல் / விற்பனை / கொள்முதல் துறை, சட்டத்துறையுடன் இணைந்து செயல்பட வேண்டும். பதிவேட்டில் உள்ள ஒவ்வொரு ஒப்பந்தமும் மூன்றாண்டுகளிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வணிகப்போட்டி மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். மிகப்பெரிய நிறுவனங்களுக்கு அப்படிப்பட்ட மறு ஆய்வு ஆண்டு அடிப்படையில் இருக்க முடியும்.*

- *அப்படிப்பட்ட முனைப்பான / செயல்திறம் மிக்க இடர் மேலாண்மை உள்-நிறுவனத்தில் சாத்தியமில்லாதபோது, தனித்தேர்ச்சி பெற்ற, வெளி முகவாண்மைகளின் (நிறுவனங்களின்) உதவி கோரப்பட வேண்டும்.*

*விளைவு மிக்க போட்டி இணக்கத் திட்டம் தணிக்கை முறை ஒன்றினையும் கொண்டதாக இருக்கலாம். போட்டி இணக்கத் திட்டத்தின் தொடக்கக் காலத்தில் மின்னஞ்சல் உள்ளிட்ட நடைமுறைகள் மற்றும் ஆவணங்களின் ஓர் உள்ளகத் தணிக்கை அறிமுகப்படுத்தப்படலாம். கொள்கை செயல்படுகிறதா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ள கால இடைவெளிகளில் திரும்பத் திரும்ப நிகழ்த்தப்படலாம். அத்தகை தணிக்கையின் தன்மை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தன்மைக்கு இணங்கியதாய் இருந்திட வேண்டும்.*

*ஒவ்வொரு ஊழியரின் நடைமுறைகள், ஆவணங்கள் மற்றும் மின்னஞ்சல்களைத் தணிக்கை செய்யும்போது அது மிக்க கடினமானதாக இருக்கலாம் என்னும் நிலையில், மிகவும் இடருக்கு ஆளாகக் கூடிய அத்தகைய தனியர்களை அடையாளம் காண்பதும், ஒரு குறிப்பிட்ட நாளில், அவர்களின் மின்னஞ்சல்களின் புகைப்படங்களைத் தணிக்கை செய்வது, எப்போதும் இயலக் கூடியதாக இருக்கும். தொடர்புடைய / ஊழியர்களுக்கு அவர்களது கணினி வழியான கடிதப் போக்குவரத்து / மின்னஞ்சல் தணிக்கை செய்யப்படும் போது ஏற்படக்கூடிய நெருடலினைத் தவிர்ப்பதற்கு, வெளிப்புறத்தேயுள்ள சட்ட ஆலோசர்களை, இதுபோன்ற தணிக்கையினை மேற்கொள்ள பணியமர்த்திக் கொள்ள முடியும்.*

***வினா** 11: **வணிகப் போட்டி இணக்கத் திட்டத்தை மதிப்பீடு செய்வதும் மறு ஆய்வு செய்வதும் இன்றியமைதாதது தானா? (அவசியந்தானா?)***

**விடை**: *போட்டி இணக்கத் திட்டம், தற்போதைய (நடப்பில் இருந்து வரும்) மிகச் சிறந்த நடைமுறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்பதனையும் பொருத்தமாக விளங்குவதுடன் விரிவானதும் பயன்தரத்தக்கதாகவும் இருந்து வருவதனையும் உறுதிப்படுத்த தொழில் முனைவகங்கள் / நிறுவனங்கள் அறிவுறுத்தப்படுகின்றன. அதனைப் பொருத்தமுடையதாக வைத்திருக்க அவ்விணக்கத் திட்டத்தின் காலமுறையான மதிப்பீடு அறிவுறுத்தப்படுகிறது. இச்செயல்முறை (திட்டம் தொடர்பான) சட்டம், கொள்கை மற்றும் நடைமுறைகள் பற்றிய தனித்தனியான ஊழியர்களின் அறிவுத்திறன் மதிப்பீட்டை உள்ளடக்கியதாக இருக்கலாம். போட்டி இணக்கக் கொள்கையினைப்*

*பின்பற்றுவது என்பதானது தனியரின் / துறையின் / துறைப் பிரிவின் செயலாக்க மதிப்பீட்டிற்கான அளவுகோல்களில் ஒன்றாகக் கூடப் பயன்படுத்த முடியும். மதிப்பீட்டுச் செயல்முறை, இயன்றளவு வெளிப்படைத் தன்மை கொண்டு திறந்த நிலையில் இருந்து வருவதனை உறுதி செய்ய வேண்டியது முக்கியமானதாகும். வணிகப்போட்டி இணக்கத் திட்டம் எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படத்தியுள்ளனவா என்பதனையும் இம்மதிப்பீடு கொண்டதாக இருக்க வேண்டும். மதிப்பீட்டுக் கண்டுபிடிப்புகள், இணக்கக் கண்காணிப்பு, கல்வித் திட்டங்கள், இணக்கக் கையேடு உள்ளிட்ட ஒட்டுமொத்த இயங்குமுறை அமைப்பில் பொருத்தமான வகையில் பிரதிபலிக்கப்பட வேண்டும்.*

*வணிகப்போட்டி இணக்கத் திட்டத்தின் செயல்பாட்டினை மதிப்பீடு செய்வது, இணக்கத்திற்கான தூண்டுதல், தலைமைத்துவத்தின் உந்துதல், அதிகாரம் மற்றும் பொறுப்பினைப் பகிர்ந்தளிததல், மனிதவள மற்றம் உண்மையான வள ஆதாரங்களின் ஆதரவு மற்றும் நிறுவனத்துள் (தகவல்) தொடர்பு ஆகியவற்றைச் சார்ந்தது என்பதனை வலியுறுத்துவது தகுதிமிக்கதாகும். எனவே, தொழில் முனைவகங்கள் / நிறுவனங்கள் அவற்றின் இணக்கக் கொள்கைக்கு ஏற்புடைய வகையில், மதிப்பீட்டு அளவுகோள்களை அமைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றன.*

***வினா 12: வணிகப் போட்டி இணக்கத் திட்ட மதிப்பீடு செய்வதற்கான செயலாக்கக் குறியீடுகள் யாவை?***

***விடை**: வணிகப் போட்டி இணக்கத் திட்டத்தினை மதிப்பீடு செய்திட, செயலாக்கக் குறியீடுகளை உருவாக்குவதனையும் தொழில் முனைவகங்கள் / நிறுவனங்கள் கருதிப் பார்க்கலாம்.*

*செயலாக்கக் குறியீடுகளின் விளக்கப்பட்டியல் வருமாறு:*

- *இணக்கம் குறித்து தலைமை நிர்வாகியின் உறுதிப்பாட்டினையும் உள்ளார்ந்த ஈடுபாட்டினையும் (அர்ப்பணிப்பினையும்) அனைத்து அலுவலர்களும் அனைத்து ஊழியர்களும் எவ்வளவு நன்றாக அறிந்திருக்கிறார்கள்?*
- *எந்தவிதமான நடத்தை வணிகப் போட்டிச் சட்டத்தை மீறுகிறது என்பதனைக் குறித்து அலுவலர்களும் ஊழியர்களும் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார்களா?*
- *சட்ட மீறல்களைத் தடுப்பதற்கான, "செய்ய வேண்டியவை; செய்யக் கூடாதவை" ஆகியவற்றை அதிகாரிகளும், ஊழியர்களும் முறையாக ஏற்றுக் கொள்கிறார்களா?*
- *இணக்கப் பொறுப்புடைமை நிர்வாகத்தின் அனைத்து மட்டங்களிலும் துல்லியமக உணரப்படுகிறதா?*
- *தொழில் முனைவகத்தின் / நிறுவனத்தின் வணிக நடைமுறைகள், வணிகப் போட்டி சட்டத்தின் விதி முறைககளுக்கும் அவை தொடர்பான வேறுபிற ஒழுங்குமுறை நெறிகளுக்கும் எந்த அளவு இணக்கமாக உள்ளது? ஒரே மாதிரியான வணிகச் செயல்பாடுகளை மேற்கொண்டு வரும் பிற நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது, நிறுவனத்தின் இணக்க நிலை எவ்வாற உயர்ந்ததாகும்?*
- *எத்தனை விதி மீறல்கள் நிகழ்ந்தன? அவை எத்துணை தீவிரமானவை?*
- *எத்தனை முறை திரும்பத் திரும்ப உள்ளகக் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது? மேலும், அத்தகைய கண்காணிப்பு, சட்ட விதி மீறல்களைத் தடுப்பதிலும் அவற்றைக் கண்டறிதலிலும் பயன்தரக்தக்க வல்லதாய் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா?*
- *இணக்கக் கல்வி, யாருக்கு எந்த அளவிற்கு வழங்கப்படுகிறது?*
- *கல்வித் திட்டங்கள் எந்த அளவிற்குப் பயன்தரத்தக்கதாக இருக்கின்றன?*

***வினா 13: வர்த்தக (வணிகச்) சங்கங்களுடன் தொடர்பு கொள்ளும் போது, நிர்வாகிகள் / ஊழியர்கள் எவ்வெவற்றில் கவனம் செலுத்த வேண்டும்?***

***விடை**: நிறுவனங்களின் நிர்வாகிகள் / ஊழியர்கள் வர்த்தக சங்கங்கள் மற்றும் / அல்லது போட்டியார்களுடன் தொடர்பு கொள்ளும்போது, பின்வரும் தலைப்புகள் பற்றி விவாதிப்பதனைத் தவிர்த்திட வேண்டும்.*

- *கடந்த கால, தற்கால அல்லது எதிர்கால விலைகள் குறித்து.*
- *எது ஒரு 'நியாயமான லாப அளவினை' உருவாக்குகிறது?*

- *விலைக் கொள்கை மற்றும் தனித்தனியான நிறுவனங்களின் உண்மையான செலவுகள்*
- *விலைகளில் சாத்தியமான ஏற்ற இறக்கங்கள்*
- *விலைகளின் தரப்படுத்துதல் அல்லது நிலைப்படுத்துதல்*
- *திட்டங்களுக்கான ஏலத் தொகைகள்*
- *வஞ்சகக் கூட்டுடன் ஏலங்களில் பங்குபெறுவது (ஏல மோசடி)*
- *கடன் மற்றும் வர்த்தக விதிமுறைகளைத் தரப்படுத்துதல்*
- *உற்பத்திக் கட்டுப்பாடு*
- *மேற்கண்ட காரணங்களால் வியாபாரம் செய்ய அல்லது வியாபாரம் செய்யாமலிருக்க வாடிக்கையாளர்களைத் தெரிவு செய்தல்.*
- *சந்தையில் விநியோகத்தைக் கட்டுப்படுத்துதல்.*

**வினா** *14:* **போட்டி இணக்க அலுவலரின் பங்காவது யாது**?

**விடை**: *போட்டி இணக்கத் திட்டத்தின் செயல்திறனை உறுதி செய்வதற்காக, இணக்கச் சட்டத்தினை அமல்படுத்திட அதிகாரப் பகிர்வுடன் கூடிய ஓர் இணக்க அலுவலரை நியமிப்பது விரும்பத்தக்கதாகும்.*

- *போட்டி இணக்க அலுவலர், நிபுணத்துவத்துடன் கூடிய, இணக்க மற்றும் இணக்க மேலாண்மையிலும் அடிப்படையான தகுதியும் உடைய தற்சார்புத் தன்மையுடன் இயங்கும் தொழில்முறை அலுவலராய் இருப்பது, முன்னுரிமை அடிப்படையில் அவசியமாகிறது.*
- *அவர் ஒரு குவிமையப் புள்ளியாக விளங்குதல் அவசியம். அத்துடன், ஒரு திட்டத்தினை வடிவமைத்தல், அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை ஊக்குவித்தல், இணைந்து வரும் எந்த ஒரு நிர்வாகத்தின் / நிறுவனத்தின் சிக்கலினைச் சமாளித்தல், இணக்கக் கையேடுகளைத் தயாரித்தல், கணக்குத் தணிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள தடைகளை நீக்குதல் ஆகிய பணிகள் சார்ந்த பொறுப்புகளை ஏற்றிடும் வல்லவராகவும் அவர் இருக்க வேண்டும்.*

***வினா 15: இணக்கக் கையேடு எவ்வாறு முக்கியமானதாகும்?***

**விடை**: *இணக்கத்தினை எளிதாக்கிட, நிறுவனங்கள், வணிகப் போட்டி சட்டத்தின் விதித்துறைகளுடனமைந்த ஓர் இணக்கக் கையேட்டை உருவாக்கி அதனை விரிவான வழிகாட்டுக் குறிப்புகளாக, தங்கள் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கிட வேண்டும்:*

- *கையேட்டில் மேலே குறிப்பிட்டுள்ள கூறுகளை இணைத்து, அதன் வணிகம் (வணிகங்கள்) அதன் இயங்குமுறைச் சூழல் மற்றும் தொடர்புடைய போட்டிஆட்சிமுறை குறித்த புதுபபித்தத் தகவலினைக் கொண்டிருக்க வேண்டும்.*
- *கையேடு முழுமையானதும், பொருத்தமானதும் சரியானதுமான தகவலை உட்புகுத்தி முறையாக வழங்கப்பட வேண்டியது அவசியம்.*
- *இணக்க அலுவலரின் ஒட்டுமொத்த மேற்பார்வையின் கீழ் போட்டி இணக்கக் கையேடு உருவாக்கப்பட்டு, செயல்படுத்த விநியோகிக்கப்பட வேண்டும்.*
- *இணக்கக் கையேடு தொடர்பான துணை அதிகாரிகள் / அலுவலர்களின் கருத்து உட்பட, இணக்கத் தன்மையைக் கொண்டிருக்கக் கூடிய வணிகச் சூழல் மற்றும் சந்தைப் பின்னணியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால், இணக்க அலுவலருக்கு அறிவிக்க, துறைகளின் / பிரிவுகளின் (கோட்டங்களின்) பொறுப்பாளர்கள் கட்டுப்பாடுடையவர்களாக ஆக்கப்பட வேண்டும்.*

- இணக்கத் திட்டத்தை மேற்பார்வையிடும் இறுதிப் பொறுப்புடன், அதன் செயல் தன்மை அவ்வப்போது கண்காணிப்பு செய்வது உள்ளிட்ட, மூத்த நிருவாகத்தினைக் கொண்டுள்ள ஓர் இணக்கக் குழுவினை அமைத்திட நிறுவனங்கள் அறிவுறுத்தப்படுகின்றன.

**குறிப்பு**: ஆணையம் ஒரு 'நிறுவனங்களுக்கான இணக்க கையேடு' ஒன்றை வெளியிட்டுள்ளது, இது வணிக நிறுவனங்களால் அவர்களின் உள் செயல்முறைகளை போட்டிச் சட்டத்தின் தேவைகளுடன் சீரமைக்கப் பயன்படுத்தலாம். இதை ஆணையத்தின் வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் www.cci.gov.in.

**வணிகப் போட்டி இணக்கத் திட்டம்**

***சரிபார்ப்புப் பட்டியல்***

- தனிக் கூறுகளின் எண்ணிக்கை ஒத்திருந்தாலும் போட்டி இணக்கத்திட்டம் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஏற்றதாக உருவாக்கபட வேண்டும்.
- இணக்க அதிகாரி: இணக்கத் திட்டத்தைச் செயல்படுத்திடவும், கண்காணிப்பு செய்யவும் ஒரு மூத்த நிர்வாகப் பணியாளரை அடையாளங் காண்க.
- சட்டக் கருத்துகள் குறித்த ஒழுங்குமுறையானதும் போதிய அளவிலான பயிற்சியும் அதுபோன்றே வலிமை வாய்ந்த சட்டமீறல்களை அடையாளம் கண்டறிதல்
- பொதுவாக ஊழியர்கள் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு விரிவான இணக்கக் கையேட்டினை வைத்திருங்கள். பயனுள்ள எடுத்துக்காட்டுகள் அதில் இருக்க வேண்டும்.
- சட்ட விதிமுறைகளை மீறும் அச்சத்தின் காரணமாக ஊழியர்களால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து ஐயப்படக் கூடிய சூழ்நிலைகளுக்கான (அனுமதி) தீர்வு நடைமுறை அல்லது ஒரு வழிகாட்டுதலை நிறுவனம் ஒவ்வொன்றும் பெற்றிருத்தல் வேண்டும்.
- 2002ம் ஆண்டு வணிகப் போட்டி சட்டத்தின் விதிமுறைகள், அதிலுள்ள விதிமுறைகளுக்கு இசைவானதாக இருப்பதை உறுதி செய்திட ஒப்பந்தங்கள் சட்டத்துறையுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு மாற்றமின்றி செயலாக்கப்பட வேண்டும். வணிகப்போட்டி கோணத்தில், இவை அவ்வப்போது, மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.
- பணியாளர்கள் / ஊழியர்கள், தாங்கள் வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தொடர்பு கொள்ளவேண்டிய தருணங்களில், அவர் தம் மொழியினைப் பயன்படுத்துவது (மொழிப் பயன்பாடு) குறித்துக் கற்பிக்கப்பட வேண்டும்.
- மின்னஞ்சல் தகவல் தொடர்பினில் பயன்பத்தப்படும் மொழி பொருத்தமானது என்பதனை உறுதிப்படுத்திட தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.
- நிறுவனத்தால் அல்லது அதன் ஊழியர்களால், நம்பிக்கைக்கு எதிரான நடைமுறைகளில் பங்கேற்கவில்லை என்பதற்கான சான்றாகப் பயன்படுத்தக் கூடிய ஒரு சரியான பதிவு முறையினை / கூட்ட நடவடிக்கைகள் மற்றும் பிற நிகழ்வுகளுக்கான குறிப்புகளைப் பதிவு செய்தலினை உறுதி செய்தல்.
- நிறுவனம் செயல்படும் அனைத்து நாடுகளிலுமுள்ள சூழ்நிலைக்கு ஏற்றதாக வணிகப் போட்டி இணக்கத் திட்டம் இருக்க வேண்டும்.
- தீவிரமான / ஆற்றல்மிக்க இடர் (வாய்ப்பு) மேலாண்மைத் திட்டம், போட்டி இணக்கத் திட்டத்தின் ஓர் இன்றியமையாத கூறாக இருக்க வேண்டும்.
- நிறுவனத்தின் ஒட்டுமொத்த இணக்கத் திட்டங்களுள் வணிகப் போட்டி இணக்கத் திட்டத்தினை ஒருங்கிணைப்பது அறிவுடைமையாகும்.

## *தகவலினை அதிகாரப்பூர்வமாக எவ்வாறு பதிவு செய்வது?*

## *தகவலினை அதிகாரப்பூர்வமாக எவ்வாறு பதிவு செய்வது?*

***தகவலினை எவ்வாறு அதிகாரப் பூர்வமாகப் தாக்கல் செய்வது? தகவலினை யார் பதிவு செய்ய/தாக்கல் செய்ய முடியும்?***

- *வணிகப் போட்டி ஆணையத்துக்கு முன்பாக, எந்த ஒருவரும் நுகர்வோரும் அல்லது அவரது / அவர்களது சங்கமும் அல்லது வர்த்தகச் சங்கமும் தகவலினைப் தாக்கல் செய்ய முடியும். விசாரணை செய்வதற்காக, போட்டி வணிக ஆணையத்துக்கு, மைய அரசோ, மாநில அரசோ ஓர் சட்டப்பூர்வான ஆணைக்குழுவோ ஒரு குறிப்பினை வழங்க முடியும். "தனியர்" எனும் சொல், ஒரு தனி மனிதர், பிரிக்கப்படாத இந்துக் குடும்ப நிறுவனம், (பிற) நிறுவனம், உள்ளூர் நிர்வாகம், கூட்டுறவு அல்லது யாதொரு செயற்கையான நீதித்துறை மனிதர் (?) ஆகியோரை உள்ளடக்குகிறது.*

***தகவலினைப் பதிவு செய்யக்கூடிவை (தாக்கல் செய்யக்கூடியவை) குறித்தான சிக்கல்கள் யாவை?***

- *இந்தியாவிலுள்ள சந்தைகளில், வணிகப் போட்டி மீதான ஒரு கவனிக்கத்தக்க எதிர் விளைவினை உண்டாக்குகிற அல்லது உண்டாக்குவதுபோல் அமைந்துள்ள வணிகப்போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்கள் மற்றும் மேலாதிக்க நிலையின் தவறான பயன்பாடு அல்லது இரண்டும் இணைந்த வகையிலான சிக்கல்கள் மீது, தகவல் பதிவு செய்ய முடியும். (தாக்கல் செய்ய முடியும்).*

***போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்களின் மீதான, 2002 ஆம் ஆண்டு வணிகப் போட்டிச் சட்டத் (திருத்தப் பெற்றுள்ளவாறு) (சட்டம்) தின் குறிப்பிட் விதித்துறைகள் யாவை?***

- *இந்தியாவிற்குள், வணிகப் போட்டி மீதான, ஒரு கவனிக்கத்தக்க எதிர் விளைவினை உண்டாக்குகிற அல்லது உண்டாக்குவது போலமைந்துள்ள, உற்பத்தி, விநியோகம், சரக்கு வைப்பு முறை கையகப்படுத்துதல் அல்லது சரக்குக் கட்டுப்பாடு, சேவை வழங்கர் தொடர்பான எந்த ஒப்பந்தத்தையும், வணிகப்போட்டி சட்டப்பிரிவு 3(1)ன் படி, எந்த ஒரு நிறுவனவோ, நிறுவனங்களின் சங்கங்களோ, தனி மனிதரோ, தனிமனிதர்களின் கழகமோ செய்து கொள்ளக் கூடாது.*

- *மேற்கண்ட சட்ட விதித்துறைகளை மீறும் வகையில் அமைந்துள்ள எந்த ஒப்பந்தமும் செல்லத்தக்கவல்லாததாக (செல்லாததாக) இருக்க வேண்டும். (சட்டப்பிரிவு3(2))*

- *வணிகப்போட்டி சட்டத்தின் பிரிவு 3 (உட்பிரிவு 3)ன்படி, வேறபாடற்ற அல்லது சேவகைளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள பொது ஆதாயக் குழு நோக்கிலான வணிகக்குழு உள்ளிட்ட நிறுவனங்களுக்கிடையே அல்லது நிறுவனங்ளின் சங்கங்களுக்கிடையே அல்லது தனி மனிதர்கள் அல்லது தனி மனிதர்களின் கழகங்களுக்கிடையே, அல்லது எந்தத் தனிமனிதன் மற்றும் நிறுவனங்களுக்கிடையே மேற்கொள்ளப்பட்டுவரும் நடைமுறை அல்லது எடுக்கப்பட்டுள்ள முடிவு சார்ந்த எந்த ஓர் ஒப்பந்தமும் பின்பருவனவற்றைக் கொணடிருக்கிறது.*

    - *கொள்முதல் விலையை அல்லது விற்பனை விலையை நேரிடையாகவோ, மறைமுகமாகவோ நிர்ணயிப்பது*

    - *உற்பத்தி (அல்லது தயாரிப்பு), வழங்கல், சந்தைகள், தொழில்நுட்ப வளர்ச்சி, முதலீடு அல்லது சேவைகள் வழங்கள் ஆகியவற்றை அளவுபடுத்துவது அல்லது ஒடுக்குவது*

    - *சந்தையின் புவியியல் பகுதி, அல்லது பொருள்களின் வகைகள் அல்லது சேவைகளின் வகைகள் அல்லது சந்தையிலுள்ள வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அல்லது வேறு ஏதேனும் ஒத்த வகையிலான ஒதுக்கீடு செய்யப்படுவதன் மூலம் சந்தை அல்லது உற்பத்தி ஆதாரம் அல்லது சேவைகள் வழங்கல் ஆகியவற்றை பகிர்ந்து கொள்வது.*

- *ஏலமோசடியினை அல்லது கூட்டுச் சதியுடன் கூடிய ஏலக் கேட்பினை, நேரடியாகவோ, மறைமுகமாகவோ விளைவிக்கும் செயல், வணிகக் போட்டியின் மீது கவனிக்கத்தக்க ஓர் எதிர்விளைவினைக் கொண்டிருப்பதாக அனுமானிக்கப்பட வேண்டும்.*

- *அ) நிபந்தனை கொள்முதல் / விற்பனை (ஒரு பொருளின் கொள்முதலை மற்றொரு பொருளின் விற்பனையுடன் கட்டாயமாக்குவது )*

  *ஆ) பிரத்தியேக வழங்கல் ஒப்பந்தம்*

  *இ) பிரத்தியேக பங்கீடு செய்தல் ஒப்பந்தம்*

  *ஈ) வணிகத்தில் பங்கேற்க மறுப்பு.*

  *உ) மறு விற்பனை விலை பராமரிப்பு*

  *உள்ளிட்ட, வணிகப்போட்டி சட்டத்தின் பிரிவு 3(4)-ன்படி உற்பத்தி, வழங்கல், விநியோகம், சேகரிப்பு, விற்பனை அல்லது வணிகப் பொருள்களின் விலை அல்லது சேவை வழங்குவதற்கான கட்டணம், பல்வேறு சந்கைளில், உற்பத்தி சங்கிலியின் வெவ்வேறு கட்டங்களில் அல்லது நிலைகளில்உள்ள நிறுவனங்கள் அல்லது தனிமனிதர்களிடையே எந்த ஒரு ஒப்பந்தமும் இந்தியப்போட்டியின் (வணிகப்போட்டியின்) மீதான ஒரு கவனிக்கத்தக்க எதிர்வினையை விளைவிப்பதாய் அல்லது விளைவிப்பது போலிருந்தால், சட்டப்பிரிவு(1)ற்கு முரண்பாடான ஓர் ஒப்பந்தமாக அனுமானிக்கப்பட வேண்டும்.*

- *சட்டப்பிரிவு(3)(5), வணிகப்போட்டி சட்டத்தின் பிரிவு 3-ற்கு, சில அறிவுசார் சொத்துரிமை தொடர்பான விதிவிலக்குகளை விவரிக்கிறது.*

***2002-ஆம் ஆண்டு வணிகப்போட்டி சட்டத்தில் ஆதிக்க நிலையைத் தவறாகப் பயன்படுத்துதல் மீதான, குறிப்பிடப்பட்ட விதித்துறைகள் யாவை?***

- *எந்தவொரு நிறுவனமும் குழுவும் ஆதிக்க நிலையை (மேலாதிக்க நிலையை)த்தவறாகப் பயன்படுத்தக்கூடாது.*

- *போட்டி வணிகச்சட்டம், பிரிவு 4(2)-ன் படி எந்தவொரு நிறுவனமும் அல்லது குழுமமும், தனது மேலாதிக்க நிலையைப் பயன்படுத்தி கீழ்க்காணும் முறைகேடுகளில் ஈடுபடக்கூடாது.*

  *(1). எந்தவொரு நிறுவனமும் குழுமமும்*

  (i) *சரக்குக் கொள்முதல் அல்லது விற்றுமுதல் அல்லது சேவைகளில்; அல்லது*

  (ii) *சரக்குக் கொள்முதல் விலையில் அல்லது விற்று முதலில் (சூறையாடும் விலை உட்பட) அல்லது சேவைகளில்*

  *நேரிடையாகவோ, மறைமுகமாகவோ நியாயமற்ற அல்லது பாகுபாட்டைத் திணித்தல்*

  *(2). பொருள்கள் தயாரிப்பு/உற்பத்தி அல்லது சேவைகள் வழங்குதல் அல்லது அதற்கான சந்தை; அல்லது நுகர்வோருக்கு, சரக்குகள அல்லது சேவைகள்; தொடர்பான தொழில்நுட்பம் அல்லது; அறிவியல் முன்னேற்றங்களைத் அளவுபடுத்துவது அல்லது கட்டுப்படுத்துவது; அல்லது*

*(3). எந்தவிதத்திலும் சந்தை அனுகுகையின் மறுப்பினை விளைவிக்கின்ற நடைமுறையில் அல்லது நடைமுறைகளில் ஈடுபடல்; அல்லது*

*(4). ஒப்பந்தம் தொடர்பான சேவைகளைத் தவிர, ஒப்பந்தக்காரர்களின் பிற வணிக நோக்கிலான ஒப்பந்தங்களுக்குத் தொடர்பில்லாத வேண்டுகோள்களுக்கு இணங்கி ஒப்பந்தங்களை முடிவு செய்தல்.*

*(5). ஒரு சந்தையில் தனக்குள்ள மேலாதிக்கத்தைப் பணன்படுத்தி, பிற சந்தையில் நுழையவோ அல்லது பிறர் நுழைவதனைத் தடுத்தல்.*

***இந்திய வணிகப்போட்டி ஆணையத்தின் முன்பாக, தகவலினை எவ்வாறு தாக்கல் செய்வது?***

***சட்ட பூர்வமான உங்கள் பெயர் :***

- *உங்கள் முழுமையான அஞ்சல் முகவரியுடன், அஞ்சல் குறியீட்டு எண்(PIN) தொலைநகல் எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றைக் குறிப்பிடுக.*

- *ஆணயத்திடமிருந்து பதிலைப் பெறவிரும்பும் உங்கள் விருப்பமான சேவை முறையினைக்குறிப்பிடுக.*

- *ஆலோசகர் அல்லது பிற அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் சட்டபூர்வ பெயர் மற்றும் முகவரி ஏதேனும் இருந்தால் குறிப்பிடவும்.*

- *சட்டத்தின் விதிமுறைகளை மீறியதாகக் கூறப்படும் நிறுவனங்களின் சட்டப் பெயர் மற்றும் முகவரி (முகவர்கள்) குறிப்பிடவும்*

***தகவல் உரை:***

- *சட்டத்தின் விதிகளை மீறியதாகக் கூறப்படும் விவரங்களை உள்ளடக்கியதாக இத்தகவலானது உண்மைகளின் அறிக்கை வடிவத்தில் அமைந்திருக்க வேண்டும். கூறப்படும் விதிமுறைகள் ஒவ்வொன்றிற்கும் ஆதரவாக, நேர்வுக்கேற்ப, அனைத்து ஆவணங்கள், பிரமாணங்கள் மற்றும் ஆதாரம் ஆகியவற்றைப் பட்டியலிட்டு, ஒரு முழுமையான பட்டியலும் வழங்கப்படவேண்டும். பழிசுமத்தப்படும் விதிமீறல்களுக்கு ஆதரவான, செறிவான ஒரு சுருக்கக்கோவை உங்கள் வழக்கினை, விரைவாகவும் சரியான கண்ணோட்டத்திலும் ஆராய உதவிடும்.*

- *ஆணையத்திடமிருந்து நீங்கள் கோரக்கூடிய நிவாரணம் அல்லது இடைக்கால நிவாரணத்தைக் குறிப்பிடுக.*

- *ஆணையத்திடம் வழங்கப்படுமுன், தங்கள் தகவல், பின் இணைப்புகளுடனும் பிற இணைப்புகளுடனும் முழுமையாகவும், முறைவாகவும் சரிபார்க்கப்பட்டுள்ளது என்பதனை உறுதி செய்திடுக.*

- *தாக்கல் செய்யப்படும் தகவலானது, ஒரு தனியார் நிறுவனத்தின் ஒரு தனி உரிமையாளர் உள்ளிட்ட தனியார் ஒருவராலேயே அவர் ஆணாயிருப்பினும் பெண்ணாயிருப்பினும் கையொப்பமிடப்பட வேண்டும். அதாவது, பிரிக்கப்படாத ஓர் இந்துக் குடும்பமெனில், அதன் தலைவர், மேலாண் இயக்குநர் மற்றும் அவர் அல்லது அந்தப் பெண்மணி இல்லாத நிலையில், எந்த ஓர் இயக்குநரும், இயக்குநர்கள் குழுவால் முறையாக அங்கீகரிக்கப்பட்ட எந்த ஓர் உரிமையாளரும் கையெழுத்திட வேண்டும். வழக்கறிஞர் ஒருவர் மூலம், செல்லுபடிகாகக்கூடிய "வக்காலத்து நாமா" ஒன்று தாக்கல் செய்யப்பட வேண்டும்.*

- *நேர்வினைப்பொறுத்து, தங்கள் வழக்கறிஞர் தாங்கள் அளிக்கின்ற தகவல் அல்லது குறிபுரைக்கு, உறுதி வழங்குவதாக அல்லது சான்று வழங்குவதாக தமது கையொப்பத்தனையும் இட்டு வைக்கலாம்.*

***உரிய நடவடிக்கையை மேற்கொள்ள யாரிடம் முறையிடுவது? தகவலை எங்கு தாக்கல் செய்வது?***

- *ஆணையத்திற்கு அனுப்ப வேண்டிய தகவல் அல்லது குறிப்பு அல்லது பதிலுரைகள், செயலாளருக்கு ஓர் ஆள் மூலமாக நேரிலோ, பதிவஞ்சல் மூலமாகவோ, தூதஞ்சல் மூலமாகவோ, அனுப்பிவைக்கப்படவேண்டும், அல்லது செயலாளருக்கோ, அவரால் அங்கீகரிகப்பட்ட அதிகாரிக்கோ, தொலை நகல் பரிமாற்றம் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*

- *எவ்வாறாயினும், நீங்கள் உங்கள் தகவலுக்கு அல்லது குறிப்புரைக்கு ஆதரவாகச் சார்ந்திருக்க விரும்பும், எந்தவொரு தனியான அல்லது கூடுதலான ஆவணம் அல்லது ஆவணங்களை, ஒரு "காகித அட்டை நூல்" வடிவத்தில் தொகுத்து அனுப்பிவைத்திடவேண்டும். அப்படிப்பட்ட சேவைக்கான, ஆவண ஆதாரத்துடன் செயல் நடவடிக்கைகளுக்கு, பிற தரப்பினரிடம் கூறப்பட்ட அப்படிப்பட்ட ஆவணங்களின் நகல்களை வழங்கிய பின்னர், சாதாரணக் கூட்டம் தொடங்குவதற்குக் குறைந்தது ஏழு நாட்கள் முன்னதாக, இந்த காகித அட்டை நூல் வடிவிலான நூலினைத் தாக்கல் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஆவணங்கள் தொடர் அல்லது வரிசையெண் வழங்கப்பட்டு பொருளடக்க அட்டவணை முகப்பனைக் கொண்டதாக இருக்க வேண்டும். அத்துடன், முறையானதொரு சரிபார்ப்பினைக் கொண்டதாகவும் அது அமைந்திடல் வேண்டும்.*

- *ஆணையத்திற்கு முன்பாகத் தாக்கல் செய்யப்படவேண்டிய அனைத்துத் தகவல் குறிப்புகள் அல்லது குறிப்புரைகள் அல்லது பிற ஆவனங்கள், A4 அளவிலான வெள்ளைப் பத்திரத்தாளில் ஒரே பக்கத்தில் ஏரியல் 12 எழுத்துக்களில் தட்டச்சு செய்யப்பட வேண்டும். (அதாவது, 210 ஒ 297 மில்லி மீட்டர் அல்லது 8.27" ஒ 11.69" ) இடக்கைப்புறத்தில், 2" விளிம்பிலான இரட்டை இடைவெளியில் மற்றும் பிற அனைத்துப் பக்கங்களிலும் 1" விளிம்புடன்.*

- *உண்மையான நகல்களாக முறையாகச் சான்றளிக்கப்பட்ட, தெளிவான புகைப்பட நகல்களும் அல்லது ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்களும் மட்டுமே வெளிப்பாடுகளாகவும் அல்லது இணைப்புகளாகவும் தாக்கல் செய்யப்படலாம்.*

***செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் யாவை?***

- *ஆணையத்திடம் தாங்கள் தாக்கல் செய்யும் தகவலானது கீழ்க்காணும் வண்ணம் அதற்குரிய கட்டணம் செலுத்தப்பட்டதற்கான சான்றுடன் இணைத்து தாக்கல் செய்யப்படவேண்டும்.*

- *தனியாராயிருந்தால் அல்லது பிரிக்கப்படாத இந்துக்குடும்பமெனில் ரூ.5,000/- (ஐந்தாயிரம் ரூபாய் மட்டும்)*

- *அரசுசாரா அமைப்பெனில் அல்லது நுகர்வோர் சங்கமெனில் அல்லது கூட்டுறவுச் சங்கமெனில் அல்லது அறக்கட்டளையெனில் கட்டணம் ரூ.10,000/- (பத்தாயிரம் ரூபாய் மட்டும்)*

- *நிறுவனங்களாயிருப்பின், அத்தகைய நிறுவனங்கள் கடந்த ஆண்டில், இரண்டு கோடிக்கு ரூபாய்க்கு மேல் ஐம்பது கோடி ரூபாய்வரையில் விற்று முதலைக் கொண்டிருந்திருக்க வேண்டும். அத்தகைய நிறுவனங்களுக்காக கட்டணம் ரூ.40,000/- (நாற்பதாயிரம் ரூபாய் மட்டும்).*

- *நிறுவனங்களாயிருப்பின், அத்தகைய நிறுவனங்கள் கடந்த ஆண்டில், ஐம்பது கோடி ரூபாய்க்கு மேல் விற்று முதலைக் கொண்டிருந்திருக்க வேண்டும். அத்தகைய நிறுவனங்களுக்காக கட்டணம் ரூ.1,00,000/- (ஒரு லட்சம் ரூபாய் மட்டும்). மேலும்*

- *மேற்கூறிய இரண்டு வகைப்பிரிவுகளிலும் வராத நிறுவனங்களுக்குக் கட்டணம் ரூ.50,000/- (ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும்).*

***கட்டணம் எவ்வாறு செலுத்துவது?***

*இக்கட்டணம், இந்திய வணிகப்போட்டி ஆணையம் (போட்டி நிதி) புதுதில்லி என்ற பெயரில் வங்கி வரைவோலையாகவோ, வங்கிப்பணவோலையாகவோ, வங்கிக் காசோலையாகவோ செலுத்தப்பட*

*முடியும்; அல்லது இந்திய வணிகப்போட்டி ஆணையம் (போட்டி நிதி) (வங்கிக்) கணக்கில் நேரடியாகச் செலுத்திடுமாறு, மின்னணு தீர்வுச் சேவை மூலம் அதனை நிகழ்த்திடமுடியும்.*

*பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு முறையில்.*

| |
|---|
| *புதுதில்லி - 110066, பிகாஜிகாமா பிலேஸ் பகுதியில் அமைந்துள்ள பஞ்சாப் நேஷனல் வங்கியிலுள்ள இந்திய வணிகப்போட்டி ஆணையக் கணக்கு எண்.1988002100187687 (ஐ.ஏப்.எஸ்.சி குறியீடு. PUNB0198800)* |

*அல்லது*

| |
|---|
| *புதுதில்லி - 110066, பிகாஜிகாமா பிலேஸ் யூனியன் இந்திய வங்கியிலுள்ள இந்திய வணிகப் போட்டி ஆணையம் (போட்டி நிதி) கணக்கு எண். 510131000002673 (ஐ.ஏப்.எஸ்.சி குறியீடு. UBIN0903736).* |

**உதவிக்கு**: *தங்களுக்கு ஏதேனும் ஐயமிருப்பின் அல்லது தங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்படின், ஆணையச் செயலகத்தினைத் தாங்கள் எப்போதும் அனுகிடலாம். ஆணையச் செயலாளர் எண். 20815009 (சர்வதேசக்குறியீடு +9111 தேசிய தொலைபேசி அணுகல் குறியீடு 011)*

**குறிப்பு:**

- *விசாரணை மற்றும் புலனாய்வுகள் தொடர்பான நடைமுறைகளின் விவரங்களுக்கு, தகவல்களைத் தாக்கல் செய்ய புதுப்பிக்கப்பட்ட ஆணையத்தின் பொது விதிமுறைகளை கூர்ந்து காண்க. (கூடவே இந்திய வணிகப்போட்டி ஆணையத்தின் வலைத்தளமான www.cci.gov.inனிலும் அதனைக் கானலாம்).*
- *வெவ்வேறு போட்டி எதிர்ப்பு நடைமுறைகள் தொடர்பான சட்ட விதித்துறைகள் குறித்து ஆதரவு தொடர் சிற்றேடுகளையும் ஆணையம் வெளியிட்டுள்ளது. இவற்றை ஆணைத்தின் இணைய (வலைத்தள) நுழைவாயிலிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அல்லது, அதன் அச்சிடப்பட்ட நகல்களை, இந்திய வணிகப் போட்டி ஆணையத்தின் உதவி (சேவை)ப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.*

# பொது ஆதாய நோக்கிலான வணிகக் குழுக்கள்/ கூட்டமைப்பு/ கூட்டுச்சதி

### *பொது ஆதாய நோக்கிலான வணிகக் குழுக்கள்/கூட்டமைப்பு/ கூட்டுச்சதி*

***அறிமுகம்:***

*2002 ஆம் ஆண்டு வணிகப் போட்டி சட்டம் (திருத்தம் செய்யப்பட்டபடி) (இச்சட்டம்) நவீன வணிகப்போட்டி சட்டங்களின் ஒழுக்க விதிகளை வகுத்துரைக்கும் கோட்பாடுகளைப் பின்பற்றுகிறது. இது, வணிகப்போட்டியை வளர்ப்பதையும், நிறுவனங்களால் வணிகப் போட்டி எதிர்ப்பு நடைமுறைகளுக்கு எதிராக இந்தியச் சந்தைகளைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இச்சட்டம் வணிகப் போட்டிக்கு எதிரான ஒப்பந்தங்களைத் தடைசெய்வதுடன், நிறுவனங்கள், தங்களது மேலாதிக்க நிலையினைத் தவறாகப் பயன்படுத்துவதையும் தடைசெய்கிறது. மேலும், இந்தியாவில் வணிகப்போட்டியில், எந்த விதமான பாதகமான விளைவும் இருக்கவில்லை என்பதனை உறுதி செய்யும் நோக்கில், சேர்க்கைகள்(இணைப்புகள், ஒருங்கிணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்) ஆகியவற்றைக் ஒழுங்குமுறைப்படுத்துகிறது.*

*இந்தியாவிலுள்ள சந்தைகளில், வணிகப்போட்டியின்மீது பொருட்படுத்தத் தக்க பாதகமான விளைவினை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தக்கூடிய எந்த ஓர் ஒப்பந்தத்தையும், இந்த வணிகப்போட்டி சட்டம் தடைசெய்கிறது. அத்தகைய எந்த ஓர் ஒப்பந்தமும் செல்லத்தக்கதன்று!.*

*ஓர் ஒப்பந்தம் கிடைநிலையாக இருக்கலாம். அதாவது, ஒரே மாதிரியான அல்லது ஒத்த பொருட்களின் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், தனியார்கள், சங்கங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கக்கூடும் அல்லது அது செங்குத்தான நிலையில் இருக்கலாம். அதாவது பல்வேறு சந்தைகளில் உற்பத்திச்சங்கிலியின் வெவ்வேறு கட்டங்களில் அல்லது மட்டங்களில் உள்ள நிறுவனங்கள் அல்லது தனியார்களிடையே உள்ளனவாக இருத்தற்கூடும்.*

### *பொது ஆதாயநோக்கிலான வணிகக்குழுவாவது யாது?*

*பொது ஆதாய நோக்கிலான வணிகக்குழு என்ற தொடருக்கான பொருள்விளக்கம், வணிகப் போட்டி சட்டத்தின் கூறு Cயின் பிரிவு 2-ல் தரப்பட்டுள்ளது. "பொது ஆதாய நோக்கிலான வணிகக் குழுவாவது, தயாரிப்பாளர்கள், விற்பனையாளர்கள், விநியோகஸ்தர்கள், வர்த்தகர்கள் அல்லது சேவை வழங்குநர்கள் ஆகியோர் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு, ஒரு கூட்டமைப்பினை ஏற்படுத்திக்கொண்டு உற்பத்தி, விநியோகம், விற்பனை, விலை அல்லது பொருள்களின் வர்த்தகம் அல்லது சேவைகள் வழங்கல் ஆகியவற்றை வரையறை செய்தல், கட்டுப்படுத்துதல் ஆகிய செயல்களில் ஈடுபடுதல். இத்தகையோரின் கூட்டமைப்பே பொது ஆதாய நோக்கிலான வணிகக் குழுவின் கூட்டணி அமைப்பாகும்".*

*தயாரிப்பு விலை (சரக்குகள் மற்றும் சேவைகள்) அல்லது வாடிக்கையாளர் குறித்த எவ்விதப் போட்டியினையும் உருவாக்காமல், நிறுவனங்கள் (ஒரு தனியார், ஓர்அரசுத்துறை மற்றும் சில தனியார்களின் கூட்டமைப்பு உள்ளிட்ட) நிறுவனங்களுக்கு இடையே ஏற்படுத்திக்கொள்ளப்படுகின்ற ஒப்பந்தங்களே பொது ஆதாய நோக்கிலான வணிகக் குழுக்களின் ஒப்பந்தங்களாகும். வணிகப்போட்டி சட்டம் அதன் பிரிவு 2 (h)- ல், ஒரு நிறுவனத்தின் விரிவான பொருள் வரையறையை வழங்குகிறது. ஒரு கூட்டமைப்பின் நோக்கம், வணிகப் போட்டி அளவுகளுக்குமேல் விலையை உயர்த்துவதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கும், பொருளாதாரத்திற்கும் ஊறு விளைவிப்பதாகும். நுகர்வோரைப் பொறுத்தவரை, அதிகவிலை மற்றும் மோசமான தரத்திலான பொருள்களை அவர்கள்மீது திணித்து, பொருள்கள் அல்லது சேவைகளுக்கான குறைந்த அல்லது முற்றிலும் தெரிவு செய்வதற்கான வழியற்றுப்போதல் நிலையினையும் இந்த மோசமான வணிகக் கூட்டமைப்பு உண்டாக்கி விடுகிறது.*

*இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்கள், விலைகளை நிருணயிக்க, சந்தைப்பங்கு அல்லது விற்பனை ஒதுக்கீடு (பங்கீட்டளவு), உற்பத்தி மற்றும் விநியோகத்தைக் கட்டுப்படுத்த, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சந்தைகளில் கூட்டுச்சதியுடன் ஏலம் கேட்கவோ ஏலமோசடியில் ஈடுபடவோ, வெளிப்படையான அல்லது மறைமுகமான ஒப்பந்தத்தினைச் செய்து கொள்ளும்போது, ஒரு கூட்டுச்சதி அமைப்பு ஆங்கு உருவாவதாகக் கூறப்படுகிறது. ஒரு வணிக மோசடிக் கூட்டமைப்பின் வரைவிலக்கணத்தில் ஒரு முக்கியமான பரிமாணம் யாதெனில், அந்தக்கூட்டமைப்பு, போட்டியிடும் நிறுவனங்களுக்கிடையே போட்டியிடாமல் செய்வதற்கு அல்லது போட்டியினைக் கட்டுப்படுத்திக்கொள்வதற்கு ஓர் ஒப்பந்தத்தினை உருவாக்கி சீர்கேட்டினை விளைவிப்பதாகும். ஒரு வணிக மோசடிக் கூட்டமைப்பில் உள்ள அனைத்து*

*நிறுவனங்களும் ஒரே நாட்டைச் சேர்ந்தவையாக இல்லாதபோது அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளின் சந்தைகளை ஒரு வணிக மோசடிக் கூட்டமைப்பு பாதிக்கும்போது, ஆங்கே ஒரு பன்னாட்டு வணிக மோசடிக்கூட்டமைப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.*

*நாட்டினுள் இறக்குமதிகளின் தேவைக்காக ஒன்றிணைகிற நிறுவனங்களை (நிறுவனங்களின் ஒரு சங்கம் உள்ளிட்ட) உள்ளடக்கியதே ஓர் இறக்குமதிக் கூட்டமைப்பாகும்.*

*பிற நாடுகளிலுள்ள சந்தைகளைக் கூட்டமைப்பு செய்வதற்கான, ஓர் ஒப்பந்தத்துடனான, ஒரு நாட்டிலுள்ள நிறுவனங்களால் ஆனதே, ஓர் ஏற்றுமதிக் கூட்டமைப்பாகும். இச்சட்டத்தில், இந்தியாவிலிருந்து ஏற்றுமதிகளை மட்டுமே நோக்கமாகக்கொண்ட கூட்டமைப்புகளுக்கு, வணிகப்போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்கள் தொடர்பான விதிமுறைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.*

***எல்லை தாண்டிய சட்டம்**:*

*கூட்டமைப்புகள் உள்ளிட்ட வணிகப்போட்டிக்கு எதிரான செயல்பாடுகள் இந்தியாவிற்கு வெளியே நடைபெறுகின்றன. ஆனால், இந்தியாவில் வணிகப்போட்டி மீதான விளைவைக் கொண்டிருக்கும். அவை, வணிகப்போட்டி சட்டத்தின் வரம்பிற்குள் (சுற்றெல்லைக்குள்) வருபவையாக இருக்கும், மேலும் அவை ஆணையத்தால் விசாரிககப்படமுடியும். இவ்வாறு வணிகப்போட்டி சட்டம் எல்லைக்கு அப்பாலும் செல்லுபடியாகும். (வணிகப்போட்டி சட்டப் பிரிவு 32).*

***தீங்கு விளைவிக்க கூடியவை என்று ஊகிக்கப்படும் கூட்டமைப்புகள்:***

*இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு வகைகளுள், ஒரே மாதிரியான வர்த்தகப் பொருள்கள் அல்லது சேவைகள் வழங்கலில் தொர்பான செயல்களில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களுக்கு இடையேயான கூட்டமைப்புகள் உள்ளிட்ட ஒப்பந்தங்கள், (கிடைநிலை ஒப்பந்தங்கள் என்று பொதுவாக அறியப்படுபவை) வணிகப்போட்டியின் மீது ஓர் எதிர் விளைவை உண்டாக்குமென ஊகிக்கப்படுகின்றன. எனவே, இத்தகைய ஒபபந்தங்கள், வணிகப்போட்டிக்கு எதிரானவையாகவும் செல்லத்தக்கவை அல்லாதனவாகவும் கருதப்படுகின்றன.*

*எவ்வாறாயினும், முந்தைய பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்காணும் நான்கு வகை கிடைநிலை ஒப்பந்தங்கள் கூட்டுத்தொழில்கள் (கூட்டு வணிக முயற்சிகள்) வாயிலாகப் போடப்பட்டுள்ள நேர்வில் அவை, வணிகப் போட்டிகளின்மீது, கவனிக்கத்தக்க மோசமான விளைவைக் கொண்டிருப்பதாக ஊகிக்கப்படுவதில்லை. மேலும் தயாரிப்பு, வழங்கல், விநியோகம், பொருள்சேமிப்பு, கையகப்படுத்துதல் அல்லது சரக்குக் கட்டுப்பாடு அல்லது சேவைகள் வழங்குதல் ஆகியவற்றின் திறனை அவை அதிகரித்தால், வணிகப்போட்டி சட்டத்தின் பிரிவு 3-ல், துணைப்பிரிவு 3-ன் மேற்கண்ட (சட்ட) விதித்முறைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படலாம்.*

- *ஒரு பொருளின் கொள்முதலை மற்றொரு பொருளின் விற்பனையுடன் கட்டயமாக்குவது.*
- *தனித்த (பிரத்யேக) விநியோக ஏற்பாடு.*
- *தனித்த (பிரத்யேக) விநியோக ஒப்பந்தம்.*
- *வணிகத்தில் பங்கேற்க மறுப்பு*
- *மறுவிற்பனை, விலை பராமரிப்பு*

*ஆகியவை உள்ளிட்ட வணிகப்போட்டி, சட்டத்தின் பிரிவு 3ல், துணைப்பிரிவு 3ன் கீழுள்ள ஒப்பந்தங்கள் தவிர, பிற ஒப்பந்தங்கள் வணிகப்போட்டியின் மீது, கவனிக்கத்தக்க/குறப்பிடத்தக்க விளைவைக் கொண்டிருபபதாகக் கருதப்படமாட்டாது. மேலும், அறிவுக்குப் பொருத்தமானஃநியாயமான விதி அணுகுகையைப் பயன்படுத்தி, உண்மைகளின் அடிப்படையில், ஆணையத்தால் அவை மதிப்பீடு செய்யப்படும்.*

***கூட்டமைப்புகளின் பொதுவான பண்புக்கூறுகள்:***

- *பெரும்பாலும் கூட்டமைப்புகள் இரகசியமாகவே செயல்படுகின்றன.*
- *பெருமளவிலான ஒரு கூட்டமைப்பின் உறுப்பினர்கள், தாங்கள், ஆணையத்தால் புலனாய்வு செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக, தங்களது நடவடிக்கைகளை பிறர் எளிதில் கண்டறியமுடியாதவாறு உருமறைப்பு செய்கின்றனர்.*
- *எதிர்த்தாக்கு (பதிலடி) அச்சுறுத்தல்கள் மூலம் கூட்டமைப்பின் நிலைத்தன்மை உறுதி செய்யப்படுகிறது. எந்த ஓர் உறுப்பினரும் ஏமாற்றினால், கூட்டமைப்பு உறுப்பினர்கள், அந்த ஏமாற்றுகின்ற உறுப்பினரின் வணிகத்தைப் பாதிக்கின்ற அளவிற்குத் தற்காலிக விலைக்குறைப்பின் மூலம் பதிலடி கொடுப்பார்கள். அல்லது அந்த மோசடி உறுப்பினரைத் தனிமைப்படுத்துவார்கள்.*
- *மோசடி செய்வதை வலுவிழக்கச் செய்யும் பொருட்டு/ஊக்கமிழக்கச் செய்யும் பொருட்டு, இழப்பீட்டுத்திட்டம் என்றறியப்படும் மற்றொருமுறை பயன்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒரு கூட்டமைப்பின் உறுப்பினர், அதன் ஒதுக்கப்பட்ட பங்கினைவிட அதிகமாக விற்றுவிட்டதாகக் கண்டறியப்பட்டால், அதனை மற்றவர்களுக்கு ஈடுசெய்யவேண்டியிருக்கும்.*

***கூட்டமைப்புகளை உருவாக்குதற்கு உகந்த சூழல்:***

*சந்தையில் பயனுள்ள போட்டி இருந்தால், கூட்டமைப்புகள் உருவாகி, நிலைத்திருப்பது கடினம்! கூட்டமைப்புகளை உருவாக்கிட உகந்த சில சூழல்:*

- *அதிகக் கருத்தூன்றல் - போட்டியாளர்கள் வெகுசிலர்!*
- *அதிக அளிவிலான நுழைவு வெளியேறுவதற்கான தடைகள்.*
- *ஒரே சீரான தயாரிப்புகள் (ஒரே மாதிரியான தயாரிப்புகள்)*
- *ஒரே மாதிரியான உற்பத்தி செலவுகள்.*
- *அதிகப்படியான உற்பத்தித் திறன்*
- *தயாரிப்பின்மீது நுகர்வோரின் அதிகப்படியான சார்ந்திருக்கும் தன்மை*
- *வஞ்சகக்கூட்டு உடன்படிக்கை வரலாறு*
- *தீவிர வர்த்தக சங்கம்*

***கூட்டமைப்புகள் குறித்து விசாரணை***

*வணிகப்போட்டி சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, ஆணையம் ஏனையவற்றுக்கிடையில், கூட்டமைப்புகளை வரையறுக்கின்ற வணிகப் போட்டி சட்டத்தின் பிரிவு 3-ன் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதாக ஏதேனும் குற்றச்சாட்டு எழுந்தால், அதனை விசாரிக்கலாம்.*

*"ஒரு மோசடிக் கூட்டு" உருவாகி இருப்பதாக ஓர் அடிப்படை ஆதாரம் இருப்பதாக ஆனையம் நிறைவு எய்தினால், அது குறித்துப் புலனாய்வு செய்து, ஓர் அறிக்கையினை அளிக்குமாறு (சமர்ப்பிக்குமாறு) தலைமை இயக்குநருக்கு உத்தரவிடவேண்டும். எந்த ஒருமனிதரையும் அழைப்பானை மூலம் வரவைப்பது அல்லது அவரது வருகையைக் கட்டாயமாக்குவது மற்றும் அவரை சத்தியப் பிரமாணம் செய்ய வைப்பதன் மூலம் சோதனை செய்வது மற்றும் கண்டுபிடிப்புக்குத் தேவையான வகையில் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் பிரமாணப் பத்திரத்தின்மீது சான்றினைப் பெறுதல் போன்ற விஷயங்களில் உரிமையியல் வழக்கு நடைமுறை நெறித் தொகுப்பின்கீழ் கீழ் செயல்படும் உரிமையியல் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரங்களை ஆணையம் பெற்றுள்ளது. தலைமை இயக்குநர், புலனாய்வினை மேற்கொள்ளும்*

*நோக்கத்திற்காக, 'தேடல் மற்றும் பறிமுதல்' நடத்த அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதுடன் உரிமையியல் நீதி மன்ற அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளார்.*

**குறிப்பு**: *விசாரணை மற்றும் புலனாய்வு தொடர்பான நடைமுறைகளின் விவரங்களுக்கு, 2009 ஆம் ஆண்டு, மே திங்கள் 21 ஆம் நாளிட்ட, 2009 ஆம் ஆண்டு இந்திய வணிகப்போட்டி ஆணையம் (பொது) ஒழுங்குமுறை நெறிதனைக் காண்க. (மேலும் இவைபற்றிய செய்திகள், இந்திய வணிகப் போட்டி ஆணையத்தின் வலைத்தளமான www.cci.gov.in-னிலும் கிடைக்கும்).*

**ஆணையத்தின் அதிகாரங்கள்:**

*எந்த மோசடிக் கூட்டமைப்பினையும் விசாரிப்பதற்கும் மோசடிக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினருக்கும், அப்படிப்பட்ட ஒப்பந்தக் காலம் தொடர்ந்து நீடித்துவரும் ஒவ்வொரு ஆண்டிலும் அக்கூட்டமைப்பு ஈட்டும் லாபத்தைப்போன்று (ஆதாயத்தைப் போன்று) மூன்று மடங்கான ஒரு தொகை, அல்லது, ஒப்பந்தம் தொடர்ந்து நடைமுறையிலிருந்து வரும் ஒவ்வொரு ஆண்டின் கூட்டமைப்பின் விற்று முதலில் பத்து சதவீதமான ஒருதொகை. ஆக, இவ்விரண்டில், எது அதிகமான தொகையாக உள்ளதோ, அத்தகைய ஒரு தொகையினை அபராதமாக விதிக்கவும், ஆணையத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு நிறுவனம், நிர்வாகக்குழு உறுப்பினர்களைக் கொண்டியங்கும் ஒரு கூட்டாண்மை நிறுவனமாக இருக்கும் பட்சத்தில், இயல்பாகவே, குற்றத்தில் பங்கு பெற்றவர்களாக இருக்கும் அந்த நிறுவனத்தின் இயக்குநர்கள்/அதிகாரிகள் ஆகியோர், தங்கள்மீது சட்டப்படியாக வழக்கு தொடரப்படும் நிலையிலுள்ளவர்களாக ஆவார்கள்!*

*கூடுதலாக பின்வரும் உத்தரவுகளில், ஏதேனும் ஒன்றினையோ, அனைத்தனையோ பிரப்பிக்க ஏனையவற்றுக்கிடையில், ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளது:*

- *ஒரு (மோசடிக்) கூட்டமைப்பு ஒப்பந்தத்திலுள்ள அனைத்துத் தரப்பினரையும் ஒப்பந்தத்தைத் தொடராமல் உடனடியாக நிறுத்திவிடவும். அதுபோன்ற ஒப்பந்தத்தை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ளாமலிருக்கவும் உத்தரவிடுதல்.*
- *ஒப்பந்தத்தினை மாற்றியமைக்க, தொடர்புடைய நிறுவனங்களுக்கு உத்தரவிடுதல்.*
- *செலுத்தப்பட்ட செலவுத்தொகைகள் / கட்டணங்கள் ஏதேனுமிருப்பின், அவை உள்ளிட்டது தொடர்பான, ஆணையம் பிறப்பிக்கும் அப்படிப்பட்ட ஆணைகளுக்குக் கீழப்படியவும் அதன் கட்டளைகளைப் பின்பற்றவும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு உத்தரவிடல்; மற்றும்*
- *அப்படிப்பட்ட பிற ஆணையை அல்லது தகுதியானவை என்று முடிவு செய்யப்பட்ட அப்படிப்பட்ட உத்தரவுகளைப் பிறப்பித்தல்.*

**பெருந்தன்மைத் திட்டம்**:

*மோசடிக் கூட்டமைப்பைப் பற்றி முழுமையான, உண்மையான மற்றும் முக்கியமான தகவல் அளிக்கும் அதன் உறுப்பினருக்கு ஒரு குறைவான அபராதத்தை விதிப்பதன் மூலம், அவருக்கு இரக்கங்காட்டிட, வணிகப்போட்டி சட்டம், பிரிவு 46, ஆணையத்துக்கு அதிகாரம் அளிக்கிறது. மோசடிக் கூட்டமைப்புகளைக் கண்டுபிடித்து அவற்றைப் பற்றிப் புலனாய்வு செய்ய உதவிடும் வகையில், உறுப்பினர்களைத் தூண்டிவிட, இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*மோசடிக் கூட்டமைப்பின்மீது, வெற்றிகரமாக வழக்குத் தொடர, கூட்டமையப்பின் உறுப்பினரால் வழங்கப்பட்ட சான்று தேவை என்ற அடிப்படையில் இத்திட்டம் அடித்தளமிடப்பட்டுள்ளது. அதுபோன்றே, கூட்டமைப்புகளுக்கு எதிராக வெற்றிகரமாக வழக்குத் தொடர்வதில், வெளிநாட்டு அதிகார வரம்புகளின் வணிகப்போட்டி அதிகாரிகளுக்கு, பெருந்தன்மைத் திட்டங்கள் மிகவும் உதவிகரமாக உள்ளதாக நிரூபணம் ஆகியுள்ளன.*

*2009 ஆம் ஆண்டு வணிகப்போட்டி சட்ட(ம்) ஒழுங்குமுறை நெறிகளின்படி, (குறைந்த தண்டனை) இந்திய வணிகபோட்டி ஆணையத்திற்கு, ஆணையம் ஓர் அறிவிக்கையை வெளியிட்டுள்ளது. அதன்படி, மோசடிக் கூட்டமைப்பின் தரவரிசைகளை வீழ்த்துவதற்கு உதவியாக இருக்கும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு இரக்கம் காட்டுவதற்கான வழிமுறை, நடைமுறை மற்றும் நெறிமுறையை அச்சட்டம் விரித்துரைக்கிறது. அத்தகைய உறுப்பினர்கள், குற்றம் சாட்டப்பட்டிருக்கும் மோசடிக் கூட்டணியை அடையாளங்காட்டி வெளிப்படுத்துதற்குக் காரணமாகவும், உதவியாகவும் விளங்குவதால், அவர்கள்மீது ஆணையம் பரிவு காட்டுகிறது.*

**குறிப்பு**: *குறைந்த அபராதத்திற்கான நிபந்தனைகளின் விவரங்களை, அருள்கூர்ந்து, 2009 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள், 13 ஆம் நாளிட்ட, இந்திய வணிகப்போட்டி ஆணையம் (குறைந்த தண்டனை) ஒழுங்குமுறை நெறிகளைக்காண்க (மேலும், அவ்விவரங்கள், இந்திய வணிகப்போட்டி ஆணைய வலைத்தளமான www.cci.gov.in-னிலும் கிடைக்கும்)*

**இடைக்கால உத்தரவு**:

*இந்த வணிகப்போட்டி சட்டத்தின் 33 ஆம் பிரிவின்கீழ், ஒரு விசாரணையின் நிலுவையின்போது, எந்த ஒரு தரப்பினரும், விசாரணையை முடிக்கும்வரை, அல்லது மேற்கொண்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் வரையில், அத்தகைய தரப்பினருக்கு அறிவிப்பு செய்யவேண்டியதில்லை என்று கருதப்படும் நேரத்தில், அவ்வாறே, அறிவிப்பின்றியே ஆணையத்தால், குற்றம் சாட்டப்படும் எதிரிடைச் செயலையச் செய்யப்படாது தடுக்கப்படலாம்!*

**குறிப்பு**: *இடைக்கால ஆணைகளுக்குத் தொடர்பான வழிமுறைகளின் விவரங்களுக்கு,2009 ஆம் ஆண்டு மே திங்கள் 21 ஆம் நாளிட்ட இந்திய வணிகப் போட்டி ஆணைய(ம்) (பொது) ஒழுங்குமுறை நெறிகளைக் காண்க. (மேலும், இவ்விவரங்கள் இந்திய வணிகப்போட்டி ஆணைய வலைத்தளமான www.cci.gov.in-னிலும் கிடைக்கும்).*

**மேல்முறையீடு**

*ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட சட்ட பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட எந்த ஒரு உத்தரவு அல்லது மேற்கொள்ளப்பட்ட முடிவு அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிரான மேல்முறையீடுகளை கேட்கவும் மற்றும் தீர்வு செய்யவும் தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தை, சட்ட பிரிவு 53A அமைத்துள்ளது*

*ஆணையத்தின் முடிவு/ஆணை/ உத்தரவு கிடைக்கப்பெற்று 60 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யவேண்டும்.*

# ஏல மோசடி

## ஏல மோசடி

### அறிமுகம்

*2002 ஆம் ஆண்டு, வணிகப் போட்டி சட்டம் (திருத்தம் செய்யப்பட்டபடி) (இச்சட்டம்) நவீன வணிகப் போட்டி சட்டங்களின் ஒழுங்கு விதிகளை வகுத்துரைக்கும் கோட்பாடுகளைப் பின்பற்றுகிறது. இது, வணிகப் போட்டியை வளர்ப்பதையும்,; வணிகப் போட்டி எதிர்ப்பு நடைமுறைகளுக்கு எதிராக, இந்திய சந்தைகளைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இச்சட்டம், வணிகப் போட்டிக்கு எதிரான ஒப்பந்தங்களைத் தடை செய்வதுடன், நிறுவனங்கள் தங்களது மேலாதிக்க நிலையினைத் தவறாகப் பயன்படுத்துவதையும் தடை செய்கிறது. மேலும், இந்தியாவில் வணிகப் போட்டியில் எந்தவிதமான பாதகமான விளைவும் இருக்கவில்லை என்பதனை உறுதி செய்யும் நோக்கில் சேர்க்கைகள் (இணைப்புகள், ஒருங்கிணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்) ஒழுகுமுறைப்படுத்துகிறது.*

*இந்தியாவிலுள்ள சந்தைகளில், வணிகப் போட்டியின் மீது, பொருட்படுத்தத்தக்க பாதகமான விளைவினை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தக்கூடிய எந்த ஓர் ஒப்பந்தத்தையும், இந்த வணிகப் போட்டி சட்டம் தடை செய்கிறது. அத்தகைய எந்த ஓர் ஒப்பந்தமும் செல்லதக்கதன்று.*

*ஓர் ஒப்பந்தம் கிடைநிலையாக இருக்காலம். அதாவது, ஒரே மாதிரியான அல்லது ஒத்த பொருட்களின் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், தனியர்கள், சங்கங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கக்கூடும். அல்லது, அது செங்குத்தான நிலையில் இருக்கலாம். அதாவது பல்வேறு சந்தைகளில், சரக்கு மற்றும் சேவைகளை பொறுத்தவரையில் உற்பத்தி சங்கிலியின் வெவ்வேறு கட்டங்களில் அல்லது மட்டங்களில் உள்ள நிறுவனங்கள் அல்லது தனியர்களிடையே உள்ளனவாக இருத்தற்கூடும்.*

*ஏல மோசடி அல்லது கூட்டுச்சதியுடன் கூடிய ஏலங்கேட்பு என்பது, வணிகப் போட்டி சட்டம், பிரிவு 3-ன் கீழ், பொருட்படுத்தத்தக்க ஓர் எதிர் விளைவினை ஏற்படுத்தக் கூடுமென்று ஊகிக்கத்தக்க, கிடைநிலை ஒப்பந்தங்களில் ஒன்றாக இருக்கிறது.*

### ஏல மோசடியாவது யாது?

*வணிகப் போட்டி சட்டம் பிரிவு 3-க்கான விளக்கம், ஏலமோசடியை கீழ்காணுமாறு, பொருள்வரையறை செய்கிறது.*

> *ஏலம் கேட்புகளுக்கான நிலையினை அகற்ற கூடிய அல்லது குறைக்கக்கூடிய, எதிர்விளைவை ஏற்படுத்தக்கூடிய, அல்லது மிகமோசமாக பாதிக்கக்கூடிய அல்லது ஏலம் வழிமுறையை சூழ்ச்சித் திறனுடன் கையாளுகின்ற, வணிகப்போட்டிச் சட்டம் உட்பிரிவு 3-ல் குறிப்பிட்டுள்ளது போல், தனியர்களின் ஒப்பந்தங்கள் அல்லது ஒரே மாதிரியான அல்லது, ஒத்த தயாரிப்பு அல்லது பொருள்களின் வணிகம் அல்லது சேவைகளை வழங்குதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு இடையேயான எந்த ஒப்பந்தமும், ஏல மோசடி என்று கருதப்படும்.*

*ஏலம் கேட்பவர்கள் கூட்டுச்சதி செய்து, ஏலத்தொகையைத் தாங்கள் முன்பே தீர்மானித்துள்ள அளவிலேயே வைத்துள்ளபோது, ஏல மோசடி நிகழ்கிறது, ஏலம் கேட்கும் உறுப்பினர்களின் குழுவினால், வேண்டுமென்றே, சூழ்ச்சித் திறனுடன் கையாளுப்படுகின்ற ஒரு செயல்மூலம் நிகழ்வதே, அப்படிப்பட்ட, விலை முன்நிருணயம் ஆகும். ஏலம் கேட்பவர்கள் உண்மையானவர்களாக இருக்கலாம் அல்லது வலிமையானவர்களாக இருக்கலாம். ஆனால், அவர்கள் ஒன்றாகக் கூட்டுச்சதி செய்து தங்கள் செயலை நிறைவேற்றிக் கொள்கிறார்கள் என்பது திட்டவட்டமான உண்மையாகும்.*

### ஏல மோசடி என்பது வணிகப் போட்டிக்கு எதிரானது

*ஏலம் கேட்பது, ஒரு நடைமுறையாக, மிகவும் சாதகமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில், பொருள்கள் அல்லது சேவைகளை வாங்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஏலங்களுக்கான அழைப்பு, அரசு (மற்றும் அரசு நிறுவனங்கள்) நிறுவனங்கள் மற்றும் தனியார் அமைப்புகள் (நிறுவனங்கள்,*

*பெருநிறுவனங்கள் முதலியவை) ஆகிய இவ்விரண்டிற்கும் பொருந்தும். ஆனால், தொலை நோக்குடன் கூடிய ஏலதாரர்கள் கூட்டுச் சதி செய்து, அல்லது, ஒத்திசைந்து செயல்பட்டால், மிகவும் சாதகமான விலைகளையும் நிபந்தனைகளையும் பாதுகாப்பதற்கான நோக்கம் மறுக்கப்படலாம். அப்படிப்பட்ட கூட்டுச்சதி நேரத்தில் ஏலம் கேட்பது அல்லது ஏல மோசடியில் ஈடுபடுவது ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதன் நோக்கத்தினையே மீறுவதாக அமைந்துவிடுகிறது. அத்துடன் இயல்பாகவே, அது வணிகப்போட்டிக்கு எதிரானதுமாகும்!*

*கூட்டுச் சதி நோக்கிலான ஏலம் கேட்டல் அல்லது ஏலமோசடி, பல்வேறு வழிகளில் நிகழலாம்! பொதுவாக மிகப்பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சில வழிகளாவன:*

- *ஒத்த ஏலங்களை சமர்ப்பிப்பதற்கான ஒப்பந்தங்கள். மிகக்குறைந்த ஏலத் தொகையினை யார் அளிக்கவேண்டும் என்பதற்கான ஒப்பந்தங்கள், மிக அதிகத் தொகைக்கான ஏலத்தொகையினை யார் அளிக்க வேண்டும் என்பதற்கான ஒப்பந்தங்கள் (தானாகவே தொகை உயர்த்தப்பட்ட ஏலங்கள்).*

- *ஒருவருக்கொருவர் ஏலம் கேட்கக்கூடாது என்பதற்கான ஒப்பந்தங்கள்.*

- *விலைகள் அல்லது ஏலவிதி முறைகளை கணக்கிடுதற்கான பொதுவான நடத்தைவிதிகள் குறித்த ஒப்பந்தங்கள்.*

- *வெளியிலிருந்து ஏலம் கேட்க வருபவர்களை நெரித்திடும் ஒப்பந்தங்கள்.*

- *ஏல வெற்றியாளர்களை முன்கூட்டியே, சுழற்சி அடிப்படையில், அல்லது, புவியியல், அல்லது, வாடிக்கையாளர் ஒதுக்கீடு அடிப்படையில் நியமிக்கும் ஒப்பந்தங்கள்.*

- *பொருள்களை விற்பனை செய்வதற்கான ஏலத்தில் எந்த ஒரு தரப்பினரும் வழங்கக்கூடிய ஏலங்களுக்கான ஒப்பந்தம் அல்லது பொருள்களின் விற்பனைக்கான எந்த ஏலத்திலிருந்தும் விலகியிருப்பதற்கான எந்தத் தரப்பும் ஒப்புக் கொள்கின்ற வழியிலான ஒப்பந்தங்கள். அத்தகைய ஒப்பந்தங்கள், போட்டியினை அகற்றுகின்றன அல்லது சிதைக்கின்றன.*

*இந்த ஒப்பந்தங்கள் சிலவற்றில், இயல்பாகவே, வெற்றிகரமான ஏல தாரர்களின் லாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத் தொகையைத் தோல்வி கண்ட ஏலதாரர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதில் உள்ள ஓர் ஈடு செய்கின்ற முறையாகும்.*

*அரசாங்க ஒப்பந்தப் புள்ளிகளில், ஏலமோசடி நிகழ்ந்தால், அது, அதன் கொள்முதல்கள் மீதும் மக்களுக்கான பொதுச் செலவு செய்வதன் மீதும் கடுமையான பாதிப்புகளை விளைவிக்கலாம்.*

*ஏலமோசடி அல்லது கூட்டுச்சதி நோக்கிலான ஏலம் கேட்டல், சட்டத்தில் கடுமையான குற்றமாகக் கருதப்படுகிறது. ஊகத்தின் அடிப்படையிலான அணுகுமுறை கடுமையான கையாளும் முறையைப் பிரதிபலிக்கிறது.*

**ஏல மோசடி வடிவங்கள்**

*ஏலமோசடி பல வடிவங்களை எடுத்திடலாம். ஆனால், பெரும்பாலான ஏலமோசடி நோக்கிலான சதிகள், பொதுவாக பின்வரும் வகைகளில் ஒன்றாகவோ அதற்கு மேற்பட்டவையாக இருக்கின்றன.*

**ஏல ஒடுக்கம்**

*ஏல ஒடுக்கத்திட்டங்களில், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட, ஏலம் கேட்பார் என எதிர்பார்க்கப்படும் போட்டியாளர்கள், அல்லது, முன்னதாகவே ஏலம் எடுத்தவர்கள், நியமிக்கப்பட்ட வெற்றி போட்டியாளரின் ஏலம் ஏற்றுக் கொள்ளப்படும் பொருட்டு, தாங்கள் ஏலம் எடுப்பதைத் தவிர்ப்பதற்கு ஒப்புக் கொள்கிறார்கள், அல்லது, முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஏலம் கேட்டலைத் திரும்பப் பெறுவார்கள்.*

***பாராட்டு முறையான ஏலம் கேட்டல்***

*பாராட்டு முறையான ஏலம் கேட்டலானது ('பிறர் அறிய முடியாத' அல்லது 'மரியாதை' ஏலம் கேட்டல் என்றும் அறியப்படுகிற) சில போட்டியாளர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு, ஏலங்களைச் சமர்ப்பிக்க ஒப்புக் கொள்ளும்போது, அல்லது, வாங்குபவருக்கு ஏற்றுக் கொள்ளமுடியாத சிறப்பு விதிமுறைகளைக் கொண்டிருக்கும்போது நிகழ்கிறது. அப்படிப்பட்ட ஏலங்கள், வாங்குபவருடைய ஒப்புதலைப் பெறுவதற்கான நோக்கத்தில் அமைந்தவை அல்ல. மாறாக, அவை, உண்மையான வணிகப் போட்டி ஏலத்தின் தோற்றத்தை அளிக்கும் வகையில், வடிவமைக்கப்பட்டவையாகும். பாராட்டு முறையான ஏலத்திட்டங்கள் பெரும்பாலும் அடிக்கடி நிகழக்கூடிய ஏல மோசடி வடிவங்களைப் பிரதிபலிக்கின்றன. மேலும், அவை இரகசியமாக உயர்த்தப்பட்ட விலைகளை மறைக்க வணிகப்போட்டியின் தோற்றத்தை உருவாக்குவதன்மூலம், வாங்குபவர்களை மோசடி செய்து ஏமாற்றுகின்றன.*

***ஏல சுழற்சி***

*ஏலசுழற்சித் திட்டங்களின் அனைத்து சதிகாரார்களும் ஏலம் சமர்ப்பிக்கிறார்கள். ஆனால் மிகக் குறைந்த ஏலதாரர்களால் மாறுகிறார்கள். சுழற்சியின் விதிமுறைகள் மாறுபடலாம். எடுத்துக்காட்டாக, வணிகப் போட்டியாளார்கள், ஒவ்வொரு சதிகாரருக்கும் சமமான தொகையை ஒதுக்கியோ, ஒவ்வொரு சதிகாரரின் அளவிற்கும் ஒத்த தொகுதிகளை ஒதுக்குவதன் மூலமாகவோ, ஒப்பந்தத்தின் அளவிற்கேற்ப, வெற்றியாளரை மாரி மாரி தீர்மானிக்கலாம். ஒரு கடுமையான ஏல சுழற்சி முறை வாய்ப்பு விதியினைத் துச்சமாகக் கருதுகிறது, மற்றும் ஒரு கூட்டுச்சதி அரங்கேறிவந்து கொண்டிருக்கிறது என்பதனையும் குறிப்பாக உணர்த்துகிறது.*

***துணை ஒப்பந்த உருவாக்கம்***

*துணை ஒப்பந்த உருவாக்க ஏற்பாடுகள் ஒரு ஏலமோசடித் திட்டத்தின் ஒரு பகுதியாக அடிக்கடி வெளிப்படுகின்றன. ஏலம் கேட்பதில்லை என்று ஒப்புக்கொண்ட அல்லது ஓர் இழப்பினைத் தருகின்ற ஏலப்புள்ளியினை அளிப்பதில்லை என்று ஒப்புக் கொண்ட போட்டியாளர்கள், வெற்றி பெற்ற ஏலதாரரைப் பின்தொடர்ந்து, அவரிடமிருந்து, துணை ஒப்பந்தங்களையோ, மாறாக, விநியோக ஒப்பந்தங்களையோ பெறுகிறார்கள். குறைந்த தொகைக்கு ஏலம் கேட்பவர், அவருக்கு அடுத்ததாக, இன்னும் குறைந்த விலைக்கு ஏலம் கேட்பவர் ஆகிய இருவருக்குமிடையே சட்ட விரோதமாகப் பெறப்பட்ட அதிக விலையைக் பிரிக்கும் ஒரு கவர்ச்சிகரமான துணை ஒப்பந்தத்திற்கு ஈடாக, சில திட்டங்களில் குறைந்த தொகைக்கு ஏலம் கேட்பவர், தமக்கு அடுத்த குறைந்த தொகைக்கு ஏலம் கேட்பவர், தமக்கு அடுத்த குறைந்த தொகைக்கு ஏலம் கேட்பவருக்கு ஆதரவாக, அதன் ஏலத்தைத் திரும்பப் பெற ஒப்புக்கொள்வார்.*

*ஏறக்குறைய, ஏலமோசடித் திட்டங்களின் அனைத்து வடிவங்களும் பொதுவான ஒரு நோக்கத்தைக் கொண்டுள்ளன. சில அல்லது அனைத்து ஏலதாரர்களிடையே ஆன ஓர் ஒப்பந்தம், வெற்றிபெறும் ஏலதாரரை முன்கூட்டியே தீர்மானித்துவிடுகிறது. அத்துடன், சதி செய்யும் விற்பனையாளர்களிடையே உள்ள போட்டியினைக் கட்டுப்படுத்துகிறது, அல்லது, நீக்குகிறது.*

***சில சந்தேகத்திற்குரிய (ஐயப்படும்படியான) நடத்தை வடிவமைப்பு மாதிரிகள்***

*ஏலமோசடியினைக் கண்டறிவது கடினம். இருப்பினும் வழக்கத்திற்கு மாறாக, ஓர் ஏலம்கேட்பு அல்லது ஓர் ஏலதாரரின் சொல் அல்லது செயல்மூலம் சந்தேகங்கள் (ஐயங்கள்) எழுப்பப்படலாம். ஒப்பந்தப்புள்ளி கோரி விடுக்கப்பட்ட அழைப்பினை ஏற்று, பங்கு கொள்ளவரும் மற்ற ஏலதாரர்களுடன் ஆலோசனை நடத்திய பிறகு, அதுவரையில் ஒப்பந்தப்புள்ளிக்கான ஓர் அழைப்பினை ஏற்பதில்லை என்ற (கூட்டுச்சதியுடன் கூடிய) ஓர் ஒப்பந்தமும்கூட ஓர் ஏலமோசடி குற்றமாகும். ஏலம் கேட்பதில் சில வடிவமைப்பு மாதிரிகள், கூட்டுச் சதிக்ககான சந்கேத்திற்கு வழிவகுக்கும். சந்கேத்துக்குரிய நடத்தையின் சூழ்நிலைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும். (அவை எடுத்துக்காட்டாக அமைந்துள்ளவையே தவிர, விரிவானவையாக அல்ல)*

(1). *வெவ்வேறு ஏலதாரர்களால் அளிக்கப்படுகின்ற ஏலப்புள்ளிகள், மாறுபாடற்ற அல்லது ஒரேமாதிரியான பிழைகளையும் ஒழுங்கீனங்களையும் கொண்டதாகும். (எழுத்துப்பிழை, இலக்கணப்பிழை மற்றும் கணக்கீட்டுப் பிழை ஆகியவை) நியமிக்கப்பட்ட ஏல வெற்றியாளர், தம்முடையதைப் போலவே, இதர ஏலம் கேட்புப்புள்ளிகளையும் (தோல்வியுற்றவர்களின் ஏலப்புள்ளிகளையும் சேர்த்தே) தயார் செய்துள்ளார் என்பதனை இது சுட்டிக் காட்டலாம்.*

(2). *ஏல ஆவணங்கள், கடைசி நிமிட மாற்றங்களைக் குறிக்கும் வகையில் அதே திருத்தங்களையும் மாற்றங்களையும் கொண்டுள்ளன.*

(3). *ஓர் ஏலதாரர், ஆணாயினும், பெண்ணாயினும் தனக்காகவும் போட்டியாளருக்காகவும் ஓர் ஏலத் தொகுப்பினை நாடுகிறார்.*

(4). *ஓர் ஏலதாரர், ஆணாயினும் பெண்ணாயினும் தனது ஏலப் புள்ளியினையும் போட்டியாளரின் ஏலப்புள்ளியினையும் அளிக்கிறார்.*

(5). *ஒரு தரப்பினர், ஓர் ஏலத் திறப்பிற்கு, பல ஏலப்புள்ளிகளைக் கொண்டு வந்து, இன்னும் வேறு யார் ஏலம் கேட்கிறார் என்று அறிய வந்ததற்குப் பினனர், தனது ஏலப்புள்ளிகளை அளிக்கறார்.*

(6). *ஓர் ஏலத்தாரர், போட்டியாளர்களின் ஏலப்புள்ளிகளைத் தாம் முன்கூட்டியே அறிந்துள்ளதைக் குறிக்கும் வகையில் ஓர் அறிக்கையினை வெளியிடுகிறார்.*

(7). *ஓர் ஏலதாரர், ஓர் ஏலத்தினைப் பாராட்டு முறையான அடையாளம் அல்லது பிறர் அறியவொண்ணா ஏலம்கேட்பு என்று ஓர் அறிக்கையினை வெளியிடுகிறார்.*

(8). *ஏலதாரர்கள் தங்களுக்குள் விலைகளைப் பற்றி விவாதித்து, அதனடிப்படையில் ஓர் உடன்பாட்டை எட்டியதாக, ஓர் ஏலதாரர் அறிக்கை ஒன்றினை வெளியிடுகிறார்.*

***ஏலமோசடி குறித்த விசாரணை***

*வணிகப் போட்டி சட்டம் 2002 பிரிவு 19-ன் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி ஏலமோசடியினை வரையறுத்துக்கூறுகின்ற வணிகப் போட்டிச் சட்டம் பிரிவு 3-ல் உட்பிரிவு 3-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ள எந்த சட்ட மீறல் குறித்தும் ஆணையம் விசாரிக்கலாம்.*

*ஆணையம் ஏலமோசடி நிழ்ந்துள்ளதாத ஓர் அடிப்படை ஆதாரம் இருக்கிறதென்று ஆணையம் திருப்தியடையும் பட்சத்தில் தலைமை இயக்குனருக்கு அது குறித்து புலனாய்வு ஒன்றினை நிகழ்த்தி அறிக்கையொன்றினையும் அளிக்குமாறு உத்தரவிடவேண்டும்.*

*எந்த மனிதரையும் அழைப்பானை மூலம் வரவழைப்பது அல்லது அவரது வருகையைக் கட்டாயமாக்குவது மற்றும் அவரை சத்தியப் பிரமாணம் செய்ய வைப்பதன் மூலம் சோதனை செய்வது மற்றும் கண்டுபிடிப்புக்குத் தேவையான வகையில் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் பிரமாணப் பத்திரத்தின்மீது சான்றினைப் பெறுதல் போன்ற விஷயங்களில் உரிமையியல் வழக்கு நடைமுறை நெறித் தொகுப்பின்கீழ் செயல்படும் ஓர் உரிமையியல் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரங்கள் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. தலைமை இயக்குநர், புலனாய்வினை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, 'தேடல் மற்றும் பறிமுதல்' நடத்த அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதுடன் உரிமையியல் நீதி மன்ற அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளார்.*

***குறிப்பு**:*

*விசாரணை மற்றும் புலனாய்வு தொடர்பான நடைமுறைகளின் விவரங்களுக்கு, 2009 ஆம் ஆண்டு, மே திங்கள் 21 ஆம் நாளிட்ட, 2009 ஆம் ஆண்டு இந்திய வணிகப் போட்டி ஆணையம் (குறைந்த அபராதம்) ஒழுங்குமுறை நெறிதனைக் காண்க. (மேலும் இவைபற்றிய செய்திகள், இந்திய வணிகப் போட்டி ஆணையத்தின் வலைத்தளமான www.cci.gov.in-னிலும் கிடைக்கும்).*

***ஆணையத்தின் அதிகாரங்கள்:***

*விசாரணைக்குப் பின்னர் ஆணையம் ஏனயவற்றுக்கிடையில் வணிகப் போட்டிச் சட்டம் பிரிவு 27-ன் கீழ் எந்தவொரு அல்லது கீழ்காணும் உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம்.*

1) ஒரு மோசடிக் கூட்டமைப்பிலுள்ள தரப்பினருக்கு ஒப்பந்தத்தைத் தொடராமல் (உடனடியாக) நிறுத்திவிடவும். அதுபோன்ற ஒப்பந்தத்தை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளாமலிருக்கவும் உத்தரவிடுதல்.

2) ஒப்பந்தங்கள் எந்த அளவிற்கு மாற்றியமைக்கப் பட வேண்டும் என்றும், ஆணையத்தின் ஆணையில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த விதத்தில் ஒப்பந்தங்கள் அமைந்திருக்க வேண்டும் என்றும் உத்தரவிடுதல்.

3) செலுத்தப்பட்ட செலவு தொகைகள்/கட்டணங்கள் ஏதேனுமிருப்பின், அவை உள்ளிட்டது தொடர்பான, ஆணையம் பிறப்பிக்கும் அப்படிப்பட்ட ஆணைகளுக்குக் கீழப்படியவும் அதன் கட்டளைகளைப் பின்பற்றவும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு உத்தரவிடல்; மற்றும்

4) தகுதியானவை என்று முடிவு செய்யப்பட்ட பிற ஆணை அல்லது உத்தரவுகளைப் பிறப்பித்தல்.

**அபராதம்**

எந்தவொரு அபராதம் பொறுத்தமானது என்று ஆணையம் கருதுகிறதோ அப்படிப்பட் அபராதத்தினை அது விதிக்கலாம். ஏலமோசடிக்கு அல்லது கூட்டுச்சதி நோக்கில் ஏலம் கேட்பதற்கு உடந்தையாக இருக்கின்ற தரப்பினரைக் கொண்ட அப்படிபட்ட பேர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு கடந்த மூன்று முந்தைய நிதியாண்டுகளின் சராசரி விற்றுமுதலில் 10 சதவீதம் வரையிலான ஒரு தொகை அபராதமாக விதிக்கப்படலாம். வணிகப் போட்டி சட்டம் பிரிவு 3-ன் துணைப்பிரிவு 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏமோசடிக்கான அல்லது கூட்டுச்சதி நோக்கில் ஒப்பந்தம் முலம் அந்த மோசடிக் கூட்டமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொரு தயாரிப்பாளர், விர்ற்பனையாளர். விநியோகஸ்த்தர், வர்த்தகர் அல்து சேவை வழங்குநர் மீது ஆணையம அபராதம் விதிக்கலாம். அந்த அபராதத் தொகையானது அப்படிப்பட்ட ஒப்பந்தக் காலம் தொடர்ந்து நீடித்து வரும் ஒவ்வோராண்டிலும் அக்கூட்டமைப்பு ஈட்டும் லாபத்தைப் போன்று மூன்று மடங்கான ஒரு தொகை, அல்லது, ஒப்பந்தம் தொடர்ந்து நடைமுறையிலிருந்து வரும் ஒவ்வொரு ஆண்டின் கூட்டமைப்பின் விற்று முதலில் பத்து சதவீதமான ஒருதொகை, ஆகிய இவ்விரண்டில், எது அதிகமான தொகையாக உள்ளதோ, அவ்வாறு இருக்கலாம். எனவே அபராதம் கடுமையாக இருக்கலாம். அத்துடன் தவறு செய்யும் தரப்பினருக்கு அது அதிக நிதி மற்றும் பிற செலவுகளை ஏற்படுத்தக் கூடும்.

ஒரு மோசடிக் கூட்டமைப்பை வெளிக்காடடும் விதத்தில் உண்மையான முழுமையான, மற்றும் முக்கிய இரகசியங்களை தொடர்புடைய தரப்பு வெளிக்கொண்டு வருமானால் ஒரு மோசடிக் கூட்டமைப்பில் உள்ள அந்தத் தரப்பின் மீது குறைந்த அபராதம் விதிப்பதற்கு வணிகப் போட்டி சட்டம், பிரிவு 46, ஆணையத்துக்கு அதிகாரம் அளிக்கிறது.

எவ்வாறாயினும் குறைந்த அபராதம் விதிக்கபட்ட அந்த தரப்பு முக்கியமான விவரங்களை வழங்கவில்லை என்றும் பொய்யான ஆதாரத்தை அளித்துள்ளது என்றும் குறைந்த அபராதம் விதிக்கப்படுவதற்கான சலுகையினை / இரக்கத்தினைப் பெறுவதற்கான விதிமுறையினைப் பின்பற்றவில்லையென்றும் புலனாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டால் அந்தத் தரப்பினற்குக் கருணை /சலுகை கிடைத்திட வாய்ப்பின்றி போய்விடும்.

**குறிப்பு**:

குறைந்த அபராதம் விதிக்கப்பெறுவதற்கான நிபந்தனைகளின் விவரங்களை, 2009 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள், 13 ஆம் நாளிட்ட, இந்திய வணிகப்போட்டி ஆணையம் (குறைந்த தண்டனை) ஒழுங்குமுறை நெறிகளில் காண்க. (மேலும், இவ்விவரங்கள், இந்திய வணிகப்போட்டி ஆணைய வலைத்தளமான www.cci.gov.in-னிலும் கிடைக்கும்)

**இடைக்கால உத்தரவு**:

விசாரணை முடியும் வரை அல்லது இறுதி உத்தரவு வரும் வரை குற்றச் செயலை மேற்கொள்ளும் எந்த ஒரு தரப்பினரையும் வணிகப் போட்டி சட்டம் பிரிவு 33-ன் கீழ், ஏலமோசடி தொடர்பான விசாரணை

*நிலுவையின்போது, அறிவிப்பின்றி, குற்றம் சாட்டப்படும் எதிரிடைச் செயலில் ஈடுபடும் தரப்பினரை தற்கலிகமாகக் அத்தகைய செயலை செய்யப்படாது தடுக்கப்படலாம்!*

**குறிப்பு**: *இடைக்கால ஆணைகளுக்குத் தொடர்பான வழிமுறைகளின் விவரங்களுக்கு,2009 ஆம் ஆண்டு மே திங்கள் 21 ஆம் நாளிட்ட இந்திய வணிகப் போட்டி ஆணைய(ம்) (பொது) ஒழுங்குமுறை நெறிகளைக் காண்க. (மேலும், இவ்விவரங்கள் இந்திய வணிகப்போட்டி ஆணைய வலைத்தளமான www.cci.gov.in-னிலும் கிடைக்கும்).*

**மேல்முறையீடு**

*ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட சட்ட பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட எந்த ஒரு உத்தரவு அல்லது மேற்கொள்ளப்பட்ட முடிவு அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிரான மேல்முறையீடுகளை கேட்கவும் மற்றும் தீர்வு செய்யவும் தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தை, சட்ட பிரிவு 53A அமைத்துள்ளது.*

*ஆணையத்தின் முடிவு/ஆணை/ உத்தரவு கிடைக்கப்பெற்று 60 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யவேண்டும்.*

# (அரசின்) பொதுக் கொள்முதல்

## *(அரசின்) பொதுக் கொள்முதல்*

*பொதுத்துறை நிறுவனங்களால் வாங்கப்படும் சரக்குகளும் பொதுமக்கள் நுகர்ச்சிக்காகப் பெறப்படும் சேவைகளும், பொதுக் கொள்முதல் எனப்படுகிறது.. இது அரசுகளின் தலையாய பொருளாதார பொருளாதாரச் செயல்பாடுக ளில் ஒன்றாக இருக்கிறது. இது, உலக அளவில் பலநாடுகளை பல நாடுகளோடு ஒப்பிட்டு நோக்கும்போது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பத்திலிருந்து இருபத்தைந்து சதவிகிதமாக இருக்கிறது. இந்தியாவில் அரசின் பொதுக் கொள்முதல், நாட்டின் மொத்த உள்நாடு உற்பத்தியில் ஒரு குறிப்பிடத்தகுந்த விழுக்காட்டளவில் இருக்கிறது.*

*பல்வேறு அமைச்சங்கள் (அமைச்சுகள்), நகராட்சிகள், உள்ளாட்சி அமைப்புகள், சட்டப்படியான நிறுவனங்கள் / கழகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் (நடுவண் அரசின் மற்றும் மாநில அரசின் நிறுவனங்கள்) போன்றவை, சரக்குகள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்து நுகர்வு செய்கின்றன*

*ஒரு நல்ல பொதுக் கொள்முதல் கொள்கையின் முதல் நோக்கம் என்னவென்றால் செயல்திறனை ஊக்குவிப்பது, அதாவது, இருப்பதிலேயே மிக மிகக் குறைவான விலை வைத்து விற்று வரும் விற்பனையாளரைத் தெரிவு செய்வது, ஒருவகையில் அரசு கொடுக்கும் பணத்திற்குச் சரியான மதிப்பிலான சரக்குகள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்து நுகர்வது ஆகும்*

*ஒரு நல்ல பொதுக் கொள்முதல்முறை, தவறான மேலாண்மைகளையும், மக்களின் வரிப்பணம் வீணாவதையும் தவிர்க்கிறது. (விற்பனையாளர்களிடையேயுள்ள) பொருள் வழங்குநரிடையேயுள்ள கடுமையான போட்டி, இந்த குறிக்கோள்களை எய்திட அரசுக்கு உதவுகிறது. மாறுபாடாக, எப்போதெல்லாம் போட்டி குறைக்கப்படுகிறதோ, எடுத்துக்காட்டாக விற்பனையாளர்கள், தாமே ஏலமோசயில் ஈடுபடும் போது, அரசுகள் நியாயமான விலைக்கும் கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருப்பதால் மக்களின் வரிப்பணம் வீணாகிறது.*

*மேலும், கொள்முதல் ஒழுங்குமுறை நெறிகள்,விற்பனையாளர்கள் இதுபோன்ற சூழ்ச்சியில் ஈடுபடுவதை எக்காரணம் கொண்டும் ஊக்குவிக்கக்கூடாது என்பதும் முக்கியமாகிறது. ஏலத்தின் நடத்தையை நிர்ணயிக்கும் விதிகள் கூட ஏலம் நடத்தப்படும் விதம், ஏலத்தின் வடிவமைப்பு ஆகியவை கூட போட்டியைத் தடுக்கவும் இது போன்ற ஏலசூழ்ச்சியை ஊக்குவிக்கவும் கூடும்.*

### பொது கொள்முதல்களில் போட்டி தொடர்பான உறுத்தல்கள்

*அரசின் கொள்முதல்களில் இருக்கும் உறுத்தல்களும், மற்ற சந்தைகளில் நடக்கும் ஏல நடவடிக்கைகளிலும் ஏலங்களில் ஒப்பந்தக்காரர்களிடேயே இருக்கும் ஒத்திசைவு போன்ற ஏலசூழ்ச்சிகளும், பெரிதும் ஒன்றாகவே இருக்கின்றன. அரசு கொள்முதல்களில் நிலைபெற்று இருக்கும் ஏலசூழ்ச்சிகளையும் அணிசேர்தல்களையும், கடந்த காலத்தில் இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கை அலுவலரின் (CAG) பல அறிக்கைகள், மத்திய லஞ்ச ஒழிப்பு ஆணையத்தின் (CVC) அறிக்கைகள் மற்றும் பல ஆய்வுகள் முன்னிலை படுத்துகின்றன.*

*அரசுகொள்முதலில் இருக்கக்கூடிய சம்பிரதாயமான விதிகள் ஒப்பந்தக்காரர்களின் இடையே தகவல் பரிமாற்றத்தை எளிதாக்குகின்றன, மேலும் அவர்களிடைய ஒத்திசைவையும் ஊக்குவித்து அதன் மூலம் போட்டித்தன்மையைக் குறைத்து, ஏலத்தின் மூலம் கொள்முதல் செய்வதின் சாதகங்களைக் குலைத்துவிடுகின்றன. நிறைய ஒப்பந்தக்காரர்கள் போட்டியில் உள்நுழையத் தடையாக இருப்பதுடன், கடுமையான விதிமுறைகள் கொண்ட கொள்முதல்களில், மற்ற சந்தையில் நடக்கும் ஏலங்களில் இருக்கக் கூடியது போன்ற ஏலசூழ்ச்சிகள், அரசு கொள்முதல்களிலும் எளிதாக வரக்கூடும்.*

*அரசுத்துறைகள் அமைக்கும் கொள்முதல்கள் போட்டியின் முக்கியத்துவத்தை மனதில் கொண்டு, இறுதியில் குறைந்த விலையையே கொடுக்கும் வகையில் அக்கொள்முதல்கள் அமைக்கப்படுவதில்லை என்பதை அடிக்கடிக் காண முடிகிறது. மேலும், சில கொள்முதல்களில், அவ்வமைப்பே, போட்டிக்கு எதிரான செயல்பாடுகளுக்கு வசதி செய்துதருகிறது. அரசு கொள்முதல்களில் உள்ள தனியியல்பு என்னவென்றால், கொள்முதல் பொறுப்பு அலுவலர்கள் இதுபோன்ற நேர்மையற்ற செயல்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள, விதிகளும் சட்டங்களுமே தடை செய்கின்றன. ஒரு தனியார் நுகர்வோர், தமது வாங்கும் திட்டத்தில் மாறுதல்கள் செய்து கொள்ள முடிகிறது. ஆனால், போட்டிக்கு எதிரான செயல்பாடுகளுக்கு எதிராக, விரைந்து நடவடிக்கை எடுக்க, கடுமையான சட்டத்திட்டங்களாலும் பல்வேறு நிலைகளில்/ மட்டங்களிலுள்ள விரிவான நிருவாக ஒழுங்குமுறை நெறிகள்/ வழிமுறைகளாலும் , அரசின் அமைப்புகளுக்கு வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. பொதுத்துறை நிறுவனத்தால், தனது விருப்பு உரிமையைத் தவறாகப் பயன்படுவதனைத் தவிர்ப்பதற்கான ஒரு முயற்சியாகவே இந்த விதிகள்*

*ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதேநேரம், கொள்முதலில் முழு வெளிப்படைத்தன்மையும் அதன் விளைவுகளும் ஒப்பந்தக்காரர்கள் ஒத்திசைந்து செயல்படுவதை ஊக்குவிக்க கூடும்.*

*ஒவ்வொர ஏலத்தின் போதும், அந்த ஏலத்தில் பங்குபெறுபவர்களின் முகவரிகள் மற்றும் ஏலத்தின் நிபந்தனைகள் போன்றவற்றை வெளிப்படையாக அறிவித்தால், ஒப்பந்ததாரர்கள், அவர்களிடையே உள்ள ஒப்பந்தத்தை மீறிச் செயல்படுபவர்களைக் கண்டறிந்து அவர்களை தண்டிக்கவும் எதிர்காலத்தில் வரக்கூடிய ஏலங்களில் நன்கு ஒத்திசைந்து செயல்படவும் வழி செய்கிறது.*

**பொதுக் கொள்முதலில் வணிகப் போட்டியின் முக்கியத்துவம்**

*திறமை மிக்க ஒரு பொதுக் கொள்முதல் கொள்கை, பலவாறான வழிகளில் வணிகப் போட்டியினைப் பாதிக்கக்கூடும்.*

*(i)* *வலிமையான வழங்குநர்களிடையே வணிகப் போட்டியின் மீதான குறுகிய கால விளைவுகள், அதாவது, ஒரு குறிப்பிட்ட ஏலத்தில், தற்போதிருந்துவரும் வழங்குநர்களிடையே வணிகப் போட்டியின் தீவிரத்தின் மீதான விளைவுகள் (பயன்கள்) என்பவை, நிகழக் கூடிய விளைவுகளில் ஒன்றாக இருக்கக் கூடுமேயொழிய, ஒரே விளைவாக மட்டும் அது இருந்து விடாது.*

*(ii)* *போட்டிக்கு எதிரான நடைமுறைகளின் உடனடித் தாக்கத்தினையும், தவிர (பொதுமக்களின் பணமிழப்பு) உள்ளூர்ச் சந்தையில், ஒட்டுமொத்தத் திறமையின் மீதான (திறன் மீதான) ஆழ்ந்த ஓர் விளைவும் அங்கு உள்ளது. ஒரு தொழில் பிரிவின் முக்கியக்கூறுகளை, பொதுக் கொள்முதல் பாதிக்கக் கூடும் என்பதனால், வணிகப் போட்டியின் மீதான மிக நீண்ட கால விளைவுகளை (பயன்களை) அது பெறக்கூடும். (அதாவது, புத்தாக்கத்தின் படிநிலை (அளவு) முதலீட்டின் அளவு செங்குத்தான ஒருங்கிணைப்பு போன்றவை) எதிர்கால ஏலங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகளில், போட்டியின் அளவினை இது மீண்டும் பிரதிபலிக்கும்.*

**பொதுக் கொள்முதலில் போட்டி முகமையின் பங்கு**

*பொதுக் கொள்முதலில் வஞ்சகக் கூட்டு உடன்படிக்கையினைக் குறைத்திட, வணிகப் போட்டி சட்டங்கள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மேலும், திறன்மிக்க கொள்முதல் வழிமுறைகளை வடிவமைக்கவும், வஞ்சகக் கூட்டு உடன்படிக்கையினைக் கண்டறியவும் உதவிடும் வகையில், அரசு கொள்முதல் செய்யும் பல்வேறு தளங்களிலுமுள்ள அனைத்து கொள்முதல் முகமைகளுக்கும் பயிற்சியளிக்கும் விதத்தில், இத்தகைய வணிகப் போட்டி சட்டங்கள் செயலாக்கப்பட வேண்டும்.*

*a.* **செயலாக்குதல்**

*அரசு கொள்முதல்களில் போட்டியை ஊக்குவிக்க, வணிகப் போட்டி ஆணையத்திற்கு நேரடியான வழி என்னவென்றால், ஏலசூழ்ச்சிகளைக் கண்டறிந்து சரி செய்யச் சட்டத்தைக் கடுமையாக (ஏல மோசடிகளைக்) அமல்படுத்துவதே! ஏலசூழ்ச்சிகளை நிறையக் கண்டறிந்து ஏலசூழ்ச்சிக்காரர்களைக் கடுமையாகத் தண்டிப்பதன் மூலம், வணிகப் போட்டி ஆணையம், ஏலச்சூழ்ச்சிகளை தடுக்கலாம். ஏனெனில் ஏல மோசடியில் ஈடுபடும் நிறுவனங்கள், ஏலசூழ்ச்சியில் ஈடுபடுவதில் வரும் லாபத்தைவிட, ஏலசூழ்ச்சி கண்டுபிடிக்கப்பட்டால், அவற்றிற்கு ஏற்படும் நட்டம் மிகுதி என்று அறிந்து கொள்ளும். பல நாடுகளின் சட்டங்களில், கொள்முதல்களின் போது, குறிப்பாக ஏலசூழ்ச்சியைத் தடை செய்யவோ, ஏலசூழ்ச்சியை கொள்முதல் விதிமீறல் எனக்கொள்ளவோ இடமிருக்கிறது. மற்ற நாடுகள் தங்களுடைய பொதுவான வணிகப் போட்டி சட்டங்களையே ஏலசூழ்ச்சிக்கு எதிராகப் பயன்படுத்துகின்றன. இந்தியாவில் 2002ஆம் ஆண்டு, வணிகப் போட்டி சட்டம், 3 (1) மற்றும் 3 (3) (d)ன் படியும், ஏலசூழ்ச்சியையும், (நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ)*

*போட்டியாளர்கள் வஞ்சகக் கூட்டு உடன்படிக்கையைச் செய்து கொண்டுஏலம் கேட்பதை தடை தடைசெய்கின்றது. பொதுக்கொள்முதல்களில், போட்டியைச் சிதைக்கும் நான்கு காரணிகளில் அது ஒன்றாக இருக்கிறது என்று நம்பப்படுகிறது.*

*போட்டியைச் சிதைக்கும் இது போன்ற ஏலசூழ்ச்சிகளை விசாரிக்க இந்திய வணிகப் போட்டி ஆணையத்துக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆணையத்தால், ஏலசூழ்ச்சியில் ஈடுபடும் தனிநபர் மீதோ அல்லது நிறுவனங்களின் மீதோ, அவர்களின் முந்தைய மூன்றாண்டுகளின் சராசரியான நிகரலாபத்தில் பத்து சதவிகிதம் வரையிலான ஒரு தொகையினை அபராதமாக அபராதம் விதிக்க முடியும்.*

*மேலும், இது போன்ற ஏலசூழ்ச்சியில் ஒரு வணிகத் தீகூட்டணி (சதி நோக்கிலான வணிகக் கூட்டணி)*

*ஈடுபட்டிருந்தால், அக்கூட்டணியில் உள்ள அனைத்து தயாரிப்பாளர்கள், விற்பவர்கள்,*

*விநியோகஸ்தர்கள், வணிகர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் என அனைவர் மீதும், அந்த கொள்முதல் நடக்கும் அனைத்து ஆண்டுகளிலும் அவர்களுக்குக் கிடைக்கும் லாபத்தில் மூன்று மடங்குகள் வரையோ அல்லது விற்றுமுதலில் (turnover) பத்து சதவிகிதம் வரை (இவ்விரண்டில் எது கூடுதலோ அதை) அந்த அளவிலான ஒரு தொகையினை அபராதமாக விதிக்கமுடியும்.*

*ஒரு வேளை ஏலசூழ்ச்சியில் ஈடுபடுவது ஒரு கம்பெனியாக இருந்தால், குற்றம் செய்த அதன் இயக்குநர்கள் / அலுவலர்கள் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கமுடியும்.*

*இது மட்டுமல்லாது, வணிகப் போட்டி சட்டம், பிரிவு 27ன் படி பின்வரும் ஆணைகளில் ஒன்றினையோ அனைத்தினையுமோ பிறப்பிக்கும் அதிகாரம் ஆணையத்துக்கு இருக்கிறது:*

- *தீகூட்டணியின் உறுப்பினர்களை அக்கூட்டணி ஒப்பந்தங்களை முறிக்கவும மீண்டும் ஒரு இதுபோன்ற ஒப்பந்தங்களில் ஈடுபடாமல் இருக்கவும் ஆணையிடும் அதிகாரம்.*
- *ஆணையம் குறிப்பிடும் அளவிற்கு ஒப்பந்தங்களை மாற்றம் செய்ய அதிகாரம்.*
- *குறிப்பிட்ட நிறுவனங்களை, ஆணையம் இடும் ஆணைகளுக்கும் ஆணையம் கூறும் வழிகாட்டுதல்களையும் (ஆன செலவிற்குப் பணம் கட்டுவது உட்பட) ஒப்புக்கொள்ள வற்புறுத்தும் அதிகாரம்.*
- *தேவைக்கேற்ப இது போன்ற ஆணைகளையோ அல்லது வழிகாட்டுதல்களையும் இட அதிகாரம்.*

***b. விழிப்புணர்வு/ ஆதரவு***

*ஏலத்தில் நடக்கக்கூடிய ஏலசூழ்ச்சியால் விளையும் சிக்கல்களைப் பற்றிய விழிப்புணர்வை ஊட்டும் முயற்சியில் பல கொள்முதல் முகமைகளும் ஈடுபட்டுள்ளன. கொள்முதல் செய்யும் நிறுவனங்களுக்கு, காலம் தவறாது (regular) சில முகமைகள், ஏலசூழ்ச்சியைப் பற்றிய கல்வித்திட்டங்களை (பயிற்சித் திட்டங்களை) அளிக்கின்றன. சில முகமைகள், குறிப்பிட்ட நோக்கத்திற்காக, தேவை ஏற்படும்போது கருத்தரங்குகளும் பயிற்சிப்பட்டறைகளையும் நடத்துகின்றன.*

*இந்த முயற்சிகள் மிகவும் பயனுள்ளதாக இருப்பதை பல காரணங்களால் உணர முடிகிறது.*

*(i)* *போட்டியை ஊக்குவிக்கும் அலுவலர்களுக்கும் கொள்முதல் அலுவலர்களுக்கும் இடையே ஒரு தொழில்முறை உறவை ஏற்படுத்துகிறது*

*(iii)* *முன்னர் நடந்த ஏலங்களில் ஏலசூழ்ச்சி எப்படி நடந்தது என்ற பாடங்களால் ஏலசூழ்ச்சியை எப்படிக் கண்டறிவது என கொள்முதல் அலுவலர்களால் கற்றுக்கொள்ள முடிகிறது.*

*(iv)* *ஏலசூழ்ச்சி நடப்பதையும் அதை எதிர்த்து வழக்கு நடவடிக்கைகள் எடுக்க சான்றுகளைத் திரட்டிடவும் கொள்முதல் அலுவலர்களால் கற்றுக்கொள்ள முடிகிறது*

*(iv)* *வரி செலுத்தும் மக்களுக்கும் அரசுக்கும் ஏலசூழ்ச்சி எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதனைக் கொள்முதல் அலுவலர்களும் அரசின் புலனாய்வாளர்களும் தெளிவாகக் கற்றுகொள்ள முடிகிறது.*

*(v)* *தவிர, கொள்முதல் அலுவலர்களை ஏலசூழ்ச்சியிலோ அது போன்ற சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளிலோ பங்குபெற வேண்டாம் என எச்சரிக்கிறது ஏனெனில் அவை கொள்முதல் ஏல ஒப்பந்தப் புள்ளிகளில் போட்டியினை மறைக்கேடு செய்வதாய் உள்ளன.*

***வஞ்சகக் கூட்டு உடன்படிக்கையினை ஆதரிக்க உதவும் தொழிலகம், தயாரிப்பு மற்றும் சேவை பன்புக் கூறுகள்***

*வஞ்சகக் கூட்டு உடன்படிக்கையினை முறைகேட்டுக்கு ஆளாகக்கூடிய பல்வேறு தொழில்களை / தொழிலகங்களை மற்றும் தயாரிப்பு பண்புக் கூறுகளை, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு (OECD) பட்டியலிட்டுள்ளது.*

*(i)* ***சிறிய எண்ணிக்கையிலான நிறுவனங்கள்**: சிறிய எண்ணிக்கையிலான நிறுவனங்கள் சரக்குகளை அல்லது சேவையினை வழங்கிடும்போது, ஆங்கு ஏல சூழச்சிக்குக் கூடுதல் வாய்ப்பு உள்ளத. விற்பனையாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கையில், எப்படி ஏலசூழ்ச்சி செய்வது என்ற ஒப்பந்தத்துக்கு வருவது அவர்களுக்கு எளிது.*

*(ii)* ***உள்நுழையக் கடினமான அல்லது நுழையவே முடியாத சந்தை**: ஒரு சந்தையினுள் அண்மையில் நுழைந்துள்ள அல்லது நுழைவதற்கு வாய்ப்புள்ள ஒரு சில வணிகங்கள் அத்தகைய நுழைவு செலவு பிடிக்ககூடியதாகவும், கடினமானதாகவும் அல்லது நுழையக் மெதுவானதாகவும் இருந்தால், அங்கு சில விற்பனையாளர்களே இருப்பர். அவர்கள் புதிதாக வரும் வலிமைவாய்ந்த விற்பனையாளர்களின் போட்டி அழுத்தத்தில் இருந்து பாதுகாப்பாக இருப்பதால், இது ஏலசூழ்ச்சிக்கு உகந்ததாகவும் இருக்கும்.*

*(iii)* ***சந்தை நிலவரங்கள்:** சந்தையில் 'தேவை மற்றும் அளிப்பில் (Demand and Supply)' ஏற்படும் திடீர் மாற்றங்கள் செயல்பாட்டில் இருக்கும் ஏலசூழ்ச்சிகளைக் குலைக்ககூடும். பொதுத்துறை நிறுவனங்களிடம் இருந்து வரும் நிலையான 'தேவைகள்' வஞ்சகக் கூட்டு உடன்படிக்கை அபாயத்தைக் கூட்டக் கூடும். அதேசமயம் பொருளாதார இடையூறுகள் அல்லது நிலையற்ற தன்மையை, அவர்கள் அனுபவிக்கக்கூடிய காங்களில், இழந்த வணிகங்களை ஈடு செய்ய, வஞ்சகக் கூட்டு உடன்படிக்கையிலமைந்த வணிகப் போட்டியினை இலாபங்களுக்காக அவர்கள் (போட்டியாளர்கள்) மேற்கொள்ளக்கூடும்.*

*(iv)* ***தொழில் கூட்டமைப்புகள்**: ஒரு வணிக அல்லது சேவை உறுப்பினர்களுக்கான போட்டி நிறைந்த பணி செயல் வகை, தர முன்னேற்றம், புதுமைகளைப் புதுமைகளைப் புகுத்தல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் நியாயமான காரணங்களுக்காக தொழில் கூட்டமைப்புகள் பயன்படுத்தப் படக்கூடும். ஆனால், நேர்மாறாக,வர்த்தக நிறுவனங்களின் அலுவலர்கள், இக்கூட்டமைப்பின் வழக்கமான சந்திப்புகள் என்ற போர்வையில் கூடி, ஏலசூழ்ச்சி ஒப்பந்தங்களை இறுதி செய்யவும், போட்டித்தன்மைக்கு எதிராகச் செயல்படவும் இத்தொழில் கூட்டமைப்புகள் பயன்டுத்தப்பட்டு வந்துள்ளன.*

*(v)* *திரும்ப **நிகழ்த்தும் ஏலங்கள் / ஏலக் கேட்புகள்** : திரும்பத் திரும்ப நடக்கும் கொள்முதல்கள் வஞ்சகக் கூட்டு உடன்படிக்கைக்கான வாய்ப்புகளைக் கூட்டுகின்றன. இந்த ஏலங்கேட்புக் கால அளவு, ஒப்பந்ததாரர்கள் தங்களுக்கிடையே ஏலங்களைப் பிரித்துக் கொள்ள வகை செய்கிறது. அது மட்டுமல்லாது தீக்கூட்டணியின் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் ஏமாற்றிக்கொண்டால், ஏமாற்றியவரைத் தண்டிக்க அவர் கேட்க வேண்டிய ஏலத்தை மற்றவர்கள் கேட்க முடியும். இவ்வாறாக, திரும்பத் திரும்பத் தொடர்ந்து தவறாது நடக்கும் கொள்முதல்களில் வஞ்சகநோக்குடன் கூடிய ஏல ஒப்பந்தங்களைத் தடுக்க தனி வழிமுறைகளுடன் புலனாய்வு மேற்கொள்ள தேவைப்படும்.*

*(vi)* ***'சாதாரண அல்லது ஒரேவிதமான' சரக்குகள் அல்லது சேவைகள்**: தனியர்களோ அல்லது நிறுவனங்களோ விற்கும் சரக்குகள் அல்லது வழங்கும் சேவைகள் ஒரே மாதிரியாக அல்லது ஒன்றுபட்டதாக இருந்தால், நிறுவனங்களுக்குப் பொதுவான ஒரு விலையை நிர்ணயம் செய்வது எளிது.*

*(vii)* ***மாற்றுகள் இன்மை அல்லது மிக மிகக் குறைந்த வாய்ப்புகள்**: கொள்முதல் செய்யப்பட்டு வரும் அல்லது பெறப்பட்டு வரும் சேவைக்கு இணையாக அமைந்துள்ள மாற்றுப் பொருள்கள் அல்லது சேவைகள் சந்தையில் ஏதுமில்லாதபோது அல்லது மிகமிகக் குறைவாகக் கிடைக்கும் போது கொள்முதல் செய்பவருக்கு வழியேதுமில்லை என்பதை அறிந்து கொண்டு, தனியர்கள் அல்லது நிறுவனங்கள், பொருள்களை விலையேற்றி விற்பதற்கான முயற்சிகளில் பெற்றி பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.*

*(viii)* ***சிறிதளவிலான அல்லது ஏதுமற்ற தொழில் நுட்பம் சார்ந்த மாற்றம்**: கொள்முதல் செய்யப்படும் சரக்கு/சேவைகளில் பல ஆண்டுகளாக, கிட்டத்தட்ட புதிய தொழில்நுட்பமே புகுத்தப்படாமல் இருக்கும் நிலை, நிறுவனங்கள் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு, சில காலம், அதை அப்படியே பேணி வர உதவுகிறது.*

***ஏலசூழ்ச்சிக்கான எச்சரிக்கை சமிஞ்சைகள்***

***பின்வரும்** காரணிகள் **ஏலசூழ்ச்சிகளைக் கண்டறிய உதவும்**:*

***(i) ஏலங்களில்***

- *அதே வழங்குநர் அனைத்து ஏலங்களிலும் குறைவான விலைக்கு ஏலங்கேட்பவராக இருக்கிறார்.*
- *ஒப்பந்ததாரர்களிடையே நிலப்பகுதிவாரியான பங்கு பிரிப்பு இருத்தல். சில நிறுவனங்கள் ஏலத்திற் வெற்றி பெறக் கூடிய குறிப்பிட்ட சில நிலப்பகுதிகளில் மட்டுமே ஏல ஒப்பந்தப்புள்ளிகளை வழங்குகிறார்கள்.*
- *எதிர்பார்க்கப்பட்ட ஒரு ஏலதாரர் ஏலங்கேட்பில் வேண்டுமென்றே ஒப்பந்தப்புள்ளியைச் சமர்ப்பிக்கத் தவறி ஆனால், பிற ஏலங்களில் அத்தகைய ஏலங்கேட்புப் புள்ளிகளைத் தவறாது (தொடர்ந்து) வழங்குவார்*
- *எதிர்பாராவிதமாக சில ஏலதாரர்கள் ஏலத்திலிருந்து பின்வாங்கினால்.*
- *சில நிறுவனங்கள் எப்போதும் ஏலத்தில் பங்குபெற்றாலும் ஒருபோதும் ஏலத்தில் வெல்லாமல் இருந்தால்.*
- *ஒவ்வொரு நிறுவனமும் அவர்களுக்கிடையில் முறைபோட்டுக் கொண்டது போல ஏலங்களில் வென்றால்.*
- *இரண்டோ அதற்கு மேற்பட்ட நிறுவனங்களோ அவற்றுள் ஒரு நிறுவனமோ தனித்து ஏலம் கேட்பதில் வென்றிருக்க முடியும் என்றாலும் கூட்டாக ஏல ஒப்பந்தப் புள்ளியை வழங்கினால்ஏலத்தில் வெல்பவர் தொடர்ச்சியாக தோற்றவர்களுக்கு உள்ஒப்பந்தங்கள் (sub-contracts) கொடுத்தால்.*
- *வென்றபின் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளாமல் விலகும் ஒப்பந்ததாரர் பிற்பாடு உள் ஒப்பந்ததாரர் எனத் தெரிய வந்தால்.*
- *ஏலத்தில் பங்கு பெறும் போட்டியாளர்கள் ஒப்பந்தபுள்ளிகளைப் பதிவு செய்ய அளிக்கப்பட்டுள்ள இறுதி நாளுக்கு முன்னர் நன்கு பழகுவது அல்லது கூடிப்பேசினால்.*

***(ii) ஆவணங்களில்***

***மிகவும் கவனத்துடன் ஒப்பந்த ஆவணங்களில் ஒரே ஒரு ஆளோ அல்லது கூட்டாகவோ ஒப்பந்த ஆவணங்களைத் தயாரித்ததற்கான சான்றுகள் இருக்கிறதா என்று சோதிக்கவேண்டும்.***

- *பல நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒன்றுபோல தவறுகளோ அல்லது எழுத்துப்பிழைகள் இருப்பது.*
- *பல நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒன்றுபோல கையெழுத்து இருப்பது அல்லது ஒரேவிதமான எழுத்துருவோ அல்லது காகிதமோ பயன்பட்டிருப்பது.*
- *ஒரு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், போட்டியாளர்களின் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களைக் குறிப்பிட்டால், அல்லது, இன்னொரு நிறுவனத்தின் அலுவலகக் கடிதத்தாளில் அச்சிட்டிருந்தால் அல்லது தொலைநகல் எண்ணைக் குறிப்பிட்டு இருந்தால்.*
- *பல நிறுவனங்களிடமிருந்து வரும் ஒப்பந்தப்புள்ளிகளில் அதே தப்புக்கணக்கு இருந்தால்.*
- *பல நிறுவனங்களிடமிருந்து வரும் ஒப்பந்தப்புள்ளிகளில் சில பொருட்களின் விலை ஒன்றுபோலவே கணக்கிடப்பட்டு இருந்தால்.*
- *ஒப்பந்தப்புள்ளிகளைத் தாங்கி வரும்சிப்பங்கட்டுகள் ஒன்றுபோல் இருந்தால் அல்லது அஞ்சல் முத்திரைப் பொறியின் முத்திரைப் பதிப்புகள் ஒன்றுபோல் இருந்தால்*

- *பல நிறுவனங்களிலிருந்து பெறப்படும் ஏல ஆவணங்களில் அழிரப்பர் கொண்டோ, கையினாலோ திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன போல் இறுதி நேரத்தில் பல சரிக்கட்டல்கள் காணப்பட்டால்*

- *பல நிறுவனங்கள் சமர்ப்பிக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் எதிபார்ப்புக்கும் குறைவான தகவல்களைக் கொண்டிருந்தாலோ அல்லது பிற உண்மையற்ற தன்மைகள் காணப்பட்டாலோ.*

***(iii)*** **ஏல ஒப்பந்தப்புள்ளியில் விலை நிர்ணயிப்பது**

- ***ஒப்பந்தப்புள்ளிகளை நுணுக்கமாகக் கவனித்தால்*** *வஞ்சகக் கூட்டு உடன்படிக்கையினைக்* ***கண்டுபிடிக்க இயலும்****. ஏலத்தில் வென்றுள்ள ஏலதாரர் குறிப்பிட்டிருக்கும் விலையை விட மற்ற ஏலதாரர்களின் விலை****மிகவும் கூடுதலாக இருந்தால்*** *ஏலதாரர்கள் ஏலசூழ்ச்சியில் (cover bidding) ஈடுபட்டிருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு!. ஏலதாரர்கள்* ***சொல்லும் விலை கணக்கீட்டுகளை விடக்கூடுதலாகவோ இது போன்ற முந்தைய ஏலங்களில் கேட்ட விலையை விடவும் கூட*** *இருந்தாலோ* ***அது*** *வஞ்சகக் கூட்டு உடன்படிக்கையினைக்* ***குறிக்கும்****.* ***பின்வருவனவற்றை, சந்தேகக் கண் கொண்டு பார்க்க வேண்டும்****:*

- *திடீர் விலையேற்றம் அல்லது ஏலதாரர்கள் கூட்டிய விலையை, அவர்கள் காட்டும் உற்பத்திச் செலவால் நியாயப்படுத்த முடியவில்லை என்றால்.*

- *வரவேண்டியிருந்த தள்ளுபடிகள் திடீரென்று மறைந்துவிட்டால்.*

- *ஒரே விலை நிருணயம் இருந்தால் அது கவனிக்கப்படவேண்டியது, குறிப்பாகப் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்று உண்மையாக இருந்தால், அது கண்டிப்பாகக் கவனிக்கப்படவேண்டியது:-*

    - *பொருள்கள் வழங்குநர்கள் விலை பலகாலமாக ஒன்றாகவே இருந்தால்.*

    - *பொருள்கள் வழங்குநர்களின் விலை ஒன்றுக்கொன்று முன்பு மாறுபட்டிருந்தால்.*

    - *பொருள்கள் வழங்குநர்கள் விலையை ஏற்றியதற்கு நியாயப்படுத்துகின்ற வகையில்அவர்களுடைய உற்பத்திச் செலவு கூடாமல் இருந்தால்.*

    - *ஒரு சந்தையில் வரலாறு படைக்குமளவிற்கு தள்ளுபடிகள் வழங்கப்பட்ட போது தள்ளுபடிகள் கொடுத்து வந்த சரக்கு வழங்குநர்கள் தள்ளுபடியை நீக்கிவிட்டால்.*

- *வென்றவர் சொல்லும் விலைக்கும் மற்றவர்களின் விலைக்கும் மிகப் பெரிய அளவிலான வேறுபாடு இருந்தால்.*

- *ஒரு குறிப்பிட்ட பொருள் வழங்குநர் கேட்கும் விலை இதே போன்ற வேறு சில ஏலங்களில் அவர் கேட்பதைவிட மிகவும் கூடுதலாக இருந்தால்.*

- *பொதுவாக ஏலங்களில் பங்கு பெறாத அல்லது புதிதாக ஒரு ஒப்பந்ததாரர் பங்கெடுக்கையில், மற்றவர்கள் குறிக்கும் விலை வெகுவாகக் குறைவது. எடுததுக்காட்டு: ஏற்கனவே இருந்த தீகூட்டணியின் சதி உடன்படிக்கையை புதிதாக வந்தவர் பாதித்திருக்கலாம்.*

- *உள்ளூர் ஒப்பந்ததாரர் தொலைதூரத்துக்கு அனுப்ப வேண்டிய சரக்கு/ சேவைகளுக்குக் குறிப்பதை விட, உள்ளூரில் கொடுக்க வேண்டிய சரக்கு/சேவைகளுக்கு விலை கூடுதலாக வைத்திருந்தால்.*

- *உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களின் 'சரக்குகளை அனுப்பும்' செலவு ஒன்றுபோலவே இருந்தால்.*

- *ஏலத்திற்கு முன் ஒரே ஒரு ஒப்பந்ததாரர் மட்டுமே 'மொத்த' விற்பனையாளரிடம் விலை விவரங்கள் கேட்டால்.*

- *ஒப்பந்ததாரர்கள் மின்னணு முறையிலான அல்லது பிறமுறைகளிலான ஏலங்களில் விலைகளை முழு எண்களாக அதாவது நூறுகளாகவோ அல்லது ஆயிரங்களாகவோ ஏலம் கேட்காமல் குறிப்பிட்ட எண்களாகக் கேட்டால், ஒப்பந்ததாரர்கள் அவர்களுடைய ஒத்திசைவுக்கு வஞ்சக உடன்படிக்கைக்கு அதாவது தங்களுடைய விருப்பங்களை அல்லது தகவலைப் பரிமாற, ஏலத்தையே ஊடகமாகப் பயன்படுத்தலாம்.*

***(iv) ஏலதாரர்களின் அறிக்கைகளில்***

*விற்பனையாளர்களுடன் பணிபுரியும் போது, நிறுவனங்கள் தங்களுக்கள் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளதா அல்லது அவர்களது விலைகளை அல்லது விற்பனை நடைமுறையை ஒருங்கிணைத்திருப்பதாக உணர்த்தக்கூடிய சந்தேகத்திற்கரிய வாசகங்கள் அல்லது அறிக்கைகள் உள்ளனவா என்று மிகக் கவனமாகப் பார்த்திட வேண்டும்.*

*(v) ஏலதாரர்களின் நடத்தையில்.*

*விலையைப் பற்றி விவாதித்திட ஒரு வாய்ப்பைப் பெறுகிற கூட்டங்கள் அல்லது நிகழ்ச்சிகள் அல்லது, பிற நிறுவனங்களுக்கு ஆதாயம் கிடைக்கும் பொருட்டே ஏதாவது ஒரு நிறுவனம் எதுவும் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருவதை உணர்த்தும் வகையில் ஐயத்திற்கு இடமான குறிப்புகள் கிடைக்கின்றனவா என்று கவனித்துப் பாருங்கள்!*

***ஐயப்படக்கூடிய நடத்தையின் வடிவங்கள் பின்வருவனவற்றை உள்ளிட்டதாக இருக்கக் கூடும்:***

- *ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்பிப்பதற்கு முன் ஒப்பந்ததாரர்கள் இரகசியமாக பேசுவது; சில நேரங்களில் இச்சந்திப்புகள் ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பிக்கும் அமைவிடத்துக்கு அருகிலேயே நடக்கும்.*

- *ஒப்பந்ததாரர்கள் வழக்கமாக ஒரு இடத்தில் நட்புமுறையில் சந்தித்து பேசுவர் அல்லது வழக்கமாகத் தவறாமல் சந்தித்து பேசுவதுபோல் தோன்றுவர்.*

- *ஒரு நிறுவனம் தனக்கும் போட்டியாளருக்கும் மட்டுமே ஏலம் நடத்த வேண்டுவது.*

- *ஒரு நிறுவனம் போட்டியாளருக்கும் சேர்த்து ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிப்பது.*

- *ஏலத்தில் அரசு கோருவதை நிறைவேற்ற வாய்ப்பில்லாத ஒரு நிறுவனம் ஏலத்தில் பங்கு பெறுவது.*

- *ஒரு நிறுவனம் பல ஒப்பந்தப்புள்ளிகளை ஏலத்துக்கு எடுத்துவந்து ஆனால் போட்டியாளர்களைக் கண்டவுடன் எந்த ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிப்பது என்று முடிவு செய்வது.*

- *கொள்முதல் செய்யும் நிறுவனத்தை பல ஏலதாரர்கள் அனைவரும் ஒன்று போல் தகவல் கேட்பது அல்லது வேண்டுகோள்கள் வைப்பது.*

***ஏல மோசடியினைக் கண்டறிய, கூடுதல் தகவல் பட்டியல்:***

*இவற்றில் கவனமாக இருக்கவும்:*

- *தங்களுக்கிடையே தகவல் பரிமாற ஒப்பந்ததாரர்களுக்கான வாய்ப்புகள்.*

- *ஒப்பந்ததாரர்களுக்கு இடையேயான உறவுகள்*

- *ஏலம் கேட்கும் மற்றும் விலை நிர்ணயம் செய்யப்படும் பாங்குகளும் ஐயத்திற்கிடமான வகையில் இருந்தால் (எகா: திடீர் விலையேற்றம் அல்லது திடீர் தள்ளுபடி குறைப்பு) தருவது)*

- *அசாதாரணமான நடத்தை (எகா: ஏலத்திலிருந்து திடீர் விலகல் அல்லது ஒப்பந்தப்புள்ளியை தகவல் குறைபாடோடு சமர்ப்பிப்பது.*

*ஏலமோசடியினைத் தவிர்க்க,கொள்முதல் திட்டத்தை வடிவமைக்கும் போதே ஏலசூழ்ச்சியைத் தவிர்க்க சரி பார்ப்புப் பட்டியல் ஒன்றினைப் பயன்படுத்த முடியும். இதனை மற்ற பொதுத்துறை நிறுவனங்களும் பிற அரசு நிறுவனங்களும் பயன்படுத்தலாம். அந்தப் சரிபார்ப்புப் பட்டியல் பின்வருவன போல இருக்கலாம்:*

- *சந்தையைப் பற்றியும் ஒப்பந்ததாரர்களைப் பொருள் வழங்குநர்கள் பற்றியும் நன்கு தெரிந்துகொள்ளுங்கள்.*

- *ஆற்றல்மிகு ஏலதாரர்களின் பங்கேற்பு எண்ணிக்கையைக் கூட்டுங்கள்.*

- *தேவைகளை நன்றாக விளக்கிவிடுங்கள்; கணிப்புகளை / யூகங்களைத் தவிர்த்திடுங்கள்!*

- *ஏலதாரர்கள் இடையே தகவல் பரிமாற்றத்தைக் குறையுங்கள்.*

***ஏலத்தொகை சுயநிர்ணயச் சான்று** ஒன்றினை **பிரமாணப் பத்திரமாக ஒவ்வொரு** ஒப்பந்ததாரரையும் பின்வரும் உறுதிமொழியோடு கொடுக்கச் சொல்லுங்கள்:*

- *ஏலத்தொகையை அவர் போட்டியாளர்களுடன் பேசி முடிவெடுக்கவில்லை.*

- *அவர் குறிப்பிடும் ஏலத்தொகையின் விவரத்தை எந்த ஒரு போடியாளருக்கும் கூறவில்லை*

- *பிற போட்டியாளர்களுடன் அவர் வஞ்ச உடன்படிக்கையினை ஏற்படுத்திக் கொள்ள பிறருடன் இணையவோ, ஏலசூழ்ச்சிக்கு வித்திடும் எந்த ஒரு முறையிலும் செயல்படவோ ஒப்புக்கொள்ளவில்லை*

- *பிற போட்டியாளர்களை ஏலமோசடியில் ஈடுபடுமாறு அவர் முயலவில்லை.*

**ஏல மோசடி இடர் வாய்ப்பினைக் குறைக்கும் வழிமுறை**

*(i). உங்களுக்குத் தேவையான சரக்கு / சேவைகள் பற்றிய அனைத்துத் தகவல்களையும் சேகரியுங்கள் / திரட்டுங்கள்*

- *ஒருவர் கொள்முதல் செய்யும் சந்தையின் பண்புக் கூறுகள் குறித்து விழிப்புடன் இருங்கள்! ஏலத்தின் போட்டியினை பாதிக்கக்கூடிய அண்மைத் தொழில் செயல் நன்மைகள் குறித்தும் அல்லது, போக்குகள் குறித்தும் மிகுந்த கவனத்துடன் இருங்கள்!*

- *ஒருவர் கொள்முதல் சந்தையில், வஞ்சகக் கூட்டுக்கு வாய்ப்பான பண்புக் கூறுகள் உள்ளனவா என்பதைத் தீர்மானியுங்கள்!*

- *வலிமைவாய்ந்த, பொருள் வழங்குநர்கள், அவர்களது தயாரிப்புகள் / சரக்குகள், அவற்றின் விலைகள் ஆகியவை குறித்துத் தகவல்களைச் சேகரியுங்கள்! இயன்றால் குறிப்பிட்ட வஇ]hகளை விட்டு விட்டு, வேறு சில வணிகர்களிடம் கொள்முதல் செய்தால், அதே வகையான பொருள்களை என்ன விலைக்கு வாங்கமுடியும் என்று ஒப்பிட்டுப் பாருங்கள்!*

- *அண்மையில் ஏற்பட்டுள்ள விலை மாற்றங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுங்கள்! பிற ஊர்களில் / மாநிலத்தில் நீங்கள் வாங்கப் போகும் சரக்குகளின் விலையையும் அவற்றிற்கு மாற்றாகக் கொள்முதல் செய்ய இயலக்கூடிய சரக்குகளின் விலையினையும் தெரிந்து கொள்ளுங்கள்! பிறரிடமும் தெரிவியுங்கள்!*

- *இதே சரக்கு / சேவைகளுக்கான முந்தைய ஏல ஒப்பந்த புள்ளி குறித்த அல்லது அதேபோன்ற பொருள்கள் குறித்த தகவலைச் சேகரியுங்கள்*

- *சந்தை மற்றும் அதன் பங்கேற்பாளர்கள் பற்றி, உங்களது புரிந்து கொள்ளும் திறனை மேம்படுத்திக் கொள்ள, அண்மையில் அது போன்ற சரக்குகளை வாங்கியுள்ள / சேவைகளைப் பெற்று வந்துள்ள பொதுத்துறைப் பிரிவில் கொள்முதல் செய்வாரோடும் வாடிக்கையாளர்களுடன் ஒருங்கிணைத்துக் கொள்ளுங்கள்.*

- *விலைகளை அல்லது செலவுகளை மதிப்பீடு செய்வதற்குத் தமக்கு உதவிட, வெளியிலிருக்கும் ஆலோசகரர்களை ஒருவர் பயன்படுத்திக் கொண்டால், அவர்களுக்குள் இரகசிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன என்று உறுதி செய்து கொள்ளுங்கள்.*

*(ii).* *அதிகபட்ச வலுமிக்க ஏலதாரர்களின் பங்கேற்பினை ஊக்குவியுங்கள்!*

- *தகுதியுள்ள ஏலதாரர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் தேவையற்ற தடைகளை நீக்குங்கள்!*

- *கொள்முதல் ஒப்பந்தத்தின் அளவு மற்றும் பொருளடக்கத்திற்குச் சரியான விகிதத்திலான குறைந்தபட்சத் தேவைகளைக் குறிப்பிடுங்கள்! ஒரு ஏல ஒப்பந்தப் புள்ளியை வழங்கலாமென்று கருதக் கூடிய நிறுவனங்களின் அளவு, உட்கூறு அல்லது இயல்பு ஆகியவை போன்ற, பங்கேற்புக்கு தடை ஒன்றினை ஏற்படுத்தக்கூடிய குறைந்த பட்சத் தேவைகளைக் குறிப்பிடாதீர்கள்.*

- *ஏலம் கேட்பதற்கு மிகப் பெரும் தொகையிலான பணப் பொறுப்புறுதிகள் கோரப்படுவதை, ஒரு நிபந்தனையாக்குவது என்பது, மற்ற வகையில் தகுதிவாய்ந்தி சிறி ஏலதாரர்கள், ஏல வழிமுறையில் நுழைவதிலிருந்து தடுத்திடலாம் என்பதைக் கவனியுங்கள்! அந்த அளவிற்கான தொகைக்கு மட்டுமே பணப் பொறுப்புறுதியினை உறுதி செய்யுங்கள்! இயலும் போதெல்லாம், கொள்முதலில் வெளிநாட்டுப் பங்கேற்புகளைத் தடுக்கும் கட்டுப்பாடுகளைக் குறைத்திடுங்கள்!*

- *முன்னதாகவே ஒரு தகுதி பெற்ற குழுவிற்கு இடையே, ஏல மோசடிகளைத் தவிர்க்கவும் ஏலத்தில் பங்கு பெறுபவர்களுடைய எண்ணிக்கை மற்றும் அடையாளங்களைப் பொறுத்த வரையில் நிறுவனங்களுக்கிடையே உறுதியற்ற தொகையினை அதிகரிக்கவும் கொள்முதல் வழிமுறையின் போது ஏலதாரர்களை இயன்ற வரையில் தகுதி பெறச் செய்திடுக. ஏலதாரர்களின் தகுதிக்கும் ஏலம் விடப்படும் ஏலம் வழங்கப்படும் (ஏலதாரர் ஏல பயனைப் பெறும்) நடவடிக்கைக்குமிடையே, நீண்டகால இடைவெளி விடப்படுமானாளல், அது ஏல மோசடிக்கு வழிவகுக்கலாம்.*

- *ஏலத் தயாரிப்புச் செலவுகளைக் குறைத்திடுக! இதனைப் பல வழிகளில் வெற்றிகரமாக நிறைவேற்றிட முடியும். ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதை முறைபடுத்தலாம். (எ.கா ஒரே விண்ணப்பபடிவம் கொடுப்பது, ஒரேவிதமான விவரங்கள் கேட்பது போன்றன)*

- *கொள்முதல்களை குழுவாக (அதாவது பல திட்டப்பணிகளில் இருந்து) அமைத்து ஏல ஒப்பந்தப்புள்ளிகள் தயாரிக்கும் செலவைக் குறைப்பது.*

- *அங்கீகரிக்கப்பட்ட (அல்லது அரசு சான்றிதழ் பெற்ற) ஒப்பந்ததார்களின் அதிகாரப் பூர்வமான பட்டியலை பயன்படுத்துவது.*

- *ஏல ஒப்பந்தப் புள்ளிகள் தயாரிக்கவும், சமர்ப்பிக்கவும் போதிய கால அவகாசம் கொடுப்பது.*

- *எடுத்துக்காட்டாக, வரப்போகும் கொள்முதல்கள் பற்றி இணையதளங்கள் அல்லது அத்துறை சார்ந்த நாளேடுகளில் வெளியிடுவது.*

- *வாய்ப்பு இருப்பின் இணையம் வழியாக ஏலத்தை நடத்துவது.*

- *முடிந்தவரையில் ஒரு முழு ஒப்பந்தத்தின் மீது அல்லாமல், அதன் சில குவியல்களின் மீதோ, அதன் சேர்க்கைகளின் மீதோ, ஒப்பந்தப் புள்ளிகளை அனுமதியுங்கள்*

- *ஏலதாரர்கள், அண்மையில் நடந்த ஓர் ஏல ஒப்பந்தப் புள்ளியை அளிக்கத் தவறியிருந்தால் (அதற்காக) அவர்களை எதிர்கால ஏலப்போட்டிகளில் கலந்து கொள்வதிலிருந்து தகுதிநீக்கம் செய்யாதீர்கள். அல்லது ஏலதாரர்களின் பட்டியலிலிருந்து அவர்களது பெயர்களை நீக்கி விடாதீர்கள்.*

- *பங்கேற்கும் ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கையில் சற்று தளர்வாக இருங்கள். எடுத்துக்காட்டாக ஐந்து பங்கேற்பாளர்கள் தேவை என்று தொடங்கும் நீங்கள், தொடங்கும் கொள்முதலில் மூவர்தான் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பித்து இருந்தார்கள் என்றால் இம்மூன்றில் இருந்து போட்டியின் பலனைக் கிடைக்கச் செய்யமுடியுமா என்று பாருங்கள். மாறாக, ஐவர் தான் வேண்டும் என்று உறுதியாக இருந்து முதலில் இருந்து மீண்டும் தொடங்கினால் இதுவே, இங்கு போட்டியே அரிதானது என்பதை எடுத்துக்காட்டி விடும்.*

***(iii) பணியாளர்களைப் பயிற்றுவியுங்கள்!***

- *ஆண்டுக்கு அல்லது காலாண்டுக்கு ஒருமுறை என, ஏலசூழ்ச்சியையும் தீகூட்டணியையும் கண்டறிய உங்கள் அலுவலர்களுக்கு பயிற்சிப் பட்டறைகளை 'போட்டி' முகமையின் அல்லது வெளியேயுள்ள சட்ட ஆலோசகர்களின் உதவியுடன் நடத்துங்கள்*

- *முந்தைய ஏலங்களின் (அல்லது கொள்முதல்களுக்கான ஏலங்களின்) தன்மைகளைப் பற்றிய தகவல்களைச் (எ.கா: வாங்கப்பட்ட சரக்கு/ பெறப்பட்ட சேவை, ஒவ்வொரு ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, வென்றவரின் முகவரி) சேமித்து வைத்துக் கொள்ளுங்கள்.*

- *சரக்குகளைக் கொள்முதல் செய்ய சேவைகளைப் பெற்றிட நடத்தப்பட்ட முந்தைய ஏலங்களின் விவரங்களை, குறிப்பாக ஏலச் சூழ்ச்சி இருக்குமென ஐயுறத்தக் துறைகளில், ஆய்ந்து, அத்தகைய (ஐயத்திற்கிடமாக) பாங்குகளைக் கண்டறிய முயலுங்கள்.*

***(iv) தேர்ந்தெடுத்த ஏல ஒப்பந்தப் புள்ளிகளை அவ்வப்போது மறுமதிப்பீடு செய்யும் கொள்கையினைக் கொள்ளுங்கள்.***

- *கொள்முதல் செய்ய ஏல ஒப்பந்தப் புள்ளிகளை வழங்கிட ஏலத்தில் பங்கேற்றிட ஆர்வம் தெரிவித்துள்ள நிறுவனங்களின் பட்டியல்கள், உள் ஒப்பந்தக்காரர்களைப் பயன்படுத்ததல் மற்றும் ஒப்பந்தப் புள்ளிகளைத் திரும்பப் பெறுவது போன்றவற்றைக் கண்டறிய ஏல ஒப்பந்தப் புள்ளிகளை வழங்கியுள்ள நிறுவனங்கள் இவற்றுக்கிடையே ஒப்பீட்டுச் சரிபார்ப்புகளை மேற்கொள்ளுங்கள்!*

- *தற்போது பங்கேற்காத அல்லது வெற்றியடையாத ஒப்பந்ததாரர்களுடன் கலந்துரையாடுங்கள்.*

- *ஒப்பந்ததாரர்கள் போட்டித்தன்மை பற்றிய புகார்களைத் தெரிவிக்க அமைப்பு ஏற்படுத்துங்கள். எடுத்துக்காட்டாக, ஒரு அலுவலரையோ அல்லது அலுவலகத்தையேத் தெளிவாகக் கண்டறிந்து அவரிடம் அல்லது அதனிடம் அவர்களைப் பற்றிய விவரங்களைக் கொடுத்து புகார்களைப் பதிவு செய்யச் சொல்லுங்கள். பொருத்தமான அளவிலான இரகசியப் பாதுகாப்பினையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.*

- *நிறுவனங்களிடமிருந்தும் அவற்றின் ஊழியர்களிடமிருந்தும் ஏல மோசடி குறித்த தகவினைச் சேகரித்திட, தகவல் தெரிவிப்பு அமைப்பு போன்ற பணி வழிமுறைகளைப் பயன்படுத்துங்கள்.*

- *வலுவான வஞ்சகக் கூட்டு உடன்படிக்கை பற்றிய தகவல் தெரிந்தால், அதனைத் தெரிவிக்கக் கோரி, நிறுவனங்களுக்கு ஊடகங்களில் வேண்டுகோள் விடுங்கள்.*

- ***தகவல் தெரிவிப்பாளர் பாதுகாப்பு**: கொள்முதல் முகவாண்மையின் உள்ளகக் கணக்குத் தணிக்கைக் குழு மற்றும் கணக்கு தணிக்கை அதிகாரிக்கும் கூடுதலாக, ஐயப்பாட்டிற்குரியய அறிக்கைகள் அல்லது நடத்தை குறித்து வணிகப் போட்டி ஆணையத்துக்குத் தகவல்*

*தெரிவிக்கும் அலுவலர்களை, அவ்வாறு தெரிவிப்பதனைத் தூண்டிட, ஊக்குவிப்புகள் ஏற்படுத்தித் தருவதனைக் கருதிப் பார்க்க வேண்டும்.*

- *வணிகப் போட்டி ஆணையத்துடன் கூட்டுறவு முறையிலான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்!*

*(v)* ***கொள்முதலில் உங்களுடைய தேவை என்ன என்பதனைத் தொடக்கத்திலேயே தெளிவுபடுத்திவிடுங்கள் (ஏனெனில் பொருள் வழங்குநர்கள் உங்களது முக்கியக் கூற்றுகளுக்கு தங்களுக்குச் சாதகமாக பொருள் கற்பித்துக்கொள்வதைத் தவிர்க்க)***

*(vi)* ***ஒப்பந்தப்புள்ளிகளை ஆய்வு செய்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவு** ஏலதாரர்கள் **ஏலத்தில் நிறைய பங்கு பெறும்படி இருக்கவேண்டும்.***

***ஏலசூழ்ச்சியின் இருப்பைப் பற்றிய ஐயம் வந்தால் கொள்முதல் அலுவலர்கள் செய்யவேண்டியவை***

- *2002 ஆம் ஆண்டு வணிகப் போட்டி சட்டத்தினைப் பற்றியும் அது தொடர்பான பொதுக் கொள்முதல் சட்டங்களைப் பற்றியும் ஒரு செயல்முறையிலான அறிவைப் பெறுங்கள்.*
- *ஐயத்திற்கிடான பங்கேற்பாளர்களுடன் ஒருவரது கவலைகளைப் பற்றி விவாதிக்காதீர்கள்!*
- *ஏல ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், கடிதங்கள், உறைகள் முதலியவை (ஆகியவை) உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் வைத்திருங்கள்!*
- *ஐயத்திற்கிடமான நடத்தை/நிகழ்வுகள்/ வாக்குமூலம் ஆகியவற்றை ஆவணங்களாக வைத்துக்கொள்ளுங்கள்*
- *உங்களுடைய அலுவலகத்தின் சட்ட ஆலோசகருடன் ஆலோசித்தப் பின்னர், ஏல ஒப்பந்தப் புள்ளியை (கொள்முதல் நடவடிக்கையைத்) தொடரலாமா என்பதை முடிவு செய்யுங்கள்.*
- *வணிகப் போட்டி ஆணையத்திடம் ஒரு அலுவலக பதிவைச் செய்யுங்கள்*

***போட்டித்தன்மையை குலைக்கும் பிற காரணிகள்***

*போட்டித்தன்மையை குலைக்கும்படி உள்ள அரசின் கொள்கைகள் மற்றும் சட்டங்களை அவ்வப்போது (ஒரு கால முறையில்) மறு ஆய்வு செய்ய வேண்டும். நியாயமான / நேர்மையான போட்டினை, ஏல மோசடியில் சீர்குலைத்திடும் அப்படிப்பட்ட காரணிகள் சில வருமாறு :*

- ***பொருள் / சேவை வழங்குநர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது** கொள்முதல் செய்யப்படும் சரக்குகள் வழங்குநரின் காப்புரிமை கொண்ட சரக்குகளாக இருக்கவேண்டும் என்று கொள்முதல் விதிகள் இருக்கையில் மட்டுமே ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம்.*
- ***பங்கேற்கத் தடை விதிப்பது***

  *பெரிய அல்லது பேர்பெற்ற நிறுவனங்களை மட்டுமே அனுமதிப்பது என்று **பொதுக் கொள்முதல் அலுவலர்களிடம் ஒரு போக்கு உள்ளது**. **ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீடு செய்வதில் ஏற்படும் செலவைக் கட்டுப்படுத்தவும்**, **சரக்கு / சேவைகளின் தடையற்ற பெறுதலையும்** முன்னிட்டே, அடிக்கடி **இது செய்யப்படுகிறது**. **எனினும் புதிய ஒப்பந்ததாரர்களின்** பங்கேற்பினைத் **தடை செய்து**, **கிடைக்ககூடிய பலன்கள் கிட்டாமல் செய்துவிடுகிறது**.*
- ***போட்டிச் சமநிலை***

  *தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு இடையே ஒரு சமமான போட்டிக்களம் அமைப்பதே போட்டிச் சமநிலையின் நோக்கம். பொதுத்துறை நிறுவனங்களின் கட்டமைப்பு அமைப்பின் வலிமையின் காரணமாக, சந்தைகள் சீர்குலைக்கப்பட்டு போட்டியும் சீர்குலைக்கப்படலாம்!*
- ***சமச்சீரற்ற தகவல்***

அரசு அதிகாரிகளால் கொள்முதல் செய்யப்படவிருக்கும் சரக்குகள் / சேவைகள் மற்றும் அவற்றின் அளவு ஆகியவை குறித்தத் தகவல் ஏதும் பொதுவெளியில் கிடைக்கவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது. திடீரென சரக்கு அல்லது சேவையினைக் கொள்முதல் செய்ய எடுக்கப்படும் முடிவு இருந்து வரும் வழங்கல் திறனை சிரமத்திற்குள்ளாக்குகிறது. அதன் விளைவாக, திறமையற்ற கொள்முதலுக்கு இட்டுச் செல்கின்ற வகையில், ஒரு விலை வீழ்ச்சிக் காரணியும் ஆங்கு தோற்றுவிக்கப்படுகிறது.

குறிப்பு: தகவலைப் பதிவு செய்வது எப்படி என்பதற்கு *"How to File Information"* என்ற கையேட்டைப் பார்க்கவும்.

**முடிவுரை**

சந்தைகளில் பயன்தரத்தக்க பொதுக் கொள்முதல் செயல்பாட்டினை உறுதி செய்வது, நல்ல ஆளுகையின் ஒரு பகுதியாகும். சரக்கு வழங்குநர்கள் இடையே பயனுள்ள போட்டியினை ஊக்குவிப்பதில் உள்ள சவால்களை எதிர்கொண்டு, வலிமைவாய்ந்த ஏலதாரர்களிடையே வஞ்சகக் கூட்டு உடன்படிக்கையினைத் தடுத்திடவும் இது தேவைப்படுகிறது. பொதுமக்களின் வரிப்பணத்தை வீணாக்கி பாதிப்புகளை ஏற்படுத்தும் ஏலதாரர்களிடையேயான வஞ்சகக் கூட்டு உடன்படிக்கையினை வணிகப் போட்டிச் சட்டம் வெளிப்படையாகவே தடை செய்கிறது. இவ்வாறாக அரசுக் கொள்முதல்களில் நிலவும் நேர்மை,

கொள்முதலாளருக்கு உதவி செய்வது மட்டுமல்லாமல், வளங்களைச் சிக்கனமாகச் செலவு செய்திட, நாட்டுக்கும் உதவி செய்கிறது. சரியான ஒழுங்குமுறை நடவடிக்கைகள், 'வணிகப் போட்டி தொடர்பான சட்டங்களைக் கடுமையாக செயல்படுத்துதல் மற்றும் கொள்முதல் நிறுவனங்களின் அனைத்து மட்டங்களிலும் ஏலசூழ்ச்சியின் தீமைகளைப் பற்றிய விழிப்புணர்வு, ஆகியனவே பொது கொள்முதல்களில் ஏல மோசடிகளைக் குறைக்கத் தேவைப்படுகின்றன.

ஊழலுக்கு எதிரான போரும் வணிகப் போட்டியை ஊக்குவிக்கும் கொள்கைகளும் மிகவும் பாராட்டுக்குரியனவாகும்!

மொத்தத்தில், கூடுதல் கண்காணிப்பும், நன்கு திட்டமிடப்பட்ட கொள்முதல் திட்டங்களும், கொண்டு, ஏலசூழ்ச்சியைத் தடுக்க, கொள்கை வகுப்பாளர்களும் அலுவலர்களும், கொள்முதல் அலுவலர்களும் வணிகப் போட்டி ஆணையத்துடன் ஒரு குழுவாக இணைந்து பணியாற்ற வேண்டும்.

**குறிப்பு:** *CCIன் "Provisions relating to Bid Rigging"* என்ற கையேட்டையும் கொள்முதல் அலுவலர்கள் படிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**நன்றி:** பொதுக் கொள்முதல்களில், ஏல மோசடியினை எதிர்த்துப் போராடுதற்கான *OECD*ன் வழிகாட்டு நெறிமுறைகளில் இருந்தே, மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் முக்கியமாக எடுக்கப்பட்டுள்ளன.

# ஆதிக்கத்தின் முறையற்ற பயன்பாடு

## ஆதிக்கத்தின் முறையற்ற பயன்பாடு

### அறிமுகம்

*போட்டிச் சட்டம், 2002 (திருத்தப்பட்டபடி), [சட்டம்], நவீன போட்டிச் சட்டங்களின் தத்துவத்தைப் பின்பற்றுவதையும் மற்றும் போட்டியை வளர்ப்பதையும், போட்டி எதிர்ப்பு நடைமுறைகளிலிருந்து இந்திய சந்தைகளை பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியாவில் வணிகப்போட்டியில் எந்தவிதமான பாதகமான விளைவுகளும் ஏற்படாததை உறுதிசெய்யும் நோக்கில், இச்சட்டம் போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்களையும், ஆதிக்க நிலை துஷ்பிரயோகம் செய்தலையும் தடை செய்வதையும்மற்றும் சேர்க்கைகளை (இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்) ஒழுங்குமுறைப்படுத்திகிறது.*

*கையேட்டின் இப்பகுதி, ஆதிக்கத்தின் முறையற்றப் பயன்பாடு தொடர்பான சட்டத்தின் பிரிவு 4ன் செல்லுபடியைக் குறிப்பிடுகிறது.*

*உலகெங்கும் போட்டி தொடர்பான சட்டங்கள் சந்தை வலிமையையும் அதன் முறையற்ற பயன்பாட்டைக் குறித்தும் கவலை தெரிவிக்கின்றன. சந்தை வலிமை என்பது 'ஆதிக்கநிலை' அல்லது 'ஏகாதிபத்தியம்' மற்றும்/அல்லது 'கணிசமான சந்தை சக்தி' என அழைக்கப்படுகிறது*

### ஆதிக்கம் என்றால் என்ன?

*ஆதிக்கத்தை இச்சட்டம் பின்வருமாறு விவரிக்கிறது: ஆதிக்கமென்பது இந்தியச்சந்தையில் ஒரு நிறுவனத்தின் வலிமையையும் அதாவது அதனால் செய்யக்கூடியவற்றைக் குறிக்கிறது. இவ்வலிமை அந்நிறுவனத்திற்கு:*

- *தொடர்புடைய சந்தையில் நிலவும் போட்டி சக்திகளிலிருந்து சுயாதீனமாக செயல்படும் வல்லமையை தருகிறது; அல்லது*
- *ஆதரவாக போட்டியாளர்களை அல்லது நுகர்வோர்களை அல்லது தொடர்புடைய சந்தையை பாதிக்கும் வல்லமையை தருகிறது.*

*சந்தை நிலவரங்களுக்கு அப்பாற்பட்டு ஒரு நிறுவனம் தனித்துச் செயல்பட முடிவதே அதன் ஆதிக்கத்தை வரையறை செய்கிறது. ஒரு நிறைவு போட்டி மிக்க சந்தையில் எந்த ஒரு நிறுவனமும் ஆதிக்கம் செலுத்தமுடிவதில்லை, குறிப்பாக சரக்கின் விலையில். எனினும் இப்படி ஒரு சந்தை உண்மையில் ஒரு கனவாகவே இருக்கிறது. இதை மனதில் வைத்துக் கொண்டே இச்சட்டம், ஒரு நிறுவனத்திற்கு ஆதிக்க நிலை உள்ளதா என்பதைக் கண்டறிய, பல காரணிகளை கொடுக்கிறது.*

### தொடர்புடைய சந்தை

*தொடர்புடைய சந்தையை வரையறை செய்ய முடிந்தால் மட்டுமே போட்டியில் ஆதிக்கம் முக்கியத்துவம் பெறுகிறது. " தொடர்புடைய சரக்குச் சந்தை" மற்றும் "தொடர்புடைய நிலப்பகுதிச் சந்தை" என இரண்டையும் இச்சட்டம் பிரிவுகள் 2(t) மற்றும் 2(s) இல் வரையறை செய்கிறது. ஒரு தொடர்புடைய சரக்குச் சந்தையையோ அல்லது தொடர்புடைய நிலப்பகுதிச் சந்தையையோ அல்லது இரண்டையும் கணக்கில் கொண்டு, ஆணையம் ஒரு தொடர்புடைய சந்தையை வரையறை செய்யலாம். சந்தையை வரையறை செய்கையில் இச்சட்டம் கொடுக்கும் காரணிகள் ஒன்றையோ அல்லது அனைத்தையுமோ எடுத்துக்கொண்டும் ஆணையம் வரையரை செய்யலாம்.*

*குறிப்பிட்ட சரக்குகளுக்கான சந்தை எனப்படுவது மாற்றுகளால் வரையறை செய்யபடுகிறது. இது 'சிறிய ஆனால் குறிப்பிடத்தக்க வகையில் உள்ள விலையேற்றத்தில்' (SSNIP), தங்களுக்குள் மாற்றாக இருக்கும் ஒரு சிறிய பொருட்களின் (சரக்கு/சேவைகள்) தொகுப்பு. உதாரணத்திற்கு கார்களுக்கான சந்தை என்பது சிறிய கார்கள், நடுத்தர கார்கள், சொகுசு கார்கள் என்று பல 'தொடர்புடைய சந்தைகள்' கொண்டிருக்கலாம், ஏனெனில் சிறிய விலையேற்றத்தின் போது இவை ஒன்றுக்கொன்று மாற்றுகள் அல்ல.*

தொடர்புடைய நிலப்பகுதிச் சந்தை எனப்படுவது "ஒரு நிலப்பகுதியில் சரக்கு அல்லது சேவை தேவை/அளிப்பதற்கான போட்டியின் நிலவரம் தெளிவாக ஒரேவிதமாக மற்றும் அண்டைய பகுதிகளில் நிலவும் நிலவரத்தில் இருந்து வேறுபட்டுள்ளது.

**ஆதிக்கநிலையைக் கண்டறிவதற்கான காரணிகள்**

பாரம்பரியமாக ஆதிக்க நிறுவனம் அல்லது சம்பந்தப்பட்ட நிறுவன குழுவின் சந்தை பங்கு அடிப்படையில் வரையறுக்கப்படுகிறது. எனினும் ஒரு நிறுவனத்தின் அல்லது நிறுவனங்கள் குழுவின் ஆதிக்கத்தை வரையறை செய்வதில் இன்னும் பல காரணிகள் பங்கு வகிக்கின்றன. இவை:

- சந்தை பங்கு;
- நிறுவனத்தின் அளவு மற்றும் வளங்கள்;
- போட்டியாளர்களின் அளவும் முக்கியத்துவமும்;
- நிறுவனத்தின் பொருளாதார வலிமை;
- செங்குத்தான ஒருங்கிணைப்பு;
- நுகர்வோருக்கு அந்நிறுவனத்தின் இன்றியமையாமை;
- சந்தையில் உள் நுழைய/வெளியேற இருக்கும் தடைகள்;
- சந்தையின் கட்டமைப்பும் அளவும்;
- ஆதிக்கத்தின் மூலம், அதாவது ஏதோ ஒரு சட்டத்தின் காரணமாக பெறப்பட்டதா;
- சமூக செலவு மற்றும் கடமைகள் மற்றும் இந்தியாவின் வளச்சியில் ஆதிக்கநிலையில் இருக்கும் நிறுவனத்தின் பங்கு.

தேவை ஏற்படின், ஆதிக்கநிலையைக் கண்டறிய இவற்றைத் தவிர வேறு காரணிகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளது.

**ஆதிக்கத்தின் முறையற்ற பயன்பாடு**

ஆதிக்கம் என்பது தீயதாகக் கருதப்படுவதில்லை, எனினும் அதன் முறையற்ற பயன்பாடு தீயதாகவே தான் கருதப்படுகிறது. தொடர்புடையசந்தையில், ஒரு நிறுவனமோ அல்லது நிறுவனக்குழுவோ தனக்குள்ள ஆதிக்கநிலையைப் பயன்படுத்தி போட்டியாளர்களை தவிர்த்தல் மற்றும் அல்லது நுகர்வோரை சுரண்டும் வகையில் செயல்பட்டால் ஆதிக்கத்தின் முறையற்ற பயன்பாடு ஏற்படுகிறது.

இச்சட்டம் ஒரு முழுமையான 'நடத்தை' பட்டியல் கொடுத்து அவை அனைத்தும் ஆதிக்கநிலையை முறையற்றுப் பயன்படுத்தும் குற்றமாகின்றன என்று அவற்றைத் தடை செய்கிறது. இத்தகைய நடைமுறைகள் இந்தியாவில் ஒரு தொடர்புடைய சந்தையில் ஆதிக்கநிலையில் இருக்கும் ஒரு நிறுவனம் கைகொண்டால் மட்டுமே தவறாக கருதப்படும்.

குறிப்பிடப்பட்டுள்ள செயல் ஆதிக்கநிலையில் உள்ள ஒரு நிறுவனத்தால் தனியாக மேற்கொள்ளப்பட்டதா அல்லது வேறு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்டதா எனும் அடிப்படையில் ஆதிக்கத்தின் முறையற்ற பயன்பாடு தீர்மானிக்கப்படுகிறது. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விதமான தவறையும் ஒரு ஆதிக்க நிலையை வகிக்கும் நிறுவனம் மேற்கொள்ளுவது தடை செய்யப்பட்டுள்ளது.

பின்வரும் நடைமுறைகளை ஒரு ஆதிக்கநிலையை வகிக்கும் நிறுவனம் அல்லது குழு மேற்கொண்டால் அது தவறு என சட்டப்பிரிவு 4(2) குறிப்பிடுகிறது:

(i) சரக்கு/சேவைகளை விற்பதில் அல்லது வாங்குவதில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நேர்மையற்ற அல்லது பாரபட்சமான கட்டுப்பாடுகளை விதிப்பது;

*(ii)* *சரக்கு/சேவைகளை விற்பதில் (சூறையாடும் விலை நிர்ணயம் உட்பட) அல்லது வாங்குவதில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நேர்மையற்ற அல்லது பாரபட்சமான விலைகளை விதிப்பது;*

*(iii)* *சரக்குகளை உற்பத்தி செய்தல் அல்லது சேவை அ<u>**ளி**</u>த்தல் அல்லது சந்தையை கட்டுப்படுத்துவது அல்லது ஒடுக்குவது*

*(iv)* *நுகர்வோருக்கு பாதகமான வகையில் சரக்கு அல்லது சேவை சம்பந்தமானஅறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை கட்டுப்படுத்துவது அல்லது ஒடுக்குவது*

*(v)* *எம்முறையிலும் சந்தை அணுகலை தடுப்பது;*

*(vi)* *ஒரு ஒப்பந்தத்தை முடிவு செய்ய அந்த ஒப்பந்தத்துக்குத் தொடர்பே இல்லாத (தன்மையின்படி அல்லது வர்த்தக பயன்பாட்டின்படி) வேறு சில கட்டுப்பாடுகளையும் ஒப்புக்கொள்ளச் செய்வது;*

*(vii)* *ஒரு தொடர்புடைய சந்தையில் உள்ள தனது ஆதிக்கத்தைப் பயன்படுத்தி மற்றொரு தொடர்புடைய சந்தையில் நுழைவது அல்லது பாதுகாப்பது*

***சுரண்டல் மற்றும் தவிர்த்தல் நடத்தை***

*சட்டத்தின்படி தவறான நடத்தைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளவை பொதுவாக இரண்டு பிரிவுகளாகப் பிரிகின்றன: சுரண்டல் (கூடுதல் அல்லது பாரபட்சமான வி<u>**லை**</u> நிர்ணயம்) மற்றும் தவிர்த்தல் (எ.கா. சந்தையில் பொறியாளரின் சந்தை அணுகலை தடுப்பது)*

**சூறையாடும் விலை நிர்ணயம்**

*போட்டிகளைக் குறைக்கும் அல்லது போட்டியாளர்களை சந்தையிலிருந்து விலக்**க்**கும் நோக்கில் சரக்கு அல்லது சேவைகளை அவற்றின் செலவைவிட குறைந்த விலையில் விற்பது/ தருவது சூறையாடும் விலை நிர்ணயம் ஆகும் [பிரிவு 4இன் விளக்கம் (b)].*

*குறிப்பிட்ட சந்தையில் ஆதிக்கம் வகிக்கும் நிறுவனத்தால் மட்டுமே இது போன்ற சூறையாடும் விலை நிர்ணயத்தில் ஈடுபடமுடியும்.*

*சூறையாடல் நடத்தையை நிர்ணயிக்க பயன்படுத்தப்படும் முக்கிய காரணிகள் இவை:*

- *தொடர்புடைய சந்தையில் நிறுவனத்தின் ஆதிக்க நிலையை நிரூபிப்பது*
- *தொடர்புடைய சந்தையில், ஆதிக்கநிலை வகிக்கும் நிறுவனம் தொடர்புடைய சரக்குக்கு அதன் உற்பத்திச் செலவைவிட குறைந்த விலையை நிர்ணயிப்பது. [ இந்த நோக்கத்திற்காக, 'செலவு' என்பதற்கான வரையறை ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட இந்திய வணிகப்போட்டி ஆணையம் (உற்பத்தி செலவு நிர்ணயம்) ஒழுங்குவிதிகள், 2009இல் கொடுக்கப்பட்டுள்ளது.*
- *போட்டிகளைக் குறைக்க அல்லது போட்டியாளர்களை சந்தையிலிருந்து நீக்கும் நோக்கம் இருப்பது. இது பாரம்பரியமாக 'சூறையாடும் நோக்க சோதனை' என அறியப்படுகிறது.*

**இன்றியமையாத தேவை கோட்பாடு**

*போட்டித்தன்மையின் ஆற்றலைக் குறைப்பதில் பெரும்பங்கு வகிப்பது ஒரு குறிப்பிட்ட சந்தையினுள் நுழைய புதிய நிறுவனங்கள் சந்திக்கும் தடை ஆகும். ஒரு தொடர்புடைய சந்தையில் பிறர் நுழையத் தேவையான சில உள்கட்டமைப்பு அல்லது வசதி ஆதிக்க நிலையை வகிக்கும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் நேர்வில், அவற்றை நியாமான செலவின் அடிப்படையில் பகிர்ந்து கொள்ள அந்நிறுவனம் காரணமின்றி மறுப்பு தெரிவிக்கலாம். அத்தகைய அமைப்பை குறுகிய காலத்தில் நியாயமான செலவில் எளிதில் உருவாக்கமுடியாது மற்றும் அதற்கு மாற்றாக வேறு ஒரு சரக்கு/ சேவையை*

*பயன்படுத்தமுடியாது. இது இன்றியமையாத தேவை கோட்பாடு என்று அறியப்படுகிறது. இக்கோட்பாட்டைப் பயன்படுத்த கீழ்வருவனவற்றோடு பொருந்தவேண்டும்:*

- *தொடர்புடைய சந்தையின் ஆதிக்க நிலையை வகிக்கும் நிறுவனத்தால் அமைப்பு/ வசதி கட்டுப்படுத்தப்பட வேண்டும்;*
- *போட்டி நிறுவனங்கள்/நபர்கள் உண்மையாகவே அதுபோன்ற அமைப்பை உண்டாக்க முடியாமல் இருக்க வேண்டும்;*
- *தொடர்புடைய சந்தையில் போட்டியிட அந்தவசதியை பயன்படுத்துதல் இன்றியமையாததாக இருக்க வேண்டும்;*
- *அந்தவசதியை பயன்பாட்டிற்கு கொடுப்பது/ பகிர்வது சாத்தியமாக இருக்க வேண்டும்.*

*அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு மற்றும் குறிப்பிட்ட வழக்கிற்கு பொருந்தும் நிறுவப்பட்ட போட்டி சட்டக் கோட்பாடுகளுக்கு இசைவாக, ஆணையம் சட்டத்தின் பிரிவு 4(2)(c)இன் படி (ஆதிக்க நிலையை வகிக்கும் நிறுவனம் சந்தை அணுகலை தடுப்பது சம்பந்தமான சட்டப்பிரிவு), ஆதிக்க நிலையை வகிக்கும் நிறுவனம் இன்றியமையாத வசதியை தனது கீழ்நிலை சந்தையில் உள்ள போட்டியாளர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என பரிகார ஆணை பிறப்பிக்கலாம்.*

***அறிவுசார் சொத்துக்களும் ஆதிக்கநிலையின் முறையற்றப் பயன்பாடுகள்***

*அறிவுசார் சொத்துக்களை நேர்மையாகப் பயன்படுத்துகையில், (போட்டிக்கு எதிரான ஒப்பந்தங்களுக்கு ) சட்டப்பிரிவு 3இன் கடுமையான கட்டுப்பாடுகளில் இருந்து விலக்கு கிடைக்கும் அதே நேரத்தில் அறிவுசார் சொத்துக்களை அதன் உரிமையாளர் துஷ்பிரயோகம் செய்யும் நேர்வில், விலக்குகள் கிடைக்காது.*

*சந்தையில் தனிப்பட்ட உரிமைகளை ஒரு நிறுவனத்துக்கு அறிவுசார் சொத்துக்கள் தருவதால் பொதுவாக அவை போட்டி சட்டத்திற்கு எதிர்நிலையில் உள்ளதாக கருதப்படுகிறது. ஆனால் இவை ஒன்றுக்கொன்று இட்டுநிரப்பும் தன்மையைக் கொண்டு ஒரே நோக்கத்தைக் கொண்டன (புதுமைகள் மற்றும் பொதுநலன்) என்பது ஒரு நிலைநிறுத்தப்பட்டத் தத்துவம். ஆகவே அறிவுசார் சொத்துக்கள் போட்டிச் சட்டங்களின்அதிகார வரம்பினுள் இருந்தாலும் மதிப்பீட்டில் சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகின்றன.*

*அறிவுசார் சொத்துக்களை பாதுகாக்கச் செய்யப்படும் செயல்பாடுகளுக்கு, ஒப்பந்தங்கள் தொடர்பான பிரிவு 3 விலக்கு அளிக்கிறது. அறிவுசார் சொத்துக்களின் அடிப்படையில் ஆதிக்கநிலை தவறாக பயன்படுத்துதல் பற்றி ஒரு இறுதி முடிவுக்கு வரும் முன் அனைத்துக் காரணிகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஆதிக்கநிலையை முறையற்றுப் பயன்படுத்துவது தொடர்பாக பிரிவு 4 கூறுகிறது*

***ஆதிக்கத்தின் முறையற்ற பயன்பாட்டின் மீதான விசாரணை***

*ஆதிக்கத்தின் முறையற்ற பயன்பாடு தொடர்பான பிரிவு 4(1) - னை மீறும் நடத்தைகள் இருக்கிறது என்ற முகாந்திரம் இருந்தால் இச்சட்டத்தின் பிரிவு 19இன் படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் மூலம் அவ்வழக்கினை ஆணையம் விசாரிக்கலாம்.*

*குற்றம்சாட்டப்பட்ட ஆதிக்கத்தின் முறையற்ற பயன்பாடு தொடர்பான விசாரணையில், ஆணையம் சட்டத்தின் பிரிவு 19(4) கொடுக்கும் விரிவான காரணிகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். பின்வருவன இவற்றில் சில காரணிகளாக இருக்கின்றன: சந்தையில் வணிகத்தின் அளவு, நிறுவனத்தின் அளவு மற்றும் வளங்கள், போட்டியாளர்களின் அளவும் முக்கியத்துவமும், நுகர்வோருக்கு அந்நிறுவனத்தின் இன்றியமையாமை, சந்தையில் உள் நுழைய இருக்கும் தடைகள், குறிப்பிட்ட நிலப்பகுதி மற்றும் சரக்குச் சந்தையில் இருக்கும் செலவுகள்*

*ஆதிக்கம் முறையற்று பயன்படுத்தப்பட்டுள்ளது என்று முதல் பார்வை சான்றுகள் உள்ளன என்று ஆணையம் கருதினால், வழக்கை விசாரணை செய்து அறிக்கை அளிக்கக்கூறி தலைமை இயக்குநருக்கு ஆணையம்*

ஆணையிடலாம். ஒரு நபரை கண்டிப்பாக ஆணையத்தின் முன் வர மற்றும் அவரிடம் உண்மைக்கான உறுதிமொழி பெற்று அவரை விசாரணை செய்ய, ஆவணங்களைத் கண்டுபிடிக்க மற்றும் சமர்ப்பிக்க, எழுத்துப்பூர்வமான உறுதிமொழியுடன் சாட்சிகளைப் பெற்றுக்கொள்ள உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் செயல்படும் உரிமையியல் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரம் ஆணையத்துக்கு உள்ளது. புலனாய்வுக்காக தேடும் மற்றும் கைப்பற்றும் அதிகாரமின்றி உரிமையியல் நீதிமன்றத்திற்கு இணையான அதிகாரம் தலைமை இயக்குனருக்கும் உள்ளது.

குறிப்பு: விசாரணை மற்றும் புலன்விசாரணைகள் முறைகள் பற்றி அறிந்து கொள்ள போட்டி ஆணையத்தின் இணையதளத்திலும் உள்ள, May 21, 2009 தேதியிட்ட இந்திய வணிகப்போட்டி ஆணையம் (பொது) ஒழுங்குவிதிகள், 2009ஐ பார்க்கவும்.

**ஆணையத்தின் அதிகாரங்கள்**

ஆய்விற்குப் பிறகு, பிரிவு 27இன் படி ஆணையம் பின்வருவனவற்றுள் ஆணைகளில் ஒன்றையோ அல்லது அனைத்தையும் இடலாம்:

1) வழக்குதாரரை ஒப்பந்தங்களை முறிக்கவும் மீண்டும் அத்தகைய ஒப்பந்தங்களில் ஈடுபடாமல் இருக்கவும் உத்தரவிடலாம்;

2) சம்பந்தப்பட்ட நிறுவனத்தை ஒப்பந்தத்தை மாற்றும்படி உத்தரவிடலாம்;

3) செலவுகள் ஏதேனும் இருந்தால் அதை செலுத்தல் உள்ளிட்ட உத்தரவுகளுக்கு இணங்க செயல்படவும் மற்றும் ஆணையம் இடக்கூடிய பிற ஆணைகளை பின்பற்றவும் உத்தரவிடலாம்;

ஆதிக்கம் என்பது தீயதாகக் கருதப்படுவதில்லை, எனினும் அதன் முறையற்ற பயன்பாடு தீயதாகவே தான் கருதப்படுகிறது. ஒரு நிறுவனமோ அல்லது நிறுவனக்குழுவோ தங்களது ஆதிக்கநிலையைப் பயன்படுத்தி முறையற்ற வகையில் சுரண்டலில் ஈடுபட்டாலோ அல்லது ஒதுக்கல் மனப்பான்மையைக் கொண்டு நடந்தாலோ ஆதிக்கம் முறையற்றுப் பயன்படுகிறது.

4) தேவைக்கேற்ப பிற ஆணைகள் அல்லது உத்தரவுகளை பிறப்பிக்கலாம்;

5) ஆணையம் பொருத்தமான அளவிற்கு அபராதம் விதிக்கலாம். நிறுவனத்தின் முந்தைய கடைசி 3 நிதி ஆண்டுகளில் சராசரி விற்றுமுதல் 10 சதவீதத்திற்கு மிகாமல் அபராதம் விதிக்க முடியும்.

6) ஒரு நிறுவனம் தனது ஆதிக்க நிலையை தவறாக பயன்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக அந்நிறுவனத்தை பிரிக்க பிரிவு 28ன் கீழ் ஆணையத்துக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**இடைக்கால ஆணை (INTERIM ORDER)**

ஆதிக்கத்தின் முறையற்றப் பயன்பாட்டைப் பற்றிய விசாரணையின் போது, சட்டத்தின் பிரிவு 33இன் படி, ஆணையம் எந்த ஒரு நிறுவனத்தையும் குற்றம் எனக்கருதப்படும் செயலை, தொடர்ந்து செய்ய எந்தவித முன் அறிவிப்பும் இன்றி தேவைக்கேற்ப தடைவிதிக்க முடியும்.

**குறிப்பு:** இடைக்கால ஆணைகள் தொடர்பான நடைமுறைகளுக்கு மே 21, 2009 தேதியிட்ட 2009ன் 2வது ஒழுங்குவிதிகளை பார்க்கவும் (இந்த ஒழுங்குவிதிகள் இந்திய போட்டியாணயத்தின் இணையதளத்திலும் கிடைக்கத்தக்கது www.cci.gov.in)

**மேல்முறையீடு**

ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட சட்ட பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட எந்த ஒரு உத்தரவு அல்லது மேற்கொள்ளப்பட்ட முடிவு அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிரான மேல்முறையீடுகளை

*கேட்கவும் மற்றும் தீர்வு செய்யவும் தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தை (NCLAT) நிறுவன சட்டம் 2013, பிரிவு 410ன் படி அமைக்கப்பட்டுள்ளது.*

*ஆணையத்தின் முடிவு/ஆணை/ உத்தரவு கிடைக்கப்பெற்று 60 நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யவேண்டும்.*

***இழப்பீடு (பிரிவு 53N)***

*ஆணையத்தின் தீர்ப்புகளால் பாதிக்கப்படும் நபர், இழப்பீடு கேட்டு தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திடம் (NCLAT) விண்ணப்பம் செய்யலாம்.*

# சேர்க்கைகள்

## சேர்க்கைகள்

### *அறிமுகம்*

*போட்டிச் சட்டம், 2002 (திருத்தப்பட்டபடி), [சட்டம்], நவீன போட்டிச் சட்டங்களின் தத்துவத்தைப் பின்பற்றுகிறது மற்றும் போட்டியை வளர்ப்பதையும், போட்டி எதிர்ப்பு நடைமுறைகளிலிருந்து இந்திய சந்தைகளை பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியாவில் வணிக போட்டியில் எந்தவிதமான பாதகமான விளைவுகளும் ஏற்படாததை உறுதிசெய்யும் நோக்கில், இச்சட்டம் போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்களையும், ஆதிக்க நிலை துஷ்பிரயோகம் செய்தலையும் தடை செய்கிறது மற்றும் சேர்க்கைகளை (இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்) ஒழுங்குமுறைப்படுத்துகிறது. சேர்க்கைகளை ஒழுங்குமுறைப்படுத்துவது தொடர்பான சட்டத்தின் விதிகள் ஜூன் 1, 2011 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளன .*

### *சேர்க்கை என்றால் என்ன?*

*பரவலாக, பின்வரும் பரிவர்த்தனைகள் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகளை மீறும்பட்சத்தில், சேர்க்கைகள் என கருதப்படும்: ஒரு நபர் ஒரு நிறுவனத்தின் கட்டுப்பாடு, பங்குகள், வாக்களிக்கும் உரிமைகள் அல்லது சொத்துக்களை கையகப்படுத்துதல் மற்றும் நிறுவனங்களுக்கிடையில் அல்லது அவற்றுக்கு இடையேயான இணைப்புகள் மற்றும் ஒருங்கிணைப்புகள். இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உள்ள சொத்துக்கள் அல்லது விற்றுமுதல் அடிப்படையில் இந்த வரம்புகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. சேர்க்கை மற்றும் இணைப்பு என்ற சொற்கள் இந்த கையேட்டில் மாறி மாறி பயன்படுத்தப்படுகின்றன.*

*இந்தியாவில் தொடர்புடைய சந்தையில் போட்டியின் மீது மோசமான பாதகமான விளைவை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தக்கூடிய சேர்க்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளது, மேலும் அத்தகைய சேர்க்கைகள் செல்லுபடியாகாது.*

### *சேர்க்கைகளை தீர்மானிக்க சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகள்*

*இந்தியா வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாகும். வளர்ச்சியின் செயல்முறை நிறுவனங்களின் சாதாரணமான மற்றும் அசாதாரணமான (இணைப்புகள் மற்றும் கையகப்படுத்தல் வழியாக) வளர்ச்சியால் இயக்கப்படுகிறது. அனைத்து இணைப்புகளையும் மதிப்பாய்வு செய்வது சாத்தியமும் இல்லை அறிவுறுத்துவதற்கு உகந்ததும் இல்லை. சிறிய அளவிலான இணைப்புகளைப் பொறுத்தவரையில், இந்திய சந்தைகளில் உள்ள போட்டியின்மீது மோசமான பாதகமான விளைவுகள் ஏற்பட வாய்ப்பில்லை என்று கருதுவது இயற்கையானது. ஆணையத்தின் கட்டாய அறிவிப்புக்கு, சொத்துக்கள் / விற்றுமுதல் ஆகியவற்றின் அடிப்படையில் போதுமான உயர் வரம்புகளை இந்த சட்டம் வழங்குகிறது.*

*மொத்த விலைக் குறியீட்டில் (WPI) மாற்றங்கள் அல்லது ரூபாய் அல்லது வெளிநாட்டு நாணயங்களின் மாற்று விகிதங்களில் ஏற்ற இறக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், அறிவிக்கை வாயிலாக, அரசாங்கம் ஆணையத்துடன் கலந்தாலோசித்து, ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை சேர்க்கைகளுக்கான வரம்புகளைத் திருத்துவதற்கும் இந்த சட்டம் வகை செய்கிறது .*

*சேரும் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த சொத்துக்கள் / விற்றுமுதல் ஆகியவற்றிற்கான தற்போதைய வரம்புகள் பின்வருமாறு:*

- *நிறுவன அளவில்: இந்தியாவில், சேரும் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த சொத்துகளின் மதிப்பு 2000 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது அல்லது சேரும் நிறுவனங்களின் மொத்த வருவாய் 6,000 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது. ஒன்று அல்லது அனைத்து சேரும் நிறுவனங்களுக்கு இந்தியாவிற்கு வெளியே சொத்துக்கள் / விற்றுமுதல் இருந்தால், சேரும் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த சொத்துகளின் மதிப்பு 1000 மில்லியன் அமெரிக்க டாலர்கள், இதில் இந்தியாவில் உள்ள சொத்துகளின் மதிப்பு குறைந்தபட்சம் 1000 கோடி ரூபாயைத், தாண்டியுள்ளது அல்லது சேரும் நிறுவனங்களின் மொத்த விற்றுமுதலின் மதிப்பு 3000 மில்லியன் அமெரிக்க டாலர்கள் இதில் இந்தியாவை சார்ந்த விற்றுமுதலின் மதிப்பு குறைந்தபட்சம் 3000 கோடி ரூபாயைத், தாண்டியுள்ளது.*

- *குழு அளவில்: கட்டுப்பாடு, பங்குகள், சொத்துகள் அல்லது வாக்களிக்கும் உரிமைகளைக் கையகப்படுத்தப்படும் நிறுவனமானது, கையகப்படுத்தப்பட்ட பின்னர் எந்த குழுவிற்கு சொந்தமாகிறதோ; அல்லது இணைப்பு அல்லது ஒருங்கிணைப்புக்குப் பின்னர் மீதமுள்ள நிறுவனம் எந்த குழுவிற்கு சொந்தமாகிறதோ, அக்குழுவின் சொத்துமதிப்பு இந்தியாவில் 8000 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது அல்லது விற்றுமுதலின் மதிப்பு 24000 கோடி ரூபாயை தாண்டியுள்ளது. அத்தகையக்குழுவிற்க்கு இந்தியாவுக்கு வெளியே செயல்பாடு இருந்தால், குழுவின் சொத்துகளின் மதிப்பு 4 பில்லியன் அமெரிக்க டாலர்கள், இதில் இந்தியாவில் உள்ள சொத்துமதிப்பு குறைந்தபட்சம் 1000 கோடி ரூபாயைத், தாண்டியுள்ளது அல்லது விற்றுமுதலின் மதிப்பு 12 பில்லியன் அமெரிக்க டாலர்கள், இதில் இந்தியாவை சார்ந்த விற்றுமுதலின் மதிப்பு குறைந்தபட்சம் 3000 கோடி ரூபாயைத், தாண்டியுள்ளது.*

*'குழு' என்ற சொல் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. ஒரு நிறுவனம் மற்றொருநிறுவனத்தின் குறைந்தது 26 சதவீத வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்தவோ; அல்லது குறைந்தபட்சம் 50 சதவீத இயக்குநர்களை நியமிக்கவோ; அல்லது மேலாண்மை அல்லது விவகாரங்களைக் கட்டுப்படுத்தவோ முடியுமெனில், அந்த இருநிறுவனகளும் ஒரு குழுவை சார்ந்ததாக கருதப்படும் .*

*மேலே உள்ள வரம்புகள் கீழே உள்ள அட்டவணையில் வழங்கப்படுகின்றன:*

| **இந்தியாவில்** | | |
|---|---|---|
| *பொருந்தக்கூடியவர்கள்* | *சொத்துக்கள்* | *விற்றுமுதல்* |
| *தனிநபர்கள்* | *ரூ.2,000 கோடி* | *ரூ.6,000 கோடி* |
| *குழு* | *ரூ.8,000 கோடி* | *ரூ.24,000 கோடி* |

| **இந்தியா மற்றும் வெளியில்** | | | | |
|---|---|---|---|---|
| *பொருந்தக்கூடியவர்கள்* | *சொத்துக்கள்* | | *விற்றுமுதல்* | |
| | *மொத்தம்* | *மொத்தத்தில் குறைந்தபட்ச இந்திய கூறு* | *மொத்தம்* | *மொத்தத்தில் குறைந்தபட்ச இந்திய கூறு* |
| *தனிநபர்கள்* | *1 பில்லியன் அமெரிக்க டாலர்கள்* | *ரூ.1000 கோடி* | *3 பில்லியன் அமெரிக்க டாலர்கள்* | *ரூ.3000 கோடி* |
| *குழு* | *4 பில்லியன் அமெரிக்க டாலர்கள்* | *ரூ.1000 கோடி* | *12 பில்லியன் அமெரிக்க டாலர்கள்* | *ரூ.3000 கோடி* |

*விற்பனை செய்யப்பட்ட சரக்குகள் மற்றும் வழங்கப்பட்ட சேவைகளின் மதிப்பு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு மொத்த விற்றுமுதல் நிர்ணயக்கப்படவேண்டும். சொத்துக்களின் மதிப்பானது தேய்மானங்களை கழித்த பின்னர், சேர்க்கைநடைபெறவிருக்கும் நாளின் முந்தைய நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளில் காட்டப்படும் சொத்துக்களின் மதிப்பினை எடுத்துக்கொண்டு நிர்ணயம் செய்யப்படுகிறது. சட்டத்தின் 5 ஆம் பிரிவின் விளக்கம் (c) இல் கொடுக்கப்பட்டுள்ள நிறுவனத்தை*

*அடையாள மதிப்பு, நற்பெயர் மற்றும் அறிவார்ந்த சொத்துக்களின் மதிப்பை உள்ளடங்கியதக இருக்கவேண்டும்.*

*மேலும், மத்திய அரசின் அறிவிக்கையின்படி (எண் S.O. No.988 (E) நாள் :27.03.2017), ஒரு நிறுவனத்தின் குறிப்பிடப்பட்ட பகுதி அல்லது பிரிவு அல்லது வணிகத்தை கையகப்படுத்தினாலோ, இணைத்தாலோ அல்லது ஒருங்கிணைந்தாலோ, அந்த குறிப்பிடப்பட்ட பகுதி அல்லது பிரிவு அல்லது வணிகத்தின் சொத்து மதிப்பு மற்றும் விற்றுமுதல் மதிப்பை கணக்கில்கொண்டு சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகளை கணக்கிடவேண்டும்.*

***விலக்கு அறிவிக்கைகள்***

*சட்டத்தின் 54 ஆம் பிரிவைச் சேர்ந்த பகுதி (a) இல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு பொது நலனை கருத்தில்கொண்டு பின்வருபவர்களை அறிக்கை தாக்கல் செய்யும் விதிமுறைகளில் இருந்து விலக்களித்துள்ளது:*

- *கையகப்படுத்தப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்ட சொத்தின் மதிப்பு இந்தியாவில் முந்நூற்று ஐம்பது கோடிக்கு அதிகமாக இல்லை அல்லது இந்தியாவில் விற்றுமுதல் ஆயிரம் கோடிக்கு மேல் இல்லை .*

- *ஒரு பிராந்திய கிராமப்புற வங்கி சம்பந்தமாக மத்திய அரசு பிராந்திய கிராமப்புற வங்கிகள் சட்டம், 1976 (1976 இல் 21), பிரிவு 23 A இன் துணைப்பிரிவு (1) இன் கீழ் அறிவிப்பை வெளியிட்ட நேர்வில், அந்தவங்கிக்கு 2002 போட்டி சட்டப்பிரிவுகள் 5 மற்றும் 6 இல் இருந்து ஐந்து வருட காலத்திற்கு விலக்களிக்கப்பட்டுள்ளது*

- *பெட்ரோலிய சட்டம், 1934 (1934 இல் 30), எண்ணெய் வயல்கள் (ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி) சட்டம், 1948 (1948 இல் 53) மற்றும் இவற்றின் விதிகளின் கீழ் செயல்படும் எண்ணெய் மற்றும் எரிவாயு துறைகளில் இயங்கும் மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அவற்றின் முழு அல்லது ஓரளவுக்கு சொந்தமான துணை நிறுவனங்களுக்கு 2002 போட்டி சட்டப்பிரிவுகள் 5 மற்றும் 6 இல் இருந்து ஐந்து வருட காலத்திற்கு விலக்களிக்கப்பட்டுள்ளது*

- *வங்கி நிறுவனங்கள் (நிறுவனங்களின் கையகப்படுத்தல் மற்றும் பரிமாற்றம்) சட்டம், 1970 (1970 இல் 5) மற்றும் வங்கி நிறுவனங்கள் (கையகப்படுத்தல் மற்றும் பரிமாற்றங்கள் பரிமாற்றம்) 1980 (1980 இல் 40) கீழ் மேற்கொள்ளப்படும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மறுசீரமைப்பு, முழு அல்லது பகுதியை பரிமாற்றம் செய்வது மற்றும் ஒருங்கிணைப்புகளுக்கு, 2002 போட்டிச் சட்டப்பிரிவுகள் 5 மற்றும் 6 இல் இருந்து பத்து வருட காலத்திற்கு விலக்களிக்கப்பட்டுள்ளது .*

***எவ்வித சேர்க்கைகளுக்கு அறிவிப்பு பொதுவாக தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை.***

*கூட்டு விதிமுறைகள் அட்டவணை I இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சில சேர்க்கைகள் தொடர்பான அறிவிப்பை பொதுவாக ஆணையத்திடம் தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் அந்த பரிவர்த்தனைகள் பொதுவாக இந்தியாவில் வணிகப்போட்டியில் மோசமான பாதகமான விளைவை ஏற்படுத்த வாய்ப்பில்லை.*

***சேர்க்கை விதிமுறைகளின் அட்டவணை I***

*(1) ஒரு முதலீடாக அல்லது வணிகத்தின் சாதாரண போக்கில், சட்டப்பிரிவு 5 தின் உட்கூறு (a) வின் உட்பிரிவுகள் (i) அல்லது (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பங்குகள் அல்லது வாக்களிக்கும் உரிமைகளை கையகப்படுத்துதல், ஆனால் பரிவர்த்தனைக்குப்பின் கையகப்படுத்துபவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது பங்குதாரர்கள் "ஒப்பந்தம் அல்லது சங்க அமைப்பு விதிகள் உள்ளிட்ட எந்தவொரு ஆவணத்தையும் நிறைவேற்றுவதற்கு ஏற்ப, கையகப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் மொத்த பங்குகள் அல்லது வாக்களிக்கும் உரிமைகளில்*

*இருபத்தைந்து சதவீதம் (25%) அல்லது அதற்கு மேலான பங்குகள் அல்லது வாக்களிக்கும் உரிமைகளை கொண்டிருக்க இயலாது மற்றும் பரிவர்த்தனை கையகப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் கட்டுப்பாட்டைப் பெறுவதற்கு வழிவகுக்கக்கூடாது.*

*விளக்கம்: ஒரு நிறுவனத்தின் மொத்த பங்குகளில் அல்லது வாக்களிக்கும் உரிமையில் பத்து சதவீதத்திற்கும் குறைவாக கையகப்படுத்தும் நேர்வில், அந்த பரிவர்த்தனை ஒரு முதலீட்டுக்காக மட்டும் மேற்கொள்ளப்பட்டதாக கருதப்படும் ஆனால்சொல்லப்பட்ட கையகப்படுத்துதல் பொறுத்தவரை:*

*(A)* *எந்த நிறுவனத்தின் பங்குகள் அல்லது வாக்களிக்கும் உரிமைகள் கையகப்படுத்தப்பட்டதோ, அந்நிறுவனத்தின் சாதாரண பங்குதாரர்களால் பயன்படுத்தக்கூடிய உரிமைகளை மட்டுமே கையகப்படுத்தியவர், அவர் வைத்திருக்கும் பங்குகளின் அளவிற்கு ஏற்ப, பயன்படுத்தமுடியும்; மற்றும்*

*(B)* *கையகப்படுத்துபவர் பங்குகள் அல்லது வாக்களிக்கும் உரிமைகள் கையகப்படுத்தப்படும் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவில் உறுப்பினராக இல்லை மற்றும் அந்நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவில் ஒரு இயக்குநரை நியமிக்கும் எண்ணம் இல்லை மற்றும் அந்நிறுவனத்தின் விவகாரங்கள் அல்லது நிர்வாகத்தில் பங்கேற்கும் எண்ணமும் இல்லை.*

*(1A) ஒரு நிறுவனத்தின் கூடுதல் பங்குகள் அல்லது வாக்குரிமையை கையகப்படுத்துபவர் அல்லது அதன் குழு, கையகப்படுத்துவதற்கு முன்பு, ஏற்கனவே இருபத்தைந்து சதவீதம் (25%) அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகள் அல்லது நிறுவனத்தின் வாக்களிக்கும் உரிமைகளை வைத்திருக்கிறது, ஆனால் கையகப்படுத்துதலுக்கு முன்னும் பின்னும் கையகப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஐம்பது சதவீதம் (50%) அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகள் அல்லது வாக்களிக்கும் உரிமைகளை வைத்திருக்காது: ஆனால் பரிவர்தனயானது கையகப்படுத்துபவர் அல்லது அதன் குழு, கையகப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் முழுமையான அல்லது கூட்டுக் கட்டுப்பாட்டை அடைவதற்கு வழிவகை செய்யக்கூடாது.*

*(2)* *சட்டத்தின் 5 வது பிரிவின் உட்கூறு (a) வின் கீழுள்ள உட்பிரிவு (i) அல்லது (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பங்குகள் அல்லது வாக்களிக்கும் உரிமைகளைப் கையகப்படுத்தும் நேர்வில், கையகப்படுத்துவதற்கு முன்பு, கையகப்படுத்துபவர் கையகப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஐம்பது சதவிகிதம் (50%) அல்லது அதற்கு மேலான பங்குகள் அல்லது வாக்களிக்கும் உரிமைகளை வைத்திருக்கிறார் மற்றும் பரிவர்தனயானது அந்நிறுவனம் கூட்டுக் கட்டுப்பாட்டிலிருந்து ஒருவரின் கட்டுப்பாட்டுக்கு மாறும் நிலையை உண்டுசெய்யக்கூடாது.*

*(3)* *சட்டத்தின் 5 வது பிரிவு (a) உட்பிரிவு (i) அல்லது (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து கையகப்படுத்தும் நேர்வில், அச்ச்சொத்து கையகப்படுத்துபவரின் வணிக நடவடிக்கைகளோடு நேரடி தொடர்வில் இல்லை; அல்லது கையகப்படுத்துதல் ஒரு முதலீடு மட்டுமே; அல்லது கையகப்படுத்துதல் வணிகத்தின் சாதாரண போக்கில் மேற்கொள்ளப்படுகிறது, மற்றும் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அல்லது நிறுவனத்தின் ஒரு குறிப்பிட்ட தயாரிப்பு அல்லது சேவைக்கு கணிசமான வணிக நடவடிக்கைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவையாக இல்லை ஆனால் அத்தகைய சொத்துக்கள் ஒரு தனி சட்ட நிறுவனமாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வேண்டும் என அவசியம் இல்லை. இவையன்றி, பரிவர்த்தனை கையகப்படுத்தப்படும் சொத்தினை கொண்டிருந்த நிறுவனத்தின் கட்டுப்பாட்டை அடைவதற்கு வழிவகுக்கக்கூடாது.*

*(4)* *திருத்தப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட ஓர் நிறுவன பங்குகளை வாங்குவதற்கான அழைப்பு ஆனால் அத்தகைய அழைப்புக்குமுன் அழைப்பை வழங்குபவர் ஆணையத்திற்கு சேர்க்கை சம்மந்தமான அறிவிப்பை ஏற்கனவே தாக்கல் செய்திருக்கவேண்டும். இவையன்றி எந்தவொரு மாற்றத்தையும் தெரிவிப்பது தொடர்பான விதிமுறை 16 உடன் இணங்குதல் முறையாக செய்யப்பட்டிருக்கவேண்டும்.*

(5) வணிகத்தின் சாதாரண போக்கில் கையகப்படுத்தப்பட்ட இருப்புசரக்கு, மூலப்பொருட்கள், கடைகள் மற்றும் உதிரிபாகங்கள், வர்த்தக பெறத்தக்கவைகள் மற்றும் பிற வணிக நடப்பு சொத்துக்கள்.

(6) போனஸ் வெளியீடு அல்லது பங்குகளின் பிளவு அல்லது பங்குகளின் முக மதிப்பை ஒருங்கிணைத்தல் அல்லது பங்குகளை திரும்ப வாங்குதல் அல்லது பங்குகளின் உரிமைகள் வெளியீட்டின் மூலம் பங்குகளை அல்லது வாக்களிக்கும் உரிமைகளை கையகப்படுத்துவது ஆனால் பரிவர்த்தனை கட்டுப்பாட்டைப் பெறுவதற்கு வழிவகுக்கக்கூடாது.

(7) பத்திர ஒப்புறுதியாளராக செயல்படுபவர் அல்லது வாடிக்கையாளரின் சார்பாக செயல்படும் ஒரு பங்கு சந்தையில் பதிவு செய்யப்பட்ட பங்கு தரகர், வணிகத்தின் சாதாரண போக்கில் மற்றும் ஒப்புறுதி செயல்பாட்டில் அல்லது பங்கு தரகு செயல்பாட்டில், பங்குகளை அல்லது வாக்களிக்கும் உரிமையை கையகப்படுத்துவது.

(8) ஒரு நபர் அல்லது நிறுவனம் தனது குழுவை சேர்ந்த மற்றொரு நபர் அல்லது நிறுவனத்தின் பங்குகள் அல்லது வாக்களிக்கும் உரிமையை கையகப்படுத்துவது ஆனால் கையகப்படுத்தப்பட்ட நிறுவனம் குழுவை சேராத நிறுவனங்களின் கூட்டு கட்டுப்பாட்டில் இருக்கக்கூடாது.

(9) ஒரு நிறுவனம் தனது ஐம்பது சதவீதத்திற்கும் (50%) அதிகமான பங்குகள் அல்லது வாக்குரிமையை கொண்டிருக்கும் மற்றொரு நிறுவனத்துடன்இணைவது அல்லது ஒருங்கிணைவது மற்றும்/ அல்லது நிறுவனங்களின் இணைப்பு அல்லது ஒருங்கிணைப்பு, அத்தகைய ஒவ்வொரு நிறுவனத்திலும் ஐம்பது சதவீதத்திற்கும் (50%) அதிகமான பங்குகள் அல்லது வாக்களிக்கும் உரிமைகள் ஒரே குழுவில் உள்ள நிறுவனம் (நிறுவனங்கள்) வைத்திருக்கும் நேர்வில், ஆனால் பரிவர்த்தனயானது கையகப்படுத்தப்பட்ட நிறுவனம் கூட்டுக் கட்டுப்பாட்டிலிருந்து ஒருவரின் கட்டுப்பாட்டுக்கு மாறும் நிலையை உண்டுசெய்யக்கூடாது.

(10) சட்டத்தின் 31 வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுக்கு இணங்க, ஆணையத்தால் ஒரு அங்கீகரிக்கப்பட்ட வாங்குபவர் பங்குகள், கட்டுப்பாடு, வாக்களிக்கும் உரிமைகள் அல்லது சொத்துக்களை கையகப்படுத்துதல்.

**சேர்க்கை அறிவிப்பு**

சேர்க்கைக்குமுன், ஆணையத்திற்கு மேற்கொள்ளவிருக்கும் சேர்க்கை பரிவர்த்தனையை அறிவிப்பது சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மறுஆய்வு செயல்முறையில் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. சேர்க்கையை முன்மொழிகின்ற எந்தவொரு நபர் அல்லது நிறுவனம், சேரும் நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்கள் இணைப்பு அல்லது ஒருங்கிணைப்புக்கு ஒப்புதல் அளித்த நாளிலிருந்து; அல்லது செயற்முறை ஒப்பந்தங்கள் அல்லது ஏனைய ஆவணங்கள் உடன்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள்ளாக மேற்கொள்ளவிருக்கும் சேர்க்கைக்கான விவரங்களுடன் வரையறுக்கப்பட்ட வடிவத்தில் ஆணையத்திடம் தகவல் தெரிவிக்க வேண்டும். ஒரு அறிவிக்கப்படவேண்டிய இணைப்பு அறிவிக்கப்படாவிட்டால், அதனை நடைமுறைப்படுத்திய ஒரு வருடத்திற்குள் அதுகுறித்து விசாரிக்க ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளது.

ஆணையத்திற்கு அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 210 நாட்கள் வரை அல்லது ஆணையம் உத்தரவு பிறப்பிக்கும் நாள் வரையில், இவற்றில் எது முந்தையதோ, அதுவரை அறிவிக்கப்பட்ட சேர்க்கை செயலுக்கு வர இயலாது. மேற்சொன்ன 210 நாட்கள் கால அளவிற்குள் ஆணையம் உத்தரவு பிறப்பிக்காத நேர்வில் அந்த இணைப்பு அங்கீகரிக்கப்பட்டதாக கருதப்படவேண்டும்.

**பொது நிதி நிறுவனங்கள், துணிகர மூலதன நிதிகள், போன்றவையின் கையகப்படுத்துதல் அல்லது நிதி வசதி**

கடன் ஒப்பந்தம் அல்லது முதலீட்டு ஒப்பந்தத்தின் எந்தவொரு உடன்படிக்கையையும் பின்பற்றி, ஒரு பொது நிதி நிறுவனம், வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர், வங்கி அல்லது துணிகர மூலதன நிதி ஆகியவற்றால் பங்குச் சந்தா அல்லது நிதி வசதி அல்லது ஏதேனும் ஒன்றை கையகப்படுத்தல் செய்யும் நேர்வில், அத்தகைய

*கையகப்படுத்தலின் விவரங்கள் கையகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் ஆணையத்தில் தாக்கல் செய்யப்படவேண்டும்.*

**இணைப்புகளை புலனாய்வு செய்வதற்கான செயல்முறை**

*சேர்க்கை ஒழுங்குமுறைகளின்படி, ஒரு சேர்க்கை அறிவிப்பு கிடைத்ததிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் இந்தியாவில் தொடர்புடைய சந்தையில் சேர்க்கை போட்டியின் மீது குறிப்பிடத்தக்க பாதகமான விளைவை ஏற்படுத்தக்கூடியதா அல்லது ஏற்படுத்தியுள்ளதா என்பது குறித்து ஆணையம் அதன் முதன்மை முக கருத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். ஆணையம் ஒரு சேர்க்கை ஏதேனும் குறிப்பிடத்தக்க பாதகமான விளைவு ஏற்படக்கூடும் அல்லது ஏற்பட்டுள்ளது எனும் முதன்மை முக கருத்தை கொண்டிருந்தால், இணைப்பின் மீது உரிய புலனாய்வு ஏன் நடத்தக்கூடாது என விளக்கம் கோரும் அறிவிப்பை ஆணையம் சேரும் நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும். பதிலைப் பெற்றபின், சேர்க்கை வணிகப்போட்டியின் மீது குறிப்பிடத்தக்க பாதகமான விளைவைக் ஏற்படுத்துகிறது அல்லது ஏற்படுத்தக்கூடும் என்று ஆணையத்திற்கு முதன்மை முக கருத்து இருந்தால், ஆணையம் சட்டத்தின் விதிகளின் படி அறிவிப்பைக் கையாளும்.*

**போட்டியின் மீதான குறிப்பிடத்தக்க பாதகமான விளைவின் மதிப்பீடு**

*இந்தியாவில் தொடர்புடைய சந்தையில் போட்டியின்மீது ஏற்படும் குறிப்பிடத்தக்க பாதகமான விளைவை சேர்க்கைகளின் ஒழுங்குமுறைக்கான அளவுகோலாக சட்டம் கருதுகிறது. போட்டியின்மீது ஏற்படும் குறிப்பிடத்தக்க பாதகமான விளைவை மதிப்பிடுவதற்காக, பிரிவு 20 இன் துணைப்பிரிவு (4) இல் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளின் அடிப்படையில் சேர்க்கையின் விளைவை மதிப்பீடு செய்ய இந்த சட்டம் ஆணையத்திற்கு அதிகாரம் அளிக்கிறது.*

*சம்பந்தப்பட்ட சந்தையில் போட்டியின் மீதான சேர்க்கையின் குறிப்பிடத்தக்க பாதகமான விளைவை மதிப்பீடு செய்யும் போது ஆணையத்தால் பரிசீலிக்கப்பட வேண்டிய காரணிகள்:*

*(a)* *சந்தையில் இறக்குமதி மூலம் உண்மையான மற்றும் சாத்தியமான போட்டி நிலை;*

*(b)* *சந்தையில் நுழைவதற்கான தடைகளின் அளவு;*

*(c)* *சந்தையில் செறிவு நிலை;*

*(d)* *சந்தையில் எதிர் சக்தியின் அளவு;*

*(e)* *சேர்க்கையின் விளைவாக சேரும் நிறுவனங்கள் விலைகள் அல்லது இலாப வரம்புகளை கணிசமாகவும் நிலையானதாகவும் அதிகரிக்கும் சாத்தியக்கூறு;*

*(f)* *சந்தையில் நிலைத்திருக்கக்கூடிய பயனுள்ள போட்டியின் அளவு;*

*(g)* *எந்த அளவிற்கு மாற்றீடுகள் கிடைக்கின்றன அல்லது சந்தையில் கிடைக்கக் கூடும்;*

*(h)* *தொடர்புடைய சந்தையில், சேர்க்கையில் ஈடுபடும் நபர் அல்லது நிறுவனத்தின் தனிப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த சந்தை பங்கு;*

*(i)* *சேர்க்கையின் விளைவாக சந்தையில் தீவிரமான மற்றும் பயனுள்ள போட்டியாளர் அல்லது போட்டியாளர்கள் அகற்றப்படுவதற்கான சாத்தியக்கூறுகள்;*

*(j)* *சந்தையில் செங்குத்து ஒருங்கிணைப்பின் தன்மை மற்றும் அளவு;*

*(k)* *வணிகம் தோல்வியடையும் வாய்ப்பு;*

*(l)* *புதுமையின் இயல்பு மற்றும் அளவு;*

*(m)* போட்டியின் மீது குறிப்பிடத்தக்க பாதகமான விளைவை ஏற்படுத்தும் ஒரு சேர்க்கை, பொருளாதார வளர்ச்சிக்கான பங்களிப்பின் மூலம், ஒப்பீட்டளவில் நன்மைக்கு வழிவகுக்கிறது;

*(n)* சேர்க்கையின் பாதகமான விளைவுகள் ஏதேனுமிருப்பின், சேர்க்கையின் நன்மைகள் பாதகங்களைவிட அதிகமாக உள்ளதா.

**பசுமை வழி**

சேர்க்கைக்கான ஒப்புதலை விரைந்து செய்வதற்கும் மற்றும் வியாபாரம் செய்வதை எளிதாக்கவும் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான மற்றும் வழக்கமான முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஆணையம் பசுமை வழி திட்டத்தின் கீழ் தானியங்கி ஒப்புதல் முறையை அறிமுகம் செய்துள்ளது. சேர்க்கை ஒழுங்குமுறைகளின் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ள சேர்க்கை வகைகளுக்கு, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், தங்கள் விருப்பப்படி இந்த வழியைத் தேர்வு செய்யலாம். இந்த செயல்முறையின் கீழ், அறிவிப்பு தாக்கல் செய்யப்பட்டு அதற்கான சான்று அளித்ததும், முன்மொழியப்பட்ட சேர்க்கை ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதப்படும். சேர்க்கையில் ஈடுபடும் நிறுவனங்கள் தங்களுடைய சேர்க்கை பசுமை வழிக்குதகுதியுள்ளதா என்பதை அறிய முன் அறிவிப்பு ஆலோசனை வசதியைப் பயன்படுத்திக்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**மேல்முறையீடுகள்**

சட்டத்தின் தொடர்புடைய விதிகளின் கீழ், ஆணையத்தின் ஆணை/ உத்தரவு/ முடிவு கிடைக்கப்பெற்ற 60 நாட்களுக்குள் தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யப்படலாம்.

ஆணையத்திற்கு சேர்க்கை அறிவிப்பு கொடுக்க தவறும் நேர்வில், அச்சேர்க்கையின் மொத்த விற்றுமுதல் அல்லது கூட்டு சொத்துக்களில், எது அதிகமோ, அதில் ஒரு சதவிகிதம் வரை அபராதம் விதிக்க ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளது.

# கனிவான போக்கு

## கனிவான போக்கு

### அறிமுகம்

இந்த கையேட்டில் "வணிகக் கூட்டமைப்பு[1] வழக்குகளைக் கண்டறிவதற்கான கனிவான போக்குத் திட்டம்" பற்றிய தகவல்கள் உள்ளன. இந்தத் திட்டம், வணிகப் போட்டிச் சட்டம், 2002 (திருத்தப்பட்டபடி னைத்), திறம்படச் செயல்படுத்த உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வெளிப்படையான மற்றும் கணிக்கக்கூடிய கனிவான போக்குத் திட்டம் பயனுள்ள ஒன்றாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இது உலகெங்கிலும் உள்ள வணிகக் கூட்டமைப்பு வழக்குகளைக் கண்டறிதல், விசாரித்தல் மற்றும் எதிர்த்துப் போராடுவதற்கான கருவியாகும்.

**இந்திய வணிகப் போட்டி ஆணையம் )சி.சி.ஐ(**இந்திய வணிகப் போட்டி ஆணையம் நாடாளுமன்ற சட்டத்தின் கீழ்கண்ட ஆட்சிக் கட்டளை உரிமையுடன்அமைக்கப்பட்டுள்ளது:

- வணிகப் போட்டியின் மீதான பாதகமான விளைவைக் கொண்ட நடைமுறைகளைத் தடுக்க,
- சந்தையில் போட்டியை ஊக்குவிக்கவும் பராமரிக்கவும்,
- நுகர்வோரின் நலன்களைப் பாதுகாக்க, மற்றும்
- சந்தைகளில், இந்தியாவில், மற்ற பங்கேற்பாளர்களால் மேற்கொள்ளப்படும் வர்த்தக சுதந்திரத்தை உறுதி செய்வதற்கும், அதனுடன் இணைக்கப்பட்ட அல்லது தற்செயலான விஷயங்களுக்காகவும்.

### வணிகப் போட்டிச் சட்டம், 2002

இந்தியாவில், வணிகப் போட்டிக்கு எவ்வித பாதகமான விளைவும் ஏற்படாது என்பதை உறுதிசெய்யும் நோக்கில், இந்த சட்டம் பின்வருவனவற்றைத் தடைசெய்கிறது:

- இந்தியாவில் சந்தைகளில் போட்டிக்கு பாதகமான விளைவை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு ஒப்பந்தத்தினையும்
- நிறுவனங்கள் தங்களது ஆதிக்க நிலையினைத் தவறாகப் பயன்படுத்துதல்

சேர்க்கைகளுக்குள் (இணைப்புகள், ஒருங்கிணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது) நுழைவதையும் இந்த சட்டம் ஒழுங்க்குமுறைப்படுத்துகிறது

### வணிகக் கூட்டமைப்பு: சட்டத்தின் கீழ் அபராதம் விதித்தல்

வணிகக் மோசடிக் கூட்டமைப்பு என்பது வணிகப் போட்டி சட்டத்தின் கீழ், அழிவுண்டாக்கக்கூடிய ஒருகுற்றமாகும். எந்தவொரு மோசடிச் செயலில் ஈடுபடக்கூடிய வணிகக் கூட்டமைப்பினை விசாரிக்கவும், அந்த வணிகக் கூட்டமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபருக்கும் அல்லது நிறுவனத்திற்கும் அபராதம் விதிக்கவும்ஆணையத்திற்கு அதிகாரம் உண்டு. அத்தகைய ஒப்பந்தத்தின் தொடர்ச்சியான ஒவ்வொரு ஆண்டிற்கான லாபத்தின் 3 மடங்கு வரையிலான ஒரு தொகை,அல்லது அத்தகைய ஒப்பந்தத்தின் தொடர்ச்சியான ஒவ்வொரு ஆண்டும் அதன் வருவாயில் 10%, மாகவுள்ள தொகை, இதில் எது அதிகமாக இருக்கிறதோ, அத்தகையதொரு தொகைக்கு இணையான அபராதமாக, ஆணையம் விதித்திடும்.

கூடுதலாக, பின்வரும் உத்தரவுகளில் ஏதேனும் ஒன்றினை, அல்லது அனைத்தையும் (பிரிவு 27) உத்தரவாகப் பிறப்பித்திடவும் ஆணையம் அதிகாரம் பெற்றுள்ளது:

- அத்தகைய கூட்டமைப்பு ஒப்பந்தத்தை நிறுத்தவும், மீண்டும் ஒப்பந்தத்தில் நுழையவிடாமல் தடுத்திடவும் அனைத்துத் தரப்பினருக்கும் உத்தரவு பிறப்பித்திட;

[1] வணிகக் கூட்டமைப்பு பற்றிய விவரங்களுக்கு, பின்னிணைப்பு I ஐப் பார்க்கவும்

- *ஒப்பந்தத்தை மாற்ற சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உத்தரவிட;*
- *செலவுத் தொகைகள் ஏதேனுமிருப்பின் அவை செலுத்துதல் உள்ளிட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்கச் செயல்படுமாறு தொடர்புடைய நிறுவனங்களுக்கு உத்தரவிட இதுபோன்ற பிற உத்தரவுகளை பிறப்பித்திட அல்லது பொருத்தமானவை என்று கருதக்கூடிய அறிவுறுத்தல்களை வழங்கிட.*

**கனிவான போக்குத் திட்டம்**

***கனிவான போக்குத் திட்டம் என்றால் என்ன?***

- *கனிவான போக்குத் திட்டம் என்பது ஆணையத்திடம் கூட்டமைப்பைப் பற்றித் தகவல் தரும் ஒரு வகை அபாய அறிவிப்புப் பாதுகாப்பாகும் .அதாவது வணிக கூட்டமைப்பு உறுப்பினரை மென்மையாக அணுகும் அதிகாரப்பூர்வ அமைப்பாகும்.*
- *விதி மீறல்களில் ஈடுபட்டு முறையான வணிகப் போட்டிக்கு எதிரான ஒப்பந்தங்களை உருவாக்கிச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பல்வேறு வணிகர்களை அவர்களே தாமாக முன்வந்து, அத்தகைய வணிகப் போட்டி விதிமீறல்களை வெளிப்படையாகத் தெரிவிக்கும் செயல்பாட்டினை வரவேற்று ஊக்கமளிக்கும் விதத்தில், வணிகப் போட்டி ஆணையங்கள் பல்வேறு மென்மைப் போக்குடைய திட்டங்களை உருவாக்கி உள்ளன.*
- *கனிவான போக்குத் திட்டம் என்பது தாமாக முன்வந்து தகவல்களை நேர்மையாக சமர்ப்பிப்பவர்களுக்கு ஒரு பாதுகாப்பாகும், இல்லையெனில், ஒரு மோசடியான வணிகக் கூட்டமைப்புஇருப்பதனை, ஆணையம் தானாகவே கண்டறிந்தால், ஆணைக்குழுவின் கடுமையான நடவடிக்கைகளை மோசடியில் பங்கேருப்பவர்கள் எதிர்கொள்ளவேண்டியிருக்கும்.*

***கனிவான போக்குத் திட்டத்தின்அடிப்படைக் கோட்பாடு***

- *தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் ஆணையத்துடன் ஒத்துழைப்பதற்கும் அத்தகைய வணிகக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு இது ஊக்கத்தைத்தரும்.*

***சட்டத்தின் கீழ் கனிவான போக்கு விதிகள்***

*அத்தகைய கனிவான போக்கு விதிமுறைகளை, வணிகப் போட்டி சட்டத்தின் 46ஆம் பிரிவில், பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:*

*வணிகப் போட்டி சட்டம் பிரிவு 3-னை மீறிஉள்ளதாக்க குற்றம் சாட்டப்பட்டுள்ள, யாதொரு தயாரிப்பாளர், விற்பனையாளர், விநியோகஸ்தர், வர்த்தகர் அல்லது சேவை வழங்குநர், ஒரு முழுமையான மற்றும் உண்மையான தகவலை வெளிப்படுத்தி, அத்தகவலும் முக்கியமானது என்று வணிகப்போட்டி ஆணையம் நிறைவு கொண்டால் (திருப்தியடைந்தால்) அத்தகைய தயாரிப்பாளர், விற்பனையாளர், விநியோகஸ்த, வர்த்தர் அல்லது சேவை வழங்குநர் மீது ஏற்ற வகையில், அது குறைவானதொரு தண்டனையை விதித்திடலாம். அந்த தண்டனையானது, சட்டத்தின்கீழ், அல்லது விதிகளின் கீழ் அல்லது ஒழுங்குமுறை நெறிகளின் கீழ் விதிக்கப்படக் கூடிய தண்டனையை விடக் குறைவானதாக இருக்கும்.*

*பிரிவு 26 இன் கீழ் இயக்கப்பட்ட விசாரணை அறிக்கை பெறப்பட்ட சந்தர்ப்பங்களில் ஆணையத்தால் குறைந்த அபராதம் அத்தகைய வெளிப்படுத்துவதற்கு முன்னர் விதிக்கப்படாது.*

*இந்த பிரிவின் கீழ் முழுமையான, உண்மையான மற்றும் முக்கியத்தவுமான தகவலை வெளிப்படுத்திய, ஒரு தயாரிப்பாளர், விற்பனையாளர், விநியோகஸ்தர், வர்த்தகர் அல்லது சேவை வழங்குநர் மீது மட்டுமே ஆணையத்தால் குறைந்த அபராதம் விதிக்கப்படும்.*

*மேலும், வெளிப்படுத்தல் செய்யும் நபர் ஆணைக்குழுவின் முன் உள்ள நடவடிக்கை முடிவடையும் வரை ஆணைக்குழுவுடன் தொடர்ந்து ஒத்துழைக்காவிட்டால் ஆணைக்குழுவினால் குறைந்த அபராதம் விதிக்கப்படமாட்டாது.*

மேலும் ஆணைக்குழு, நடவடிக்கைகளின் போது இருந்து, அத்தகைய உற்பத்தியாளர், விற்பனையாளர், விநியோகஸ்தர், வர்த்தகர் அல்லது சேவை வழங்குநர் வணிகக் மோசடி குழுவில் சேர்க்கப்பட்டுள்ளார் என் ஆணைக்குழு திருப்தி அடைந்தால் –

(a) ஆணைக்குழுவால் குறைந்த அபராதம் விதிக்கப்பட்ட நிபந்தனையுடன் இணங்கவில்லை; அல்லது

(b) தவறான ஆதாரங்களை கொடுத்தது; அல்லது

(c) வெளியீடு முக்கியமானது அல்ல,

மற்றும் அதன்பிறகு, அத்தகைய தயாரிப்பாளர், விற்பனையாளர், விநியோகஸ்தர், வர்த்தகர் அல்லது சேவை வழங்குநர் குறைந்த அபராதம் விதிக்கப்பட்ட குற்றத்திற்காக விசாரிக்கப்படலாம், மேலும் அத்தகைய நபர அபராதம் விதிக்கப்படுவதற்கும் பொறுப்பேற்க வேண்டும், குறைந்த அபராதம் விதிக்கப்படவில்லை.

வனிக்க கூட்டமைப்பில் பங்கேற்பவர்கள் தாமாகவே முன்வந்து கூட்டமைப்புக் குறித்து உண்மையான முழுமையான தகவலை வனிக்க போட்டி சட்டத்தை செயல்படுத்தும் அதிகாரிகளிடம் தெரிவிப்பதை வெகுமதிப்படுத்தவும் மற்றும் அத்தகைய அதிகாரிகளின் விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிப்பதை ஊக்குவிக்கவும், கனிவான போட்டி திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**கனிவான போக்குடைய திட்டம் - யாருக்காக?**

அபராதத்திலிருந்து குறைப்பு அல்லது முழுவதுமான பொது மன்னிப்பு அளிக்கப்படுவதற்கு, ஆணையத்திடம், ஒரு முறையற்ற வணிகக் கூட்டணியில் அவர்களின் பங்கை வெளிப்படுத்துவதுடன் அடுத்தடுத்து மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு ஒத்துழைக்கும் நிறுவனங்களுக்கு / தனியர்களுக்கு கனிவான போக்குடைய திட்டம் உதவிக்கரம் நீட்டும்!. சதி நோக்கில் உருவாக்கப்படும் கூட்டமைப்புகளுக்கு எதிராகப் போராடுவதற்கான சிறந்த வழியாக கனிவான போக்குடைய திட்டங்கள் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

கனிவான போக்குடைய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, ஆணையம் 2009ஆம் ஆண்டில் இந்திய போட்டி ஆணையம் (குறைந்த அபராதம்) முறைப்படுத்து நெறிகளை, வகுத்துள்ளது. அதன் முக்கிய அம்சங்கள் அடுத்துவரும் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

**முறைப்படுத்துதல் - 2009ஆம் ஆண்டு இந்திய போட்டி ஆணையம் (குறைந்த அபராதம்)**

**ஒழுங்குமுறை நெறிகள்**[2]

சட்டத்தில் கனிவான போக்கு தொடர்பான ஒழுங்குமுறைவிதிகளை உருவாக்க, பிரிவு 64 ஆணையத்திற்கு அதிகாரம் அளிக்கிறது. அத்தகைய அதிகாரங்களைத் தொடர்ந்து, 2009ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில், இந்திய வணிகப் போட்டி ஆணையம் (குறைந்த அபராதம்) ஒழுங்குமுறைகள், 2009னை வெளியே கொண்டு வந்தது . இந்த விதிமுறைகளின் கட்டமைப்பு ஆணையக்குழுவிற்கு வணிகக் கூட்டணி உறுப்பின்னர் வழக்கில் வழங்கப்படுவதற்குரியதை விட குறைந்த தண்டனைகளை வழங்க வசதிசெய்கிறது..

ஒரு கனிவான போக்குடைய திட்டத்தில் மூன்று முக்கிய கூறுகள் உள்ளன. அவையாவன- ஒரு கனிவான போக்குடைய திட்டத்தின் கீழ், பயன்களைப் பெற்றிட நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகளின் ஒரு தொகுப்பு, குறைந்த அபராதம் வழங்குவதற்கான நடைமுறை மற்றும் சதிநோக்குடன் செயல்படும் கூட்டமைப்பு பற்றிய தகவலினை வழங்குதலின் மூலம் வணிகப் போட்டி ஆணையத்துடன் தமது ஒத்துழைப்பை அளிக்கும் அக்கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினருக்கு, பெருந்தன்மையாக நடத்தப்படக்கூடிய வாய்ப்பு அளிக்கப்படும்போது, தள்ளுபடி செய்யப்படுகின்ற தண்டனைகளின் அளவு. இந்த கூறுகள் ஒவ்வொன்றும் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**கனிவான போக்கு விதிமுறைகளின் பயன்களைப் பெறுவதற்கான நிபந்தனைகள்**

[2] விவரங்களுக்கு, பின் இணைப்பு II ஐப் பார்க்கவும்

*விண்ணப்பதாரர் பின்வருவனவற்றை அளிக்க வேண்டும்:*

- *சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் புலன் விசாரணை அறிக்கை பெறப்படுவதற்கு முன்னர் தகவல்களை வழங்குவதற்கு உத்தரவிடப்படுகிறது.*
- *ஆணையத்தால் உத்தரவிடபட்டாலன்றி வணிகநிறுவனக் கூட்டணியில் அவை வெளியான நாளிலிருந்து அதனுடனான மேலும் பங்கேற்பதை தவிர்க்கவும்.*
- *சட்டத்தின் பிரிவு 3 இன் துணைப்பிரிவு (3) இன் கீழ் விதிமீறல் தொடர்பாக முக்கிய ஆவணங்களை வழங்குதல்.*
- *ஆணையத்தால் கோரபட்டவாறான அனைத்து தொடர்புடைய தகவல்கள், ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களை வழங்குதல்.*
- *விசாரணை மற்றும் பிற நடவடிக்கைகள் முழுவதும் உண்மையான, முழுமையாக, தொடர்ச்சியாக மற்றும் விரைவாக ஆணைக்குழுவுடன் ஒத்துழைக்க வேண்டும்.*
- *ஒரு வணிக நிறுவனக் கூட்டணியுடன் தொடர்புடைய தொடர்புடைய ஆவணங்களை எந்த வகையிலும் மறைக்கவோ, அழிக்கவோ, கையாளவோ அல்லது அகற்றவோ கூடாது.*
- *பின்வரும் சூழ்நிலைகளைப் பொறுத்து அபராதத் தொகை குறைப்பு செய்யப்படும்:*
  - *விண்ணப்பதாரர் வெளிப்படுத்தலுடன் முன் வரும் கட்டம்*
  - *ஏற்கனவே ஆணைத்திடன் உள்ள சான்றுகள்*
  - *விண்ணப்பதாரர் வழங்கிய தகவலின் தன்மை*
  - *வழக்கின் முழு உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள்*

**குறைந்த அபராதம் பெறுவதற்கான நடைமுறை**

- *விண்ணப்பதாரர் வாய்மொழியாகவோ அல்லது மின்னஞ்சல் அல்லது நிகரி மூலமாகவோ நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் விண்ணப்பிக்கலாம்.*
- *ஆணையம் விண்ணப்பதாரரின் முன்னுரிமை நிலையை குறிப்பிட வேண்டும். மேலும், நியமிக்கப்பட்ட அதிகாரி அதனை விண்ணப்பதாரருக்கு தெரிவிக்க வேண்டும். ஆனால், அதனைத் தெரிவிப்பதால் மட்டுமே விண்ணப்பதாரர் குறைந்த தண்டனை பெறுவதற்கான உரிமை பெற்றவராகக் கருதப்படக் கூடாது.*
- *நியமிக்கப்பட்ட அதிகாரியால் பதிவு செய்யப்பட்ட நாள், மற்றும் நேரம் ஆணையத்தால் விண்ணப்பம் பெறப்பட்ட நாளாகவும் நேரமாகவும் இருத்தல் வேண்டும்.*
- *முதல் விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கபட்ட சான்றுகள் மதிப்பீடு செய்யப்படாதவரை, அடுத்த விண்ணப்பதாரர் பரிசீலனை செய்யப்பட மாட்டார்!*
- *விசாரணைக்குத் தொடர்ச்சியான ஒத்துழைப்பு அளிக்கத் தவறிடின், அந்த விண்ணப்பதாரருக்கு, விசாரணைக்கு உரிய வாய்ப்பை வழங்கிய பின்னர், அவரது விண்ணப்பத்தை நிராகரிக்க ஆணையத்திற்கு உரிமை உண்டு.*
- *முதல் விண்ணப்பதாரரின் முன்னுரிமை நிலையை நிராகரித்த பின்னர், அடுத்தடுத்த விண்ணப்பதாரர்கள் ஆணையத்தால் முன்னுரிமை நிலையை வழங்குவதற்கான முன்னுரிமையின் வரிசையில் முன்னேறுவார்கள்.*

**கனிவான போக்கு விதித்துறைகளின் கீழ், சட்டப்படியான தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் அளவு**

*வணிகப் போட்டி சட்டத்தின் பிரிவு 27 இன் பகுதி (b) இன் கீழ் வரையறுக்கபட்ட அபராதத்துடன் ஒப்பிடுகையில், கனிவான போக்கு விதித்துறைகளின் கீழ் கிடைக்கப்பெறும் சட்டப்படியான தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் அளவு பின்வருமாறு-*

சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில், ஒரு வணிக நிறுவனக் சதி நோக்கிலான (மோசமான)கூட்டணி இருந்து வருவது குறித்த ஒரு கருத்தினை முதல் நோக்கில் உருவாக்கிக் கொள்ள, ஆணைத்திற்கு உதவும் ஒரு முக்கிய வெளிப்படுத்தலை மேற்கொள்ளும் முதல் மனிதராக அவர் இருந்தால், 100% வரை அல்லது 100% சம அளவிலான தண்டனையைக் குறைப்பின் பயன் அவருக்குக் கிடைக்கும். மேலும்,

- ஆணையத்திடம் அல்லது தலைமை இயக்குநரிடம் அத்தகைய முரண்பாட்டை மெய்ப்பித்துக் காட்டிட போதுமான ஆதாரங்கள் இல்லையெனில், இந்த விவகாரம் புலன் விசாரணையில் இருந்து வந்து, ஆனால்,, விண்ணப்பதாரர் தகவல்கள் எதனையும் வெளிப்படுத்தாமல் இருந்தபோதிலும் 100% வரை அல்லது 100% க்கு சம அளவிலான அபராதத் தொகையைக் குறைப்பதர்கான பலன் அவருக்குக் கிட்டிடும் ;

- விண்ணப்பதாரர் விண்ணப்பம் அளித்திடும் நேரத்தில்,, வேறு எந்த ஒரு விண்ணப்பதாரருக்கும் ஆணையத்தால் அத்தகைய பலன் வழங்கவில்லை என்றால் , அபராதம் குறைக்கப்படுவதன் நன்மை 100% வரை அல்லது 100% க்கு சமமான அளவில் இவருக்கு அளிக்கப்படுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

- சதி நோக்கிலான அல்லது மோசமான செயல்பாடுகளைக் கொண்ட வணிகக் கூட்டு இருந்து வருவதனை மெய்ப்பிப்பதற்கான, ஆணையம் வசம் அல்லது தலைமை இயக்குநர் வசம் முன்னதாக உள்ள ஆதாரத்திற்கு உரமூட்டும் வகையில் / வலுச் சேர்க்கும் வகையில், முன்னுரிமை வரிசையிலுள்ள இரண்டாவது அல்லது மூன்றாவது வரிசையில் உள்ள விண்ணப்பதாரர் அளிக்கும் ஆதாரத்தின் மூலம் கிடைத்திடும் தகவல் வெளிப்பாட்டிற்காக, அவரிருவருக்கும் முறையே, 50% மற்றும் 30% தண்டனைக் குறைப்பு வழங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளது.

**கமுக்கத்தன்மை**

2009 ஆம் ஆண்டு இந்திய வணிகப் போட்டி ஆணைய (குறைந்தளவு தண்டத்தொகை) விதிமுறைகள், விதிமுறைகளின் கீழ், விண்ணப்பதாரரின் அடையாளம், அதுபோன்ற, இந்த விதிமுறைகளின் கீழ் பெறப்பட்டுள்ள தகவல்கள், ஆகியவை கமுக்கத்தன்மை வாய்ந்தவையாகக் கருதப்பட்டு, அவை பின் வரும் மூன்று சூழ்நிலைகளில்லாது, வேறு எந்த நிலையிலும் வெளிப்படுத்தப்படாமல் கமுக்கமாகவே பாதுகாக்கப்பட வேண்டும் அவையாவன-

- அவற்றை வெளியிடுவது சட்டத்திற்கு அவசியம் என கருதப்படும் நேர்வில்; அல்லது
- எழுத்து வடிவில் அவற்றை வெளிப்படுத்துவதற்கு விண்ணப்பதாரர் ஒப்புக்கொண்ட நேர்வில்
- விண்ணப்பதாரர் அவற்றை பலரறியும்படி வெளிப்படையாக வெளிப்படுத்தியுள்ள நேர்வில்

மேலும், அவசியமெனில், ஆணையத்தின் முன் அனுமதி பெற்று, விசாரணையின்போது, பிற தரப்பினர்களுக்கு தலைமை இயக்குநரால் அத்தகைய தகவல்கள், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் வெளிப்படுத்தப்படலாம்.

தலைமை இயக்குநரின் விசாரணை அறிக்கையானது, பிற தரப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட பின்னரே, பிற தரப்பினர்களுக்கு அத்தகைய தகவல்கள், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின் கமுக்கத்தன்மையற்ற பதிப்பு வெளிப்படுத்தப்பட வேண்டும்.

கமுக்கத்தன்மையை பேணுவதற்கான இத்தகைய ஏற்பாடு, ஆணையத்திடம் முக்கிய தகவல்களை அளிப்பதற்கு ஊக்கமளிக்கும்.

**நிறைவுரை**

ஆணையத்தின், வெளிப்படையான மற்றும் அறிந்து உணரக்கூடிய இந்த கடுமையற்ற திட்டமானது, சட்டத்தை சிறப்பாகவும் திறம்படவும் செயலாக்குவதற்கு உதவுகிறது. ஆணையத்தின் கடுமையற்ற திட்டத்தின் மூலம் பெறக்கூடிய பயன்கள் குறித்து அறிந்த பின்னர், தனிநபர்களும் வணிக நிறுவனங்களும் முன்வந்து ஒத்துழைப்பு நல்குவதற்கும் குற்றத்தை ஒப்புக்கொள்வதற்கும் (வாதிடாமல்) தயாராக உள்ளனர்.

செயல்திறன்மிக்க கனிவான போக்கு திட்டத்தின் பயன்கள் பின்வருமாறு:

- வணிக நடவடிக்கைகளில் கூட்டு உடன்படிக்கையாளர்களைக் கண்டறிவதில் மிக அதிகமான சாத்தியக்கூறுகள். மேலும், கூட்டு உடன்படிக்கையிலுள்ளோரைக் கண்டறிந்த நிலையில் அவர்கள் மீது

*விதிக்கப்படும் தடைகள், சதி நோக்கில் அமைந்துள்ள அல்லது மோசமான, வணிக நிலையங்களுடனான கூட்டு முறையினால் கிடைக்கப்பெறும் பயன்களைக்காட்டிலும் அதிகமானதாகும்.*

- *ஆணையத்தின் கனிவான போக்குதிட்டத்தில் அதிகப்படியான வெளிப்படைத்தன்மையும் உறுதித்தன்மையும் உள்ளன. முக்கியத் தகவல்களுடன் வரும் மற்றும் முன்னரே தீர்மானிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றும் விண்ணப்பதாரர்கள், இச்சட்டத்தின் கீழ் உள்ள விதித்துறைகளில் கூறப்பட்டுள்ள கனிவான போக்குகிலான பயன்களை நிச்சயம் பெற முடியும்.*

- *ஒத்துழைப்பின் வாயிலாக சேகரிக்கப்பட்ட சாட்சியங்கள் /சான்றுகள், பொறுப்புகளை நிர்ணயிப்பதில் மிகப் பெரும் தெளிவினைப் பெற வழிகாட்டும்.*

- *நாட்டின் சட்டங்களை மீறுபவருக்குக் பாதகமான விளம்பரம் மற்றும் அச்சம், ஏற்படும் களங்கம் குறித்த அச்சம் மற்றும் கனிவான போக்கு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகைகள் ஆகியவை, விதிகளை மீறும் நிறுவனங்களை, கனிவான போக்குதன்மைக்கு விண்ணப்பிக்க தூண்ட வேண்டும்.*

  *சுருக்கமாக, கடுமையற்ற விதித்துறைகளைப் பெறுதல் என்பது, ஆணையத்திற்கும், ஆணையத்துடன் தகவல்களை பகிர்ந்து கொள்ள விரும்பும் வணிக கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் வெற்றி வாய்ப்பை ஈட்டித் தரும் சூழலாகும்.*

### ஆணையத்தை எவ்வாறு தொடர்பு கொள்வது?

*இச்சட்டம் குறித்த, 2009 ஆம் ஆண்டு இந்திய வணிக போட்டி ஆணைய (குறைந்தளவு தண்டத்தொகை) விதிமுறைகள், குறித்த கூடுதல் தகவல்களைப் பெற விரும்பும்,அல்லது இவற்றின் ஏதேனும் ஒன்றின் கீழ் தகவல்களைத் தாக்கல் செய்ய விரும்பும் யாதொரு நபரும், கீழ்கண்ட முகவரியில் ஆணையத்தை தொடர்பு கொள்ள வேண்டும்-*

<table>
<tr><td colspan="2" align="center">வலைதளம்: <u>www.cci.gov.in</u><br>9 ஆம் தளம், அலுவலக கட்டடம் – 1<br>கித்வாய் நகர் (கிழக்கு)<br>புதுதில்லி: 110023</td></tr>
<tr><td>2002 ஆம் ஆண்டு வணிகப் போட்டி சட்டம் மற்றும் விதிமுறைகள், தொடர்புடைய தகவல்களுக்கு</td><td>2009 ஆம் ஆண்டு இந்திய வணிகப் போட்டி (குறைந்தளவு தண்டத்தொகை) விதிமுறைகள், 2009- 2(f) மற்றும் 5ஆம் விதிமுறைகளின் கீழ் பணியமர்த்தப்பட்டுள்ள அதிகாரி</td></tr>
<tr><td>செயலாளர்</td><td>செயலாளர்</td></tr>
<tr><td>இந்திய வணிகப் போட்டி ஆணையம்<br>தொலைபேசி : + 91-11-20815009<br>நிகரி: +91-11-20815019<br>மின்னஞ்சல்: <u>secy@cci.gov.in</u></td><td>இந்திய வணிகப் போட்டி ஆணையம்<br>தொலைபேசி : + 91-11-20815009<br>நிகரி: +91-11-20815019<br>மின்னஞ்சல்: <u>secy@cci.gov.in</u></td></tr>
</table>

*பின்னிணைப்பு -I*

**வணிக கூட்டு உடன்படிக்கை**[3]

***சட்டத்தின் படி***

*இந்திய வணிகப் போட்டி சட்டத்தின் பிரிவு 2, துணைப்பிரிவு c இது பற்றி வரையறுத்துக் கூறுவதாவது :*

*பொருள் தயாரிப்பு, விநியோகம், விற்பனை அல்லது அதன் விலை அல்லது பொருள் வணிகம் அல்லது சேவை வழங்கல் ஆகியவற்றை வரையறுத்திடவோ, கட்டுக்குள் வைக்கவோ, பொருள் தயாரிப்பைக் கட்டுக்குள் வைக்க முயற்சிக்கவோ ஈடுபடும் நோக்கில், பொருள் தயாரிப்பாளர்கள், விற்பனையாளர்கள், விநியோகதஸ்தர்கள், வர்த்தகர்கள் அல்லது சேவை வழங்குநர்கள் உள்ளிட்டோர் தங்களுக்குள் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு, அதனடிப்படையில் ஒரு சங்கமாகச் செயல்படுவது, முறையற்ற வணிகக் கூட்டு என வழங்கற்பெறும். (எனப்படும்)*

*''வணிகக் கூட்டு உடன்படிக்கை'' என்றால் என்ன?*

- *வணிக கூட்டு உடன்படிக்கை என்பது, விலை, பொருள் (சரக்கு மற்றும் சேவைகள் உட்பட) அல்லது வாடிக்கையாளர்கள் குறித்து போட்டி கூடாது என்பதற்காக நிறுவனங்களிடையேயான (தனிநபர், அரசு துறை மற்றும் தனிநபர் / நிறுவனங்களின் கூட்டமைப்பு உட்பட) ஒப்பந்தங்களாகும்.*

- *போட்டி நிலைகளைக் கடந்து, விலைகளை அதிகரிப்பதே வணிகக் கூட்டு உடன்படிக்கையின் நோக்கமாகும், இதனால், வாடிக்கையாளர்களுக்கும் பொருளாதாரத்திற்கும் தீங்கு ஏற்படும். வணிகக் கூட்டு உடன்படிக்கை செய்து கொள்வதால், நுகர்வோர்களுக்கு, அதிக விலையில், குறைந்த தரத்திலான பொருட்கள் கிடைப்பதுடன் சரக்கு அல்லது / மற்றும் சேவைகளைத் தெரிவு செய்வதற்கான குறைவான வாய்ப்புகளே இருக்கும் அல்லது வாய்ப்புகளே அமையாது.*

- *இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்கள், விலைகளை நிர்ணயம் செய்வதற்காக, உற்பத்தி மற்றும் வழங்கலை கட்டுப்படுத்துவதற்காக, சந்தைப் பங்கு அல்லது விற்பனைப் பங்குகளை ஒதுக்கீடு செய்வதற்காக, அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சந்தைகளில் கூட்டு ஏலம் அல்லது ஏலம் மோசடியில் ஈடுபடுவதற்காக, தெளிவான அல்லது குறிப்பு சார்ந்த உடன்படிக்கையை மேற்கொள்ளும்போது, வணிகக் கூட்டு உடன்படிக்கை இருப்பதாகக் கூறப்படுகிறது. வணிகம் சார்ந்து போட்டியிடுவதற்காக அல்லது போட்டியைக் கட்டுப்படுவதற்காக அல்லாமல், போட்டியிடும் நிறுவனங்களிடையே ஓர் உடன்படிக்கை அவசியமாகிறது என்பதே வணிகக் கூட்டு உடன்படிக்கையின் பொருள் வரையறையில் ஒரு முக்கியமான கூறாகும்.*

- *போட்டிக் கட்டுப்பாட்டாளர்களுக்கான ஒப்பந்தத்தின் மிகவும் தீங்கு விளைவிக்கும் வடிவமாக, வணிகக் கூட்டு உடன்படிக்கைகள் உலகளவில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன .இது மிகவும் மோசமான, வணிக சட்ட மீறலாகும். வணிகப் போட்டிக் கொள்கையின் மிக முக்கியமான குறிக்கோள்களில் ஒன்று, வணிகக் கூட்டு உடன்படிக்கைகளை வேரறுப்பதாகும் .வணிக கூட்டு உடன்படிக்கைகளின் சூழ்ச்சியாளர்களைத் தடுக்க, உலகெங்கிலும் உள்ள பல்வேறு அதிகார வரம்புகளில், குற்றவியல் வழக்கு உட்பட, வலுவான தடைகளை விதிக்கக் கடுமையான விதிகள் இணைக்கப்பட்டுள்ளன .இந்தியாவில், இதுபோன்ற முறையற்ற வணிக கூட்டு உடன்படிக்கையில் பங்கேற்பது ஒரு உரிமயியல் குற்றமாகும்.*

[3] *வனிக்க கூட்டு பற்றிய மேலும் தகவலுக்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும்:*
*»www.cci.gov.in*
*» "வணிகப்போட்டி ஆதரித்தல் கையேடுகள்" மீது கிளிக் செய்யவும்*
*» "வனிக்க கூட்டு தொடர்பான விதிகள்" மீது கிளிக் செய்யவும்*

*பின்னிணைப்பு II*

***(சிறப்பரசிதழ் பகுதி - III, பிரிவு 4ல் வெளியிடப்பெற்றது)***

**இந்திய வணிகப் போட்டி ஆணைய அறிவிக்கை**

***2009 ஆம் ஆண்டு இந்திய வணிகப் போட்டி ஆணையத்தின் (மிகக் குறைந்த தண்டனை) ஒழுங்குமுறை நெறிகள்***

***(2009ஆம் ஆண்டின் எண். 4)***

*புதுதில்லி, 2009 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13-ஆம் நாள் (13.08.2009)*

*குறிப்பு எண். டு-3(4)/ஒழுங்குமுறை-L. P/2009-10/CCI. - 2002ஆம் ஆண்டு வணிகப் போட்டிச் சட்டம், பிரிவு 64ன் உடன் படிக்கப்பட்ட சட்டப்பிரிவு 46 மற்றும் சட்ட பிரிவு 27ன் கூறு (b) மூலம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, இந்திய வணிகப் போட்டி ஆணையம் பின்வரும் ஒழுங்குமுறை நெறிகளை இதன்வாயிலாக அறியச் செய்கிறது. அதாவது / அவையாவன : -*

***1. குறுத்தலைப்பும் தொடக்கமும்***

*(1) இந்த ஒழுங்குமுறை நெறிகள், 2009 ஆம் ஆண்டு இந்திய வணிகப் போட்டி ஆணையத்தின் (மிகக் குறைந்த தண்டனை) ஒழுங்குமுறை நெறிகள் என அழைக்கப்படலாம்.*

*(2) அவை அதிகாரப்பூர்வ அரசிதழ் வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்*

***2. பொருள் வரையறைகள்***

*(1) இந்த ஒழுங்குமுறை நெறிகள், சூழலுக்கு ஏற்றபடி, தேவைப்படும் மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தாலொழிய, மற்றபடி கீழ்க்காணும் பொருள் வரையரைக் கொண்டதாக இருக்கும்:*

*(a) "சட்டம்" என்றால் 2002 ஆம் ஆண்டு வணிகப் போட்டி ஆணையம் (2003ன் 12) என்று பொருள்படும்.*

*(b) இந்திய வணிகப் போட்டிச் சட்டம், பிரிவு 2ன்(h) சட்டக் கூறு வரையறுத்துக் கூறப்பட்டுள்ளதைப் போல், விண்ணப்பதாரர் என்பவர் ஒரு நிறுவனமாவார். அந்த விண்ணப்பதாரர் ஒரு மோசடிக் கூட்டமைப்பின் ஓர் உறுப்பினராக இருந்தவர் அல்லது இருப்பவர் என்பதோடு, ஒரு நிறுவனத்தின் சார்பில் ஒரு மோசடிக் கூட்டமைப்பின் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஒரு தனியராகவும் சேர்த்துக் கொள்ளப்படத் தக்கவராவார். அவர் தமக்கு மிகக் குறைந்த தண்டனை வேண்டி ஆணையத்திடம் விண்ணப்பம் ஒன்றினையும் அளிக்கிறவர் ஆவார்.*

*(c) 'தங்களுக்குள் ஒரு கூட்டு உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டு பொருள்களின் விலைகளை ஏற்றி விற்பனை செய்யும் உற்பத்தியாளர்கள் அல்லது சரக்கு விற்பனையயாளர்களின் கூட்டமைப்பு' என்பது, இந்தியவ வணிகப் போட்டி சட்டம், பிரிவு 2ன் (c) சட்டக் கூறு யில் வரையறுக்கப்பட்டுள்ள "மோசடிச் கூட்டமைப்பு" ஆகும்.*

*(d) "ஆணையம்" என்று குறிக்கப் பெறுவது இந்திய வணிகப் போட்டிச் சட்டம், பிரிவு 7ன் கீழ் நிறுவப்பெற்றுள்ள இந்திய வணிகப் போட்டி ஆணையம் ஆகும்.*

*(e) "நிறுவனம்" என்ற சொல் (இனி, இங்கு) இந்திய வணிகப் போட்டிச் சட்டம், பிரிவு 48ன் உட்பிரிவு (துணைப்பிரிவு) 2க்கு விளக்கம் தரும் வகையில் சட்டக்கூறு (a) வில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது போல் உள்ள ஒரு நிறுவனமாகும்.*

*(f) (இனி, இங்கு) "பதவியமர்த்தப்பட்ட அதிகாரி" என்றால், இந்த ஒழுங்குமுறை நெறிகளின் நோக்கங்களுக்காகத் (தேவைகளுக்காகத்) தலைவரால் அதிகாரம் அளிக்கப்பட்டு, அப்படிப்பட்ட அதிகாரத்துடன் செயல்படப் பதவியமர்த்தப்பட்ட ஓர் அலுவலராவார் என்று பொருள் கொள்ளப்பட வேண்டும்.*

(g) (இனி, இங்கு), "தலைமை இயக்குநர்" எனப்படுவார், இந்திய வணிகப் போட்டி ஆணையச் சட்டம், பிரிவு 2ன் உட்கூறு (g) யில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ள தலைமை இயக்குநர் ஆவார்.

(ga) "தரப்பு (தரப்பினர்)" என்ற சொல், இந்திய வணிகப் போட்டி சட்டம், பிரிவு 2ன் உட்கூறுகளான (h) லும் (l) லும் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளவாறு, (யாதொருவருக்கு எதிராக) விசாரணை அல்லது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற ஒரு நிறுவனம் அல்லது ஒரு தனிமனிதரை உட்படுத்துவதாகும்.

மேலும், இது மத்திய அரசு, யாதொரு மாநில அரசு அல்லது சட்டப்பூர்வமான ஆணைக்குழு ஆகியவற்றையும் சேர்த்துக் குறிப்பிடுவதாக அமையும். தவிர, சட்ட நடவடிக்கையில் சேர்ந்து கொள்ள அனுமதிக்கப்படும் யாதொரு தனிமனிதரையுங் கூட இச்சொல் உட்படுத்தியே தீர வேண்டும்.

(h) "முன்னுரிமை நிலை" என்பது, விண்ணப்பதாரர்களின் வரிசையில், குறைந்த தண்டனை வழங்கப்பெறும் பயனைப் பெறுவதற்காகக் குறிக்கப்பெற்றுள்ள விண்ணப்பத்தின் நிலையாகும்.

(i) "முக்கியமான வெளிப்படுத்தல்" என்பது, ஒரு மோசடிக் கூட்டமைப்பு இருந்து வருவது குறித்த, அல்லது இந்திய வணிகப் போட்டி "ஆணையச் சட்டம், பிரிவு 3ன் விதித்துறைகள் மீறப்படுவதாக அமைந்துள்ளவற்றை நிறுவிட (வலியுறுத்த) உதவிடும் ஓர் அடிப்படைக் கருத்தினை உருவாக்கிட, ஆணையத்துக்குப் போதுமானதாக விளங்கிடும் முழுமையான மற்றும் உண்மையான தகவல் வெளிப்பாடு அல்லது விண்ணப்பதாரரால் வழங்கப்படும் சான்று என்று பொருள்படும்

(2) இந்த ஒழுங்குமுறை நெறிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள, ஆனால் வரையறை செய்யப்படாத சொற்களும், வெளிப்பாடுகளும், நேர்வைப் பொறுத்து, முறையே சட்டத்தில், விதிகளில், ஒழுங்குமுறை நெறிகளில் அல்லது 2013 ஆம் ஆண்டு இந்திய வணிகப் போட்டி ஆணையச் சட்டத்தில், (2013 ஆம் ஆண்டின் 18) உரிமைப் படுத்தப்பட்டுள்ள / ஒதுக்கப்பட்டுள்ள அதே பொருள்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. **மிகக் குறைந்த தண்டனைக்கானை நிபந்தனைகள் (கட்டுப்பாடுகள்)**

(1) இந்திய வணிகப் போட்டி ஆணையத்தின் 46ஆம் பிரிவின் கீழ் மிகக் குறைந்த தண்டனையின் பயனைப் பெறக்கோரும் ஒரு விண்ணப்பதாரர்:

(a) மோசடி வெளிப்பட்ட நேரத்திலிருந்து ஆணையத்தின் கட்டளைக்குக் காத்திராமல் அல்லது ஆணையத்தின் கட்டளையை ஏற்று, மோசடிக் கூட்டமைப்பில் மேலும் பங்கேற்பதை விட்டொழிக்க வேண்டும்.

(b) இந்திய வணிகப் போட்டி ஆணையச் சட்டத்தின் விதித்துறை மீறல்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வர வேண்டும் (முக்கியத் தகவல் வெளிப்பாட்டினை வழங்கிட வேண்டும்)

(c) ஆணையத்திற்குத்தேவைப்படலாமென்று கருதக்கூடிய அனைத்து முக்கியத் தகவல் ஆவணங்கள் மற்றும் சான்றினை (த் தயக்கமின்றி) அளித்திட வேண்டும்.

(d) புலனாய்வு (செய்யப்படும் காலம்), முழுவதிலும், உண்மையாக, முழுமையாக, தொடர்ச்சியாக மற்றும் விரைவாக ஒத்துழைப்பினை ஆணையத்தின் முன் நல்கிட வேண்டும். அதுமட்டுமின்றி, ஆணையத்தின் பிற செயல் நடவடிக்கைகளுக்கும் துணை நிற்க வேண்டும்.

(e) ஒரு மோசடி / சதிக்கூட்டமைப்பு உருவாகியிருந்திருப்பதனை வெளிக்காட்டிடும் தொடர்புடைய பொருத்தமான ஆவணங்களை எந்த விதத்திலும் மறைத்திடும், அழித்திடும், சூழ்ச்சித்திரனுடன் கையாளும் (திருத்தங்கள் செய்திடும்) அல்லது (முற்றிலும்) நீக்கிடும் செயலில் ஈடுபடவே கூடாது!

(1A) விண்ணப்பதாரர், ஒரு நிறுவனமாக இருக்கும் பட்சத்தில், அந்த நிறுவனத்தின் சார்பில், மோசடியில் ஈடுபட்டுள்ளவர்களின் பெயர்களையும், அப்படிப்பட்ட நிறுவனத்தால் குறைந்தளவிலான தண்டனை விதிக்கப்படக் கோருபவர்களின் பெயர்களையும் கட்டாயம் அளித்திட வேண்டும்.

*(2) துணை ஒழுங்குமுறை நெறியில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு விண்ணப்பதாரர் இணங்கத் தவறும் பட்சத்தில், வணிகப்போட்டிச் சட்டம் பிரிவு 46ன் விதித்துறைகளுக்கு ஏற்ப, விண்ணப்பதாரரால் வழங்கப்படும் தகவலினையும் சான்றினையும் ஆணையம் தங்கு தடையின்றி (சுதந்திரமாக)ப் பயன்படுத்தும் அதிகாரத்தைப் பெற்றுள்ளதாக விளங்கும்.*

*(3) வழக்கின் உண்மைகளையும், சூழ்நிலைகளையும் கருதிப் பார்த்த பின்னர், துணை ஒழுங்குமுறை நெறிகள் 1 மற்றும் 2ற்குப் பாரபட்சமின்றி ஆணையம், தகுதியானவை எனத் தான் கருதும் தடைகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு விண்ணப்பதாரரை உட்படுத்தலாம்.*

*(4) இந்த ஒழுங்குமுறை நெறிகளின் கீழ், அபராதத் தொகைக் குறைபாட்டை (நிதி சார்ந்த தண்டனைக் குறைப்பினை)ப் பொறுத்தவரை, ஆணையத்தின் விருப்புரிமை, கீழ்க்காணும் நிலைகளுக்கு முறையான மதிப்பளிக்கும் வகையில் பயன்படுத்தப்படும் / பயன்படுத்தப்பட வேண்டும்.*

*(a) எந்த நிலையில் விண்ணப்பதாரர் வெளிப்பாட்டினை அளிக்க முன்வருகிறார், என்பதைப் பொறுத்தும்,*

*(b) ஆணையம் ஏற்கனவே (தன்வசம்) வைத்திருக்கும் சான்றினைப் பொறுத்தும்*

*(c) விண்ணப்பதாரரால் வழங்கப்படும் தகவலின் தரத்தைப் பொறுத்தும்*

*(d) வழக்கின் முழு உண்மைகள் (விவரங்கள் / தகவல்கள்) மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்தும், இவ்விருப்புரிமை பயன்படுத்தப்படும் / பயன்படுத்தப்பட வேண்டும்.*

### *4.* ***மிகக் குறைந்த அபராதம் வழங்குதல்***

*ஒழுங்குமுறை நெறி 3ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஒழுங்குமுறை நெறி 3ன் துணை நெறிமுறை (1Aவில்) குறிப்பிட்டுள்ள விண்ணப்பதாரர் மற்றும் தனியருக்கு, வணிகப் போட்டி ஆணையம் சட்டம் பிரிவு 27ன் உட்கூறு (b) மற்றும் பிரிவு 48ன் கீழ் விதிக்கத்தக்க தண்டணையை விட, ஆணையம் முடிவு செய்வதற்கு ஏற்ற வகையில், மிகக் குறைந்த தண்டனை / அபராதம் விதிக்கப்படக்கூடிய பயனைக் கீழ்க்காணும் விதத்தில் வழங்கலாம், அதாவது,*

*(a) வணிகப் போட்டிச் சட்டப் பிரிவு 3ன் விதித்துறைகள் மீறப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்படும் ஒரு மோசடிக் கூட்டமைப்பு இருந்து வருவது குறித்து ஓர் அடிப்படைக் கருத்தினை ஆணையம் உருவாக்க உதவிட, அதற்குரிய சான்றுடன், முக்கிய வெளிப்பாடு ஒன்றினை அளித்திடும் முதலாமவராக விண்ணப்பதாரர் இருந்தால், ஒழுங்குமுறை நெறி 3-ன் துணை நெறிமுறை (1Aவில்) குறிப்பிட்டுள்ளவாறு, விண்ணப்பதாரரும் தனியரும் அபராதத் தொகைக் குறைப்பில், நூறு விழுக்காட்டளவு வரையிலான அல்லது அதற்குச் சமமான அளவில் பயனடையலாம். மேலும், இந்நேர்வில், விண்ணப்பம் பெறப்பட்ட நேரத்தில், அப்படிப்பட்ட ஒரு கருத்தினை உருவாக்கிக் கொள்ள ஆணையத்திற்குப் போதிய சான்று இருந்திருக்கக் கூடாது. புலனாய்வின் கீழ் இருந்து வரும் நிகழ்வு ஒன்றில் (குற்றச்சாட்டு ஒன்றில்) வணிகப் போட்டிச் சட்டத்தின் விதித்துறைகள், மோசடிக் கூட்டமைப்பு ஒன்றினால் மீறப்பட்டுள்ளதை மெய்ப்பித்திடும் அப்படிப்பட்ட சான்றினை அளிப்பதில் விண்ணப்பதாரர் முதலாமவராக இருந்தால், ஒழுங்கு நெறிமுறை 3ன் துணை நெறிமுறை (1Aவில்) குறிப்பிட்டுள்ளவாறு, விண்ணப்பதாரரும் தனியரும் அபராதத் தொகைக் குறைப்பில், நூறு விழுக்காட்டளவு வரையிலான அல்லது அதற்குச் சமமான அளவில் பயனடையலாம்.*

*மேலும், இந்நேர்வில், விண்ணப்பம் பெறப்பட்ட நேரத்தில், ஆணைத்திற்கு அல்லது தலைமை இயக்குநருக்கு, அப்படிப்பட்ட விதிமீறல் ஒன்றினை மெய்ப்பிப்பதற்கான போதிய சான்று இருந்திருக்கக் கூடாது.*

*(b) இந்திய வணிகப் போட்டி சட்டம் பிரிவு 3ன் விதித்துறைகள் மீறப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள கூட்டமைப்பு ஒன்று இருந்து வருவதனை மெய்ப்பித்திட, நேர்வுக்கேற்ப, ஆணையத்திடம் அல்லது தலைமை இயக்குநரிடம் ஏற்கனவே இருந்துள்ள சான்றுக்கு, ஆணையத்தின் கருத்துப்படி ஒரு முக்கிய கூடுதல் மதிப்புள்ள சான்றினை அளித்து ஒரு வெளிப்பாட்டினை நிகழ்த்தும் பட்சத்தில் முதலாம் விண்ணப்பதாரரை அடுத்து வரும் விண்ணப்பதாரர்களுக்கும் தண்டனைக் குறைப்பு வழங்கப்படலாம்.*

*விளக்கம்: இந்த ஒழுங்குமுறை நெறிகளின் தேவைகளுக்காக / நோக்கங்களுக்காக, "கூட்டப் பெற்ற மதிப்பு" என்னும் தொடருக்கு, இந்திய வணிகப் போட்டிச் சட்டப் பிரிபு 3-ன் விதித்துறைகள் மீறப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள கூட்டமைப்பு ஒன்று இருந்து வருவதனை மெய்ப்பித்திட, நேர்வுக்கேற்ப, ஆணையத்தின் அல்லது தலைமை இயக்குநரின் திறத்தினை உயர்த்திட வழங்கப்படும் சான்று எனப் பொருள் கொள்ளப்பட வேண்டும். (அல்லது சான்று என்று பொருள்).*

*(c)* *மேலே 'b' பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதக் குறைப்பு (நிதி சார்ந்த தண்டனை) கீழ்க்காணும் முறையில் அமைந்திருக்க வேண்டும்.*

*(i)* *முன்னுரிமை நிலையில், இரண்டாவது இடத்தில் இருப்பதாக, ஒழுங்குமுறை நெறி 3ன் துணை ஒழுங்குமுறை நெறி (1Aவில்) அடையாளப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரருக்கும் தனியருக்கும் முழு அளவில் விதிக்கத்தக்க அபராதத் தொகையில் 50 விழுக்காட்டளவில் அல்லது அதற்குச் சமமான அளவு வரையில் அபராதம் விதிக்கப்படுவதற்கான தண்டனைக் குறைப்பு வழங்கப்படலாம்.*

*(ii)* *முன்னுரிமை நிலையில், மூன்றாவது இடத்தில் இருப்பதாக, ஒழுங்குமுறை நெறி 3ன் துணை ஒழுங்குமுறை நெறி (1Aவில்) அடையாளப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரருக்கும் தனியருக்கும் முழு அளவில் விதிக்கத்தக்க அபராதத் தொகையில் 30 விழுக்காட்டளவில் அல்லது அதற்குச் சமமான அளவு வரையில் அபராதம் விதிக்கப்படுவதற்கான தண்டனைக் குறைப்பு வழங்கப்படலாம்.*

***5. மிகக் குறைந்த அளவிலான தண்டனை / அபராதம் வழங்கப்படுவதற்கான வழிமுறை***

*(1) மிகக் குறைந்தளவு தண்டனை / அபராதம் வழங்கப்படும் நோக்கங் கருதி, விண்ணப்பதாரராக இருக்கும் நிறுவனமோ, அதன் அதிகாரம் பெற்றவர்களோ, ஒரு மோசடிக் கூட்டமைப்பு குறித்து, அட்டவணையில் இடம் பெற்றுள்ளதற்கு ஏற்ப, அனைத்து முக்கியமான தகவல்கள் அடங்கிய விண்ணப்பம் ஒன்றினை அளித்திடலாம். அல்லது வணிக மோசடிக் கூட்டமைப்பு ஒன்று இருந்து வருவது குறித்த தகவலினையும் சான்றினையும் அளித்திடுதற்காக (அதற்கென) நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியை / அதிகாரக் குழுவினை (ஆணைக் குழுவினை வாய்மொழி மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ தொலைநகல் (நிகரி) மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். அதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரி / ஆணைக்குழு, அதன் பின்னர், ஐந்து வேலை நாட்களுக்குள் வணிகப்போட்டி ஆணையத்தின் மீள்பார்வைக்கு அதனை அனுப்பிவைத்திட வேண்டும்.*

*(2) ஆணையம், அதன் மீது விண்ணப்பதாரரின் முன்னுரிமை குறித்தும் நியமிக்கப்பட்ட அதிகாரி குறித்தும் விண்ணப்பதாரருக்கு தொலைபேசி வாயிலாகவோ, மின்னஞ்சல் வாயிலாகவோ, தொலைநகல் (நிகரி) வாயிலாகவோ தெரிவிக்க வேண்டும். ஒழுங்குமுறை நெறி 1ன் கீழ் பெறப்பட்ட தகவல், வாய்மொழி வாயிலாகவோ, மின்னஞ்சல் வாயிலாகவோ, தொலைநகல் (நிகரி) வாயிலாகவோ அமைந்திருந்தால், ஆணையம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து முக்கியத் தகவல்களையும் உள்ளடக்கிய எழுத்துப் பூர்வமான விண்ணப்பம் ஒன்றினை, பதினைந்து நாட்களுக்கு மிகாமல் அளித்திட ஆணையம் விண்ணப்பதாரருக்கு அறிவுறுத்த வேண்டும்.*

*(3) ஆணைக் குழுவால் விண்ணப்பம் பெறப்பட்ட நாளும், நேரமும், நியமிக்கப்பட்ட அதிகாரியால் பதிவு செய்யபப்பட்ட நாளும் நேரமுமாக அல்லது, சேவையகத்தில் பதிவு செய்யப்பட்ட அல்லது, நியமிக்கப்பட்ட அதிகாரியின் தொலைநகல் பரிமாற்ற இயந்திரத்தில் இடம் பெறும் நாளும், நேரமுமக இருக்க வேண்டும்.*

*(4) ஆணையத்தின் அறிவுறுத்தல் பற்றிய தகவல் கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள்ளாகவோ, ஆணையம் நீட்டித்து வழங்கியுள்ள கூடுதல் கால அவகாசத்திற்குள்ளாகவோ, தேவையான அனைத்து ஆவணங்களுடன் விண்ணப்பம் கிடைக்கப்பெறாத நேர்வில், விண்ணப்பதாரர் தனது முன்னுரிமை நிலைக்கான கோரிக்கையினை இழக்க நேரிடுவதோடு, குறைந்தளவு தண்டனை பெறுவதற்கான பயனையும் இழக்க நேரிடலாம்.*

*(5) விண்ணப்பம் கிடைக்கப் பெற்றவுடன், ஆணையம் தனது நியமிக்கப்பட்ட அதிகாரியின் வாயிலாக விண்ணப்பத்தின் முன்னுரிமை நிலை குறித்து அறிவித்து எழுத்துப்பூர்வமான ஒப்புகையை அளித்திட வேண்டும். ஆனாலும், வெறும் அதனடிப்படையில் மட்டுமே, விண்ணப்பதாரர் குறைந்தளவு தண்டனை பெறுவதற்கான உரிமை வழங்கப்பட்டவராக ஆகி விட முடியாது.*

*(6)* ஆணையத்தால், முதல் விண்ணப்பதாரரின் சான்று மதிப்பீடு செய்யப்படாவிட்டால், (அப்படி மதிப்பீடு செய்யப்படும் வரை) அடுத்த விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

*(7)* குறைந்தளவு தண்டனை அல்லது முன்னுரிமை நிலை பயனைக் கோரும் விண்ணப்பதாரராக இருக்கும் ஒரு நிறுவனம், அல்லது அதனால் அதிகாரம் அளிக்கப்பட் பிரதிநிதியானது அட்டவணையில் குறிப்பிடப்பட்டும் விவரிக்கப்பட்டுமுள்ள, அவ்வப்போது ஆணையத்திற்குத் தேவைப்படுகின்ற முழுமையான மற்றும் உண்மையான தகவல் வெளிப்பாட்டினை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்றால், ஆணையம், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களையும், சூழ்நிலைகளையும் கருதிப் பார்த்தபின், விண்ணப்பதாரரின் விண்ணப்பத்தினை நிராகரிப்பதற்கான (ஏற்க மறுப்பதற்கான) முடிவொன்றினை மேற்கொள்ளலாம். ஆனால், அத்தகைய ஒரு முடிவினை மேற்கொள்ளும் முன், அப்படிப்பட்ட ஒரு விண்ணப்பதாரருக்கு, அவர் தமது தரப்பிலான / அது தனது தரப்பிலான கருத்துகளை எடுத்தியம்பிட வாய்ப்பு ஒன்றினை அளித்திடல் வேண்டும்.

*(8)* முதல் விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படாத நேர்வில், அடுத்தடுத்த விண்ணப்பதாரர்கள், ஆணையத்தால் வழங்கப்படக்கூடிய முன்னுரிமை நிலையைப் பெறுவதற்கான முன்னுரிமை வரிசையில் முன்னேறுவர். மேலும், முதல் விண்ணப்பதாரரின் நேர்வில் உள்ளதனைப் போன்றே, மேலே பரிந்துரைக்கப்பட்ட வழிமுறை, தக்க மாறுதல்களுடன் பயன்படுத்தப்பட வேண்டும்.

*(9)* குறைந்தளவு தண்டனை / அபராதம் அளிக்கப்படும் அல்லது அத்தகைய கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை (முற்றிலும்) நிராகரிக்கப்படும் ஆணையத்தின் முடிவு விண்ணப்பதாரருக்குக் கண்டிப்பாகத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

### 6. இரகசியத் தன்மை (கமுக்கத் தன்மை)

2009ஆம் ஆண்டு வணிகப் போட்டிச் சட்டத்தின் (பொது) ஒழுங்குமுறை நெறிகளை உள்ளடக்கியுள்ள எதனையும் எப்படியிருந்த போதிலும், ஆணையக்குழு அல்லது தலைமை இயக்குநர் இரகசியமாக / கமுக்கமாக வைத்திருக்க வேண்டும்.

அவையாவன :

(a) விண்ணப்பதாரரின் அடையாளம் மற்றும்

(b) ஒழுங்குமுறை நெறி 5-ன் கீழ் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்டுள்ள தகவல்களும், ஆவணங்களும் சான்றும்

ஆனால், பின்வரும் நேர்வுகளில் (தேவைகள் எழும் என்றால், அப்போதெல்லாம்) விண்ணப்பதாரரின் அடையாளம் அல்லது அத்தகைய தகவல் அல்லது ஆவணங்கள் அல்லது சான்று வெளிப்படுத்தப்படலாம்.

(i) சட்டப்படி வெளிப்படுத்தப்பட்டாக வேண்டும் என்றால், அல்லது

(ii) எழுத்துப் பூர்வமாக அத்தகைய வெளிப்பாட்டினைச் செய்வதாக விண்ணப்பதாரர் ஒப்புக் கொண்டார் என்றால்; அல்லது

(iii) விண்ணப்பதாரரால் அப்படிப்பட்ட ஒரு பகிரங்க வெளிப்பாடு இருந்துள்ளது என்றால்

புலனாய்வுத் தேவைகளுக்காக, எந்த ஒரு தரப்பினருக்கும் ஒழுங்குமுறை நெறி 5ன் கீழ் வழங்கப்பட்டுள்ள தகவல்கள், ஆவணங்கள் மற்றும் சான்றினையும் (ஆதாரத்தினையும்) வெளிப்படுத்த வேண்டியது அவசியம் என்று தலைமை இயக்குநர் கருதும் நிலையில், அதற்கு விண்ணப்பதாரர் ஒப்புக் கொண்டிருக்கவில்லை எனில், தலைமை இயக்குநர், எழுத்துப் பூர்வமாக பதிவு செய்யப்படுவதற்கான காரணங்களுக்காக, அத்தகைய தகவல்களையும், ஆவணங்களையும் சான்றினையும் ஆணையத்தின் முன் ஒப்புதல் பெற்ற பின்னர், அத்தகைய தரப்பினரிடம் வெளியிடலாம்.

### 6A. ஆவணங்களின் ஆய்வு

ஒழுங்குமுறை நெறி 6ன் கீழ், இரகசியத் தன்மை எப்படியிருந்த போதிலும் ஒழுங்குமுறை நெறி 37ன் துணை ஒழுங்குமுறை நெறிகள் 1, 3 மற்றும் 4ன் விதித் துறைகளின் கீழும், ஆய்வுக்குத் தேவையான அளவு, 2009 ஆம் ஆண்டு, இந்திய வணிகப் போட்டி ஆணையத்தின் (பொது) ஒழுங்குமுறை நெறிகளின், நெறி 50ன்

*விதித்துறைகள், தொடர்புடைய தரப்பினருக்கு, தலைமை இயக்குநருடைய கண்டறிதல்கள் அடங்கிய அறிக்கையின் ஒரு நகலை (படியை) ஆணையம் அனுப்பி வைத்த பின்னர், ஒழுங்குமுறை நெறி 5ன் கீழ், விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட தகவல்கள், ஆவணங்கள் மற்றும் சான்றின் (ஆதாரத்தின்) இரகசியமற்ற கூற்றுக்குப் பொருந்துவதாக அமைந்திட வேண்டும்.*

*இருந்தபோதிலும், அத்தகைய தரப்பினர், சட்டத்தின் கீழுள்ள செயல்முறைகளுக்காக அன்றி, பெறப்பட்ட தகவல்களை, ஆவணங்களை மற்றும் சான்றினை வேறு எவற்றுக்காகவும் வெளிப்படுத்தக் கூடாது.*

*7.* ***கஷ்டத்தினை (சிரமத்தினை) நீக்குதல்***

*இந்த ஒழுங்குமுறை நெறிகள் விதித் துறைகளின் விளக்கம் அல்லது விதித்துறைகள் நடைப்படுத்தப்படுதல் விஷயத்தில், ஏதேனும் ஐயமோ, சிரமமோ ஏற்பட்டால், அது ஆணையத்தின் முன் வைக்கப்பட வேண்டும். அதன்மீது ஆணையம் எடுக்கும் முடிவு, தொடர்புடையவர்ரைக் கட்டுப்படுத்துவதாக இருக்க வேண்டும் / இருந்திடும்.*

**அட்டவணை**

*விண்ணப்பத்தனுள் அடங்குபவை*

*(இந்திய வணிகப் போட்டி ஒழுஙகுமுறை நெறி 5-ன் இணை ஒழுங்குமுறை நெறிகள் (1னையும்)*

*(2னையும்)s காண்க)*

*குறைந்தளவு தண்டனை வழங்கக் கோரும் விண்ணப்பம், மற்றவற்றுடன் சேர்த்துப் பின்வருவனவற்றையும் உள்ளடக்க வேண்டும். அதாவது / அதுயாதெனில்,*

*(a) ஒரு மோசடிக் கூட்டமைப்பிலுள்ள விண்ணப்பதாரராகவிருக்கும் நிறுவனம் அல்லது அதன் அதிகாரப் பூர்வமான பிரதிநிதி, அதுபோன்றே பிற நிறுவனங்கள் ஆகியவற்றின் பெயரும் / பெயர்களும் முகவரியும் / முகவரிகளும்.*

*(b) விண்ணப்பதாரர் இந்தியாவுக்கு வெளியே இருப்பிடத்தைக் கொண்டிருந்தால், தகவல் தொடர்பிற்கான அவரது இந்திய முகவரியுடன் தொலைபேசி எண்கள், மின்னஞ்சல் முகவரி முதலியன.*

*(c) குற்றம் சாட்டப் பெற்றிருக்கும் ஒரு மோசடிக் கூட்டமைப்பின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் உள்ளிட்ட ஏற்பாடு குறித்த விரிவானதொரு அப்படிப்பட்ட நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை எய்திட மேற்கொள்ளப்பட்ட செயல் தன்மை விவரங்களும் பணிகளும்*

*(d) ஈடுபட்டுள்ள சரக்குக் கையாளுகையும் சேவைகளும்*

*(e) உள்ளடக்கப்பட்டுள்ள நிலவரையிலான சந்தை*

*(f) மோசடிக் கூட்டமைப்பின் தொடக்கமும் கால அளவும்*

*(g) மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வணிகத்தின் அளவு (குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மோசடிக் கூட்டமைப்பால் இந்தியாவில் ஏற்பட்ட பாதிப்பு)*

*(h) விண்ணப்பதாரரின் சார்பில் மோசடிக் கூட்டமைப்பின் மோசடிகளில் ஈடுபட்டுள்ள தனியர்கள் உட்பட, விண்ணப்பதாரர் அறிந்த வரையில், மோசடிக் கூட்டமைப்புடன் தொடர்ந்து இணைந்திருக்கும் அல்லது இதுவரையில் இணைந்து வந்துள் அனைத்துத் தனியர்களின் பெயர்கள், பதவிகள், அலுவலக இடங்கள் மற்றும் தேவைப்படும் இடங்களில் வீட்டு முகவரிகளும் ஆகியவற்றினை அல்லது வீட்டு முகவரிகள் ஆகியன.*

*(i) வனிக்க மோசடி கூட்டணி தொடர்பாக அணுகப்பட்ட அல்லது அணுகப்பட விரும்பும் பிற போட்டி அதிகாரிகள், மன்றங்கள் அல்லது நீதிமன்றங்களின் விவரங்கள் ஏதேனும் இருந்தால்;*

*(j) குறைந்த அபராதத்திற்கான விண்ணப்பத்திற்கு ஆதரவாக வழங்கப்பட்ட ஆதாரங்களின் தன்மை மற்றும் உள்ளடக்கம் தொடர்பான ஆதாரங்களின் விளக்கப் பட்டியல்; மற்றும்*

*(k) ஆணைக்குழுவினால் வழிகாட்டப்படக்கூடிய வேறு ஏதேனும் பொருள் தகவல்கள்*

# அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள்

## அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள்

***வினா 1. சந்தையில் போட்டி என்றால் என்ன?***

- *பொதுவான பேச்சுவழக்கில், சந்தையில் போட்டி என்பது விற்பனையாளர்கள் லாபத்தை (அல்லது பிற வணிக நோக்கங்களை) அதிகரிக்க வாங்குபவர்களின் ஆதரவுக்கு சுயாதீனமாக பாடுபடுவதாகும்.*

- *ஒரு வாங்குபவர் தனது நன்மைகளை அதிகரிக்கும் விலையில் ஒரு பொருளை வாங்க விரும்புகிறார், அதே நேரத்தில் விற்பனையாளர் தனது லாபத்தை அதிகரிக்கும் விலையில் பொருளை விற்க விரும்புகிறார்.*

***வினா 2. சந்தையில், போட்டி நமக்கு ஏன் தேவைப்படுகிறது?***

*நுகர்வோர் மிகவும் போட்டித்தன்மையுள்ள விலையில் பரந்த அளவிலான சேவைகளை அணுகுவதை உறுதி செய்வதற்கான சிறந்த வழிமுறையாக போட்டி இப்போது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தயாரிப்பாளர்களுக்கு புதுமைப்படுத்தவும், அவர்களின் செலவுகளைக் குறைக்கவும் மற்றும் நுகர்வோர் தேவையைப் பூர்த்தி செய்யவும், அதிகபட்ச ஆதாயம் உண்டு. இதனால் போட்டி ஒதுக்கீடு மற்றும் உற்பத்தி செயல்திறனை ஊக்குவிக்கிறது. ஆனால் இவை அனைத்திற்கும் ஆரோக்கியமான சந்தை நிலைமைகள் தேவைப்படுகின்றன மற்றும் உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் போட்டியை ஊக்குவிக்க பொருத்தமான விதிமுறைகள் மூலம் சந்தை குறைபாடுகளை நீக்க முயற்சிக்கின்றன.*

***வினா 3. நியாயமற்ற போட்டியின் பொருள் என்ன?***

*நியாயமற்ற போட்டி என்பது கூட்டு விலை நிர்ணயம், விலைகளை அதிகரிப்பதற்காக வெளியீட்டை வேண்டுமென்றே குறைத்தல், போட்டியாளர்களின் நுழைவிற்கு அல்லது விரிவாக்கத்திற்கு தடைகளை உருவாக்குதல், சந்தைகளை ஒதுக்கீடு செய்தல், ஒரு பொருளின் கொள்முதலை மற்றொரு பொருளின் விற்பனையுடன் கட்டயமாக்குவது, போட்டித்தன்மையை சூறையாடும் விலை நிர்ணயம், பாரபட்சமான விலை நிர்ணயம் போன்ற நடைமுறைகளை பின்பற்றுவது.*

***வினா 4. வணிகப்போட்டி சட்டம் மற்றும் கொள்கை என்ன?***

*போட்டிச் சட்டம் மற்றும் கொள்கை ஆகியவை நிறுவனங்களின் நடத்தை மற்றும் தொழில்துறையின் கட்டமைப்பை பாதிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளாகும். அத்தகைய நடவடிக்கைகள் செயல்திறனை மேன்படுத்தவும் பொதுநலனை அதிகரிக்கவும் செயல்படுத்தப்படுகிறது.*

*அத்தகைய அரசாங்க நடவடிக்கைகளில் இரண்டு கூறுகள் உள்ளன-*

- ***வணிகப்போட்டிக் கொள்கை:*** *சந்தைகளில் போட்டியை அதிகரிக்கும் தாராளமயமாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கை, தளர்வான அன்னிய நேரடி முதலீடு கொள்கை, ஒழுங்குமுறை போன்ற கொள்கைகளின் தொகுப்பு.*

- ***வணிகப்போட்டிச் சட்டம்****: குறைந்த தலையீட்டோடு போட்டி எதிர்ப்பு நடைமுறைகளைத் தடுக்க.*

***வினா 5. 2002 ஆம் ஆண்டு (வணிகப்) போட்டிச் சட்டத்தின், (திருத்தப்பட்டபடி), குறிக்கோள்/ நோக்கங்கள் என்ன?***

*இது போட்டி எதிர்ப்பு நடைமுறைகளைத் தடுப்பதற்கும்; போட்டியை ஊக்குவிப்பதற்கும், நிலைநிறுத்துவதற்கும்; நுகர்வோரின் நலன்களைப் பாதுகாப்பதற்கும்; பிற பங்கேற்பாளர்களின் வர்த்தக சுதந்திரத்தை உறுதி செய்வதற்கும், ஒரு ஆணையத்தை நிறுவுவதற்கான சட்டம் என்று முன்னுரை கூறுகிறது.*

***வினா 6. சட்டத்தின் குறிக்கோள்/ நோக்கங்கள் எவ்வாறு அடையப்படும்?***

*அக்டோபர் 14, 2003 முதல் மத்திய அரசால் நிறுவப்பட்ட இந்திய போட்டி ஆணையத்தை கருவியாகக்கொண்டு இந்த சட்டத்தின் நோக்கங்கள் அடையப்படுகின்றன.*

***வினா 7. இந்திய போட்டி ஆணையத்தின் செயல்பாடுகள் என்ன?***

*இந்திய வணிகப்போட்டி ஆணையம் விசாரணை/ புலனாய்வு வாயிலாக போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்கள் மற்றும் ஆதிக்க நிலையை துஷ்பிரயோகம் செய்வதை தடைசெய்யும், மேலும் நிறுவனங்களின் சேர்க்கையை (இணைப்புகள் அல்லது ஒருங்கிணைப்புகள் அல்லது கையகப்படுத்துதல்) ஒழுங்குமுறைப்படுத்தும்.*

*எந்தவொரு சட்டத்தின் கீழும் நிறுவப்பட்ட அதிகாரத்திடமிருந்து அல்லது மத்திய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கமிடமிருந்துபெறப்பட்ட குறிப்பு குறித்த போட்டி சம்மந்தப்பட்ட பிரச்சனைகளைபற்றி கருத்தை வழங்கும்.*

*இந்திய வணிகப்போட்டி ஆணையமானது, வணிகப்போட்டியை ஆதரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பொது விழிப்புணர்வை ஏற்படுத்தவும், போட்டி பிரச்சனைகள் குறித்து பயிற்சி அளிக்கவும், கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.*

***வினா 8. சட்டத்தின் கீழ் "ஒப்பந்தம்" என்றால் என்ன?***

*ஒரு "ஒப்பந்தம்" என்பது எந்தவொரு ஏற்பாடு அல்லது புரிதல் அல்லது ஒப்பந்ததாரர்களின் ஒருங்கிணைந்த செயலையும் உள்ளடக்கியது. இது எழுத்துப்பூர்வமாகவோ அல்லது முறையாகவோ அல்லது சட்டத்தில் அமல்படுத்தப்படும் நோக்கம் இருக்க வேண்டும் என அவசியம்இல்லை.*

***வினா 9. போட்டி எதிர்ப்பு ஒப்பந்தம் என்றால் என்ன?***

*போட்டி எதிர்ப்பு ஒப்பந்தம் என்பது போட்டியின் மீது மோசமான விளைவைக் கொண்ட ஒரு ஒப்பந்தமாகும். கீழ்கண்ட செயல்பாடுகள் போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்களாக கருதப்படும் ஆனால்இவையன்றி வேறுவிதமான போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்களும் இருக்கலாம்:*

- *உற்பத்தி மற்றும் / அல்லது விநியோகத்தை கட்டுப்படுத்துவதற்கான ஒப்பந்தம்;*
- *சந்தைகளை ஒதுக்க ஒப்பந்தம்;*
- *விலை நிர்ணயிப்பதற்கான ஒப்பந்தம்;*
- *ஏல மோசடி அல்லது கூட்டு ஏலம்;*
- *நிபந்தனை கொள்முதல் / விற்பனை (ஒரு பொருளின் கொள்முதலை மற்றொரு பொருளின் விற்பனையுடன் கட்டாயமாக்குவது );*
- *பிரத்தியேக வழங்கல் / விநியோக ஏற்பாடு;*
- *மறுவிற்பனை விலை பராமரிப்பு; மற்றும்*
- *வணிகத்தில் பங்கேற்க மறுப்பு.*

***வினா 10. ஆதிக்க நிலையை தவறாக பயன்படுத்துவதனை எது உருவாக்குகிறது?***

*ஆதிக்க நிலை என்பது ஒரு நிறுவனத்தால் அனுபவிக்கப்படும் வலிமை நிலை, இது (i) தொடர்புடைய சந்தையில் நிலவும் போட்டி சக்திகளிலிருந்து சுயாதீனமாக செயல்படும் வல்லமை தருகிறது; அல்லது (ii) ஆதிக்க நிலையை அனுபவிக்கும் நிறுவனத்திற்கு ஆதரவாக போட்டியாளர்களை அல்லது நுகர்வோர்களை அல்லது தொடர்புடைய சந்தையை பாதிக்கும் வல்லமையை தருகிறது. ஆதிக்க நிலையை தவறாகப் பயன்படுத்துவது, நிறுவனங்களுக்கிடையேயான நியாயமான போட்டிக்கு தடையாக இருப்பதுடன், நுகர்வோரை சுரண்டுவது, தகுதியின் அடிப்படையில் ஆதிக்க நிலையை அனுபவிக்கும் நிறுவனத்தின் ஏனைய போட்டி நிறுவனங்கள் போட்டியிடுவதற்கு சிரமத்தை ஏற்படுத்துகிறது. ஆதிக்க நிலையை தவறாகப் பயன்படுத்துவதில் அடங்குவன பின்வருமாறு:*

- *நியாயமற்ற நிபந்தனைகள் அல்லது விலையினை விதிப்பது*
- *போட்டித்தன்மையை சூறையாடும் விலை நிர்ணயம்*
- *உற்பத்தி/ சந்தை அல்லது தொழில்நுட்ப வளர்ச்சியை கட்டுப்படுத்துதல்*
- *போட்டியாளர்களின் நுழைவிற்கு அல்லது விரிவாக்கத்திற்கு தடைகளை உருவாக்குதல்*
- *ஒரே மாதிரியான வணிக நடவடிக்கைகளுக்கு வேறுபட்ட நிபந்தனைகளை உபயோகித்தல்*
- *வணிக சந்தை அணுகலை மறுத்தல், மற்றும்*
- *ஒரு வணிக சந்தையில் உள்ள ஆதிக்க நிலையை பயன்படுத்தி மற்றொரு வணிகச் சந்தையில் அதன் பயன்களை பெறுதல்*

***வினா 11. போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்கள் / ஆதிக்க நிலையை தவறாகப் பயன்படுத்துதல் குறித்து ஆணையம் விசாரணையை எப்போது தொடங்கலாம்?***

- *அதன் உரிமை உடைமையின் தகவல் மற்றும் அறிந்த செய்திகளின் அடிப்படையில் அது சொந்தமாகவும் அல்லது*

- *தகவல் பெற்றதன் பேரிலும், அல்லது*

- *மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது சட்டப்படியான அதிகார அமைப்பு, ஆகியவைகளிடமிருந்து குறிப்பினை பெற்றதன் பேரில் விசாரணையை தொடங்கலாம்.*

***வினா 12. தகவலை யார் அளிக்க முடியும்?***

*போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்கள் / ஆதிக்க நிலையை தவறாகப் பயன்படுத்துதல் குறித்து யாதொரு நபர், நுகர்வோர், நுகர்வோர் அமைப்பு அல்லது வணிக அமைப்பும தகவல் வழங்கலாம்.*

- *ஒரு நபர் என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கியது: தனிப்பட்ட நபர், கூட்டுக்குடும்பம், நிறுவனம், வாணிக நிலையம், நபர்களின் கூட்டமைப்பு, தனிநபர் அமைப்பு, சட்டப்படிக்கான கழகம், கூட்டுறவுச் சங்கம், நீதித்துறை நபர், உள்ளூர் அதிகார அமைப்பு மற்றும் இந்தியாவிற்கு வெளியே இணைக்கப்பட்ட அமைப்பு.*

- *ஒரு நுகர்வோர் என்பவர் தனது தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ அல்லது ஏனைய நோக்கங்களுக்காகவோ பொருட்களை (சரக்குகள் மற்றும் சேவைகள்) வாங்குபவர்.*

- *இடைநிலை நுகர்வோர்களும் தகவலை வழங்கலாம்*

*வரையறுக்கப்பட்ட படிவத்தில் தகவல் அளிக்கப்பட வேண்டியதுடன், குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். கேள்வி 30 மற்றும் கேள்வி 31- க்கான பதிலை தயவு கூர்ந்து பார்வையிடவும்.*

***வினா 13. ஒரு விசாரணைக்காக யார் குறிப்பினை அளிக்க முடியும்?***

*ஒரு விசாரணைக்காக, மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது யாதொரு சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அதிகார அமைப்பு, குறிப்பினை அளிக்கலாம். அந்த குறிப்பினை, இந்திய அரசின் இணைச் செயலாளர் பதவித் தரத்திற்கு குறையாத நிலையிலுள்ள ஒரு அதிகாரி கையொப்பமிட வேண்டும்.*

***வினா 14. இந்தியப்போட்டி ஆணையம் தானாகவே முன்வந்து விசாரணையை தொடங்கமுடியுமா?***

*தொடங்கலாம். ஆணையம் அதனிடமுள்ள தகவல் அல்லது செய்திகளின் அடிப்படையில் விசாரணையைத் தொடங்கலாம்.*

***வினா 15. இந்தியப்போட்டி ஆணையம் ஒரு விசாரணையை எவ்வாறு மேற்கொள்ளும்?***

*தானாக அல்லது தகவல் அல்லது குறிப்பினை பெற்றதன் பேரில், ஆணையத்தின் முதன்மைத்தோற்ற அடிப்படையில் ஒரு மீறல் இருப்பின், அது சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தலைமை இயக்குனரை அந்த விஷயத்தை புலனாய்வு செய்து அவரது கண்டுபிடிப்புகளை ஆணையத்திடம் சமர்பிக்க உத்தரவிடும்.*

***வினா 16. புலனாய்வுக்குப்பின் ஆணையம் என்ன செய்யும்?***

*தலைமை இயக்குநரிடமிருந்து புலனாய்வு அறிக்கையைப் பெற்ற பின்னர்,*

- *ஆணையம் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு அதனை அனுப்பலாம்.*
- *சட்டப்படிக்கான அதிகார அமைப்பிடமிருந்து குறிப்புரையின் பேரில் விசாரணை இருக்குமாயின், சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புக்கு அறிக்கை அனுப்புவது கட்டாயமாகும்.*
- *தலைமை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையில், சட்டத்தின் யாதொரு விதிமீறல் இல்லையென சொல்லப்பட்டிருந்தால், ஆணையம், சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடமிருந்து மறுப்புரைகளை கோர வேண்டும்.*
- *பெறப்பட்ட மறுப்புரைகளை கருதிப்பார்த்தப் பின்னர், ஆணையம் தலைமை இயக்குநரிடமிருந்து பெற்ற அறிக்கையை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது தலைமை இயக்குனரை மேல் புலனாய்வு செய்ய உத்ரவிடலாம் அல்லது அதுவாக விசாரணைகளை மேற்கொள்ளலாம்.*
- *மேற்சொன்ன விரிவான நடைமுறைகளின் முடிவில், சம்பந்தப்பட்ட தரப்பினர்களை கேட்டுக் கொண்ட பின்னர், ஆணையம், போட்டி எதிர்ப்பு ஒப்பந்தக் குற்றச்சாட்டு அல்லது ஆதிக்க நிலையை தவறாக பயன்படுத்தியக் குற்றச்சாட்டு, நிரூபணமானதா என்பதை தீர்மானிக்க வேண்டும்.*

***வினா 17. போட்டி எதிர்ப்பு ஒப்பந்தங்கள் / ஆதிக்க நிலையை தவறாகப் பயன்படுத்துதல் இருப்பின், ஆணையம் என்ன உத்தரவுகளை (ஆணைகளை) பிறப்பிக்க முடியும்?***

- *விசாரணையின் போது, ஒரு வழக்குதாரரை போட்டிக்கு எதிரான உடன்படிக்கை அல்லது ஆதிக்க நிலையை தவறாகப் பயன்படுத்துதலைத் தடுக்க ஆணையம் இடைக்கால ஆணையைப் பிறப்பிக்கலாம்.*
- *ஆணையம், நிறுவனத்தின் முந்தைய கடைசி 3 நிதி ஆண்டுகளில் சராசரி விற்றுமுதல் 10 சதவீதத்திற்கு மிகாமல் அபராதம் விதிக்க முடியும். வணிகக்கூட்டு பொறுத்தவரையில், ஆணையம் ஒவ்வொரு*

*உறுப்பினருக்கும் அத்தகைய கூட்டு ஒப்பந்தம் தொடர்ந்த ஒவ்வொரு ஆண்டுக்கும் அதன் லாபத்தின் 3 மடங்கு வரை அல்லது வணிகக்கூட்டு தொடர்ந்த ஒவ்வொரு ஆண்டின் வருவாயில் 10 சதவீதம் வரை, இதில் எது அதிகமோ அதை தண்டனைத்தொகையாக விதிக்க முடியும்.*

- *விசாரணைக்குப் பின்னர், ஆணையம் ஒரு தவறிழைத்த நிறுவனத்தை போட்டிக்கு எதிரான ஒப்பந்தத்தில் மீண்டும் நுழையவோ அல்லது அதன் ஆதிக்க நிலையை தவறாகப் பயன்படுத்தவோ கூடாது என உத்தரவு பிறப்பிக்கலாம். ஆணையம் அத்தகைய ஒப்பந்தத்தை மாற்றியமைக்கவும் உத்தரவிடலாம்.*

- *ஒரு நிறுவனம் தனது ஆதிக்க நிலையை தவறாக பயன்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக ஆணையம் அந்நிறுவனத்தை பிரிக்க உத்தரவிடலாம்.*

***வினா 18. சட்டத்தின் படி சேர்க்கைகள் என்றால் என்ன?***

*மத்திய அரசு 2011 ஆம் ஆண்டு மார்ச் 4ஆம் நாளிட்ட அறிவிப்பில், 2011-ஆம் ஆண்டு ஜூன் முதல் நாளை சேர்க்கைகள் தொடர்பான விதிகள் நடைமுறைக்கு வரும் நாளாக நியமித்தது.*

*பரவலாக, பின்வரும் பரிவர்த்தனைகள் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து அல்லது விற்றுமுதல் அடிப்படையிலான வரம்புகளை மீறும்பட்சத்தில், சேர்க்கைகள் என கருதப்படும்: கட்டுப்பாடு, பங்குகள், வாக்களிக்கும் உரிமைகள் அல்லது சொத்துக்களை கையகப்படுத்தல்; ஒரு நிறுவனத்தின் மீது ஒரு நபர் கட்டுப்பாட்டைப் பெறுதல், அதேசமயம் அவர் போட்டியிடும் தொழில்களில் ஈடுபடும் மற்றொரு நிறுவனத்தின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருத்தல்; மற்றும் நிறுவனங்களுக்கிடையில் அல்லது அவற்றுக்கு இடையேயான இணைப்புகள் மற்றும் ஒருங்கிணைப்புகள். ஒரு சேர்க்கை இந்தியாவில் ஒரு தொடர்பான சந்தையில், போட்டியின் மீது மோசமான விளைவை ஏற்படுத்தினால் அல்லது ஏற்படுத்துமானால் அது தடைசெய்யப்பட்டுள்ளது. அத்தகையசேர்க்கை பொருத்தமான மாற்றங்களுடன் அங்கீகரிக்கப்படலாம்.*

***வினா 19. சேர்க்கைகளை தீர்மானிக்க சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகள் என்ன?***

*சட்டம் சேர்க்கைகளின் கட்டாய அறிவிப்புக்கு, அதிகப்போதுமான சொத்து / விற்றுமுதல் அடிப்படையிலான வரம்புகளை வழங்குகிறது. சொத்து விற்றுமுதலைப் பொறுத்தவரையில், ஆணையத்தின் கட்டாய அறிவிப்பிற்காக தேவையான அதிக துவக்கநிலை அளவினை இச்சட்டம் வழங்குகிறது. மொத்த விலைக் குறியீட்டில் மாற்றங்கள் அல்லது ரூபாய் அல்லது வெளிநாட்டு நாணயங்களின் மாற்று விகிதங்களில் ஏற்ற இறக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், அறிவிக்கை வாயிலாக, அரசாங்கம் ஆணையத்துடன் கலந்தாலோசித்து, ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை சேர்க்கைகளுக்கான வரம்புகளைத் திருத்துவதற்கும் இந்த சட்டம் வகை செய்கிறது.*

*சேரும் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த சொத்துக்கள் / விற்றுமுதல் ஆகியவற்றிற்கான தற்போதைய வரம்புகள் பின்வருமாறு:*

- ***நிறுவன அளவில்**: இந்தியாவில், சேரும் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த சொத்துகளின் மதிப்பு 2000 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது அல்லது சேரும் நிறுவனங்களின் மொத்த வருவாய் 6,000 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது. ஒன்று அல்லது அனைத்து சேரும் நிறுவனங்களுக்கு இந்தியாவிற்கு வெளியே சொத்துக்கள் / விற்றுமுதல் இருந்தால், சேரும் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த சொத்துகளின் மதிப்பு 1000 மில்லியன் அமெரிக்க டாலர்கள், இதில் இந்தியாவில் உள்ள சொத்துகளின் மதிப்பு குறைந்தபட்சம் 1000 கோடி ரூபாயைத், தாண்டியுள்ளது அல்லது சேரும் நிறுவனங்களின் மொத்த விற்றுமுதலின் மதிப்பு 3000 மில்லியன் அமெரிக்க டாலர்கள் இதில் இந்தியாவை சார்ந்த விற்றுமுதலின் மதிப்பு குறைந்தபட்சம் 3000 கோடி ரூபாயைத், தாண்டியுள்ளது.*

- **குழு அளவில்:** கட்டுப்பாடு, பங்குகள், சொத்துகள் அல்லது வாக்களிக்கும் உரிமைகளைக் கையகப்படுத்தப்படும் நிறுவனமானது, கையகப்படுத்தப்பட்ட பின்னர் எந்த குழுவிற்கு சொந்தமாகிறதோ; அல்லது இணைப்பு அல்லது ஒருங்கிணைப்புக்குப் பின்னர் மீதமுள்ள நிறுவனம் எந்த குழுவிற்கு சொந்தமாகிறதோ, அக்குழுவின் சொத்துமதிப்பு இந்தியாவில் 8000 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது அல்லது விற்றுமுதலின் மதிப்பு 24000 கோடி ரூபாயை தாண்டியுள்ளது. அத்தகையக்குழுவிற்கு இந்தியாவுக்கு வெளியே செயல்பாடு இருந்தால், குழுவின் சொத்துகளின் மதிப்பு 4 பில்லியன் அமெரிக்க டாலர்கள், இதில் இந்தியாவில் உள்ள சொத்துமதிப்பு குறைந்தபட்சம் 1000 கோடி ரூபாயைத், தாண்டியுள்ளது அல்லது விற்றுமுதலின் மதிப்பு 12 பில்லியன் அமெரிக்க டாலர்கள், இதில் இந்தியாவை சார்ந்த விற்றுமுதலின் மதிப்பு குறைந்தபட்சம் 3000 கோடி ரூபாயைத், தாண்டியுள்ளது.

'குழு' என்ற சொல் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. ஒரு நிறுவனம் மற்றொரு நிறுவனத்தின் குறைந்தது 26 சதவீத வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்தவோ; அல்லது குறைந்தபட்சம் 50 சதவீத இயக்குநர்களை நியமிக்கவோ; அல்லது மேலாண்மை அல்லது விவகாரங்களைக் கட்டுப்படுத்தவோ முடியுமெனில், அந்த இருநிறுவனங்களும் ஒரு குழுவை சார்ந்ததாக கருதப்படும்.

மேலே உள்ள வரம்புகள் கீழே உள்ள அட்டவணையில் வழங்கப்படுகின்றன:

| **இந்தியாவில்** | | |
|---|---|---|
| பொருந்தக்கூடியவர்கள் | சொத்துக்கள் | விற்றுமுதல் |
| தனிநபர்கள் | ரூ.2,000 கோடி | ரூ.6,000 கோடி |
| குழு | ரூ.8000 கோடி | ரூ.24,000 கோடி |

| **இந்தியா மற்றும் வெளியில்** | | | | |
|---|---|---|---|---|
| பொருந்தக் கூடியவர்கள் | சொத்துக்கள் | | விற்றுமுதல் | |
| | மொத்தம் | மொத்தத்தில் குறைந்தபட்ச இந்திய கூறு | மொத்தம் | மொத்தத்தில் குறைந்தபட்ச இந்திய கூறு |
| தனிநபர்கள் | 1 பில்லியன் அமெரிக்க டாலர்கள் | ரூ.1000 கோடி | 3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் | ரூ.3000 கோடி |
| குழு | 4 பில்லியன் அமெரிக்க டாலர்கள் | ரூ.1000 கோடி | 12 பில்லியன் அமெரிக்க டாலர்கள் | ரூ.3000 கோடி |

1 கோடி = 10 மில்லியன்

விற்பனை செய்யப்பட்ட சரக்குகள் மற்றும் வழங்கப்பட்ட சேவைகளின் மதிப்பு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு மொத்த விற்றுமுதல் நிர்ணயகப்படவேண்டும். சொத்துக்களின் மதிப்பானது தேய்மானங்களை கழித்த பின்னர், சேர்க்கைநடைபெறவிருக்கும் நாளின் முந்தைய நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளில் காட்டப்படும் சொத்துக்களின் மதிப்பினை எடுத்துக்கொண்டு நிர்ணயம் செய்யப்படுகிறது. சட்டத்தின் 5 ஆம் பிரிவின் விளக்கம் (c) இல் கொடுக்கப்பட்டுள்ள நிர்வனத்தை அடையாள மதிப்பு, நற்பெயர் மற்றும் அறிவார்ந்த சொத்துக்களின் மதிப்பை உள்ளடங்கியதாக இருக்கவேண்டும்.

மத்திய அரசின் அறிவிக்கையின்படி (எண் S.O. No.988 (E) நாள் :29.03.2017), ஒரு நிறுவனத்தின் குறிப்பிடப்பட்ட பகுதி அல்லது பிரிவு அல்லது வணிகத்தை கையகப்படுத்தினாலோ, இணைத்தாலோ

*அல்லது ஒருங்கிணைத்தாலோ, அந்த குறிப்பிடப்பட்ட பகுதி அல்லது பிரிவு அல்லது வணிகத்தின் சொத்து மதிப்பு மற்றும் விற்றுமுதல் மதிப்பை கணக்கில் கொண்டு சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகளை கணக்கிடவேண்டும்.*

***வினா 20. சேர்க்கையை முன்மொழிகின்ற ஒரு நிறுவனம் அதை ஆணையத்திற்கு அறிவிக்க வேண்டுமா?***

*சேர்க்கையை முன்மொழிகின்ற ஒரு நிறுவனம், சேரும் நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்கள் சேர்க்கைக்கு ஒப்புதல் அளித்த நாளிலிருந்து; அல்லது செயல்முறை ஒப்பந்தங்கள் அல்லது ஏனைய ஆவணங்கள் உடன்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள்ளாக கருதப்பட்ட சேர்க்கைக்கான விவரங்களுடன் வரையறுக்கப்பட்ட வடிவத்தில் ஆணையத்திடம் தகவல் தெரிவிக்க வேண்டும்[4].*

***வினா 21. ஒரு சேர்க்கை செயலுக்கு வருவதற்கு கட்டாயமான காத்திருப்பு காலம் என்று ஏதேனும் உள்ளதா?***

*ஆம். ஆணையத்திற்கு அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 210 நாட்கள் வரை அல்லது ஆணையம் உத்தரவு பிறப்பிக்கும் நாள் வரையில், இவற்றில் எது முந்தையதோ, அதுவரை சேர்க்கை செயலுக்கு வர இயலாது. மேற்சொன்ன 210 நாட்கள் கால அளவிற்குள் ஆணையம் உத்தரவு பிறப்பிக்காத நேர்வில் அந்த இணைப்பு அங்கீகரிக்கப்பட்டதாக கருதப்படவேண்டும்.*

***வினா 22. சேர்க்கைகளை புலனாய்வு செய்வதற்கான நடைமுறை யாது?***

*ஒரு சேர்க்கையினால் ஏதேனும் பாதிப்புகள் ஏற்படுவதாக அல்லது ஏற்பட்டுள்ளதாக ஆணையம் கருதும் நேர்வில், இணைப்பின் மீது உரிய புலனாய்வு ஏன் நடத்தக்கூடாது என விளக்கம் கோரும் அறிவிப்பை ஆணையம் சேரும் நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும். பதிலைப் பெற்றபின், சேர்க்கை வணிகப்போட்டியின் மீது மோசமான பாதகமான விளைவைக் ஏற்படுத்துகிறது அல்லது ஏற்படுத்தக்கூடும் என்று ஆணையத்திற்கு முதன்மை கருத்து இருந்தால், பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனைகளை கேட்டறிய, சேர்க்கையின் விவரங்களை வெளியிட ஆணை பிறப்பிக்கலாம்.சேர்க்கையால் பாதிக்கப்படக்கூடிய எந்தவொரு நபரையும், தனது ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய அழைக்கலாம். சேரும் நிறுவனங்கள் ஆணையத்திற்கு கொடுத்த அறிவிப்பில் வெளியிடப்பட்டவை சரியானதா என்றும், சேர்க்கை வணிகப்போட்டிக்கு பாதகமான விளைவை ஏற்படுத்துமா என்றும் ஆணையம் விசாரிக்கலாம்.*

***வினா 23. ஒரு சேர்க்கை விஷயத்தில் ஆணையம் என்ன உத்தரவுகளை (ஆணைகளை)ப் பிறப்பிக்க முடியும்?***

- *சேர்க்கையினால் வணிகப்போட்டிக்கு எந்தவிதமான மோசமான பாதகமான விளைவு ஏற்படாது என கண்டறியப்பட்டால், அது சேர்க்கைக்கு ஒப்புதல் அளிக்கும்.*
- *வணிகப்போட்டிக்கு மோசமான பாதகமான விளைவு ஏற்படும்பட்சத்தில், அது சேர்க்கையை மறுக்கலாம்.*
- *ஆணையம் பொருத்தமான மாற்றங்களையும் முன்மொழியலாம்.*

---

[4] *எனினும் மத்திய அரசாங்கத்தின் 29 ஜூன் 2017 அறிவிக்கையின்படி, அதில் இருந்து ஐந்து ஆண்டுகளுக்கு, 30 நாட்களுக்குள் அறிவிப்பு கொடுக்க கடமைப்பட்டுள்ள ஒவ்வொரு நபருக்கும் அல்லது நிறுவனத்திற்கும் சட்டப்பிரிவுகள் 6(2), 6(2A) மற்றும் 43A-ல் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.*

**வினா *24.* அதாவது ஒரு போட்டிக்கு எதிரான ஒப்பந்தத்தைப்பற்றி தகவல் தரும் நபருக்கு கனிவான போக்கு வழங்கப்படுமா?**

*சட்டத்தின் 46 வது பிரிவு, போட்டி எதிர்ப்பு ஒப்பந்தம் தொடர்பான முழு, உண்மையான மற்றும் முக்கிய தகவல்களை வழங்கும் ஒப்பந்தத்தின் உறுப்பினருக்கு குறைந்த அபராதம் விதிப்பதன் மூலம் கனிவான போக்கை கடைபிடிக்க ஆணையத்திற்கு, அதிகாரம் அளிக்கிறது. எந்தஒரு போட்டி எதிர்ப்பு நடத்தையில் ஈடுபடும் நபர்களை தூண்டி அதை முறியடித்து, போட்டி எதிர்ப்பு ஒப்பந்தத்தை கண்டுபிடிப்பதற்கும் விசாரணை செய்வதற்கும் உதவும் வகையில் இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.*

**வினா *25.* ஆணையத்திற்க்கு முன் ஒருவரின் பிரிதிநிதியாக யார் விளங்க முடியும்?**

*ஒரு நபர் அல்லது ஒரு நிறுவனம் நேரில் அல்லது அதன் அதிகாரிகளில் ஒருவர் மூலமாக வாதுரைக்கலாம் அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பட்டய கணக்காளர்கள் அல்லது நிறுவன செயலாளர்கள் அல்லது செலவு கணக்காளர்கள் அல்லது சட்ட பயிற்சியாளர்களை, தனது அல்லது அதன் வழக்கை ஆணையத்தின் முன் எடுத்துரைக்க பிரதிநிதியாக அங்கீகரிக்கலாம்.*

**வினா *26*. ஒரு போட்டி கொள்கையின் மீது யார் ஒரு குறிப்பினை அனுப்ப முடியும்?**

*மத்திய அரசு அல்லது ஒரு மாநில அரசு, போட்டி தொடர்பான கொள்கையை வகுப்பதில் அல்லது வேறு எந்த விஷயத்திலும், ஆணையத்தின் கருத்தைத் கேட்டு குறிப்பினை அனுப்பலாம்.*

**வினா *27.* ஒரு போட்டி பிரச்சனையின் மீது யார் ஒரு குறிப்பினை அனுப்ப முடியும்?**

*எந்தவொரு சட்டரீதியான அதிகாரமும், தானாகவோ அல்லது ஒரு வழக்காலரின் கோரிக்கையின் அடிப்படையில், தனதுமுன் உள்ள நடவடிக்கையில் எழும் போட்டி பிரச்னை குறித்து ஆணையத்தின் கருத்தை கேட்டறிய ஒரு குறிப்பினை அனுப்பலாம்.*

**வினா *28.* வணிகப்போட்டி ஆணையம் ஒரு சட்டரீதியான அதிகாரத்திற்கு குறிப்பினை அனுப்ப முடியுமா?**

*ஆணையம் தனாகவோ அல்லது ஒரு வழக்காலரின் கோரிக்கையின் அடிப்படையில், ஆணையத்தின் முன் உள்ள நடவடிக்கையில் எழக்கூடிய தொடர்பான பிரச்னை குறித்து எந்த ஒரு சட்டரீதியான அதிகாரத்தின் கருத்தை கேட்டறிய ஒரு குறிப்பினை அனுப்பலாம்.*

**வினா *29.* போட்டி ஆணையத்தின் ஆணைகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்கான வழிவகைகள் யாவை?**

*ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட சட்ட பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட எந்த ஒரு உத்தரவு அல்லது மேற்கொள்ளப்பட்ட முடிவு அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிரான மேல்முறையீடுகளை கேட்கவும் மற்றும் தீர்வு செய்யவும் ஒரு தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தை (NCLAT) மத்திய அரசு நியமித்துள்ளது. அத்தகைய ஆணைகள். சேர்க்கை குறித்த அறிவிப்புகள், ஆணையத்தின் விசாரணை மற்றும் அபராதங்கள் தொடர்பான ஆணைகளை மேல்முறையீடு செய்யமுடியும்.*

*ஆணையத்தின் ஆணை/ உத்தரவு/ முடிவு கிடைத்த 60 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யப்பட வேண்டும்.*

*தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் (NCLAT) உத்தரவு, முடிவு அல்லது ஆணையினால் பாதிக்கப்பட்ட ஒரு நபர் அந்த உத்தரவு, முடிவு அல்லது ஆணை கிடைக்கப்பெற்ற 60 நாட்களுக்குள் உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்ய இயலும்.*

**வினா *30.* தகவலை தாக்கல் செய்வது எப்படி?**

- *அஞ்சல் குறியீட்டெண்ணுடன் தங்களுடைய முழுமையான அஞ்சல் முகவரி,தொலைபேசி எண், தொலைநகல் எண் மற்றும் மின்அஞ்சல் முகவரி ஆகியவற்றை குறிப்பிடவும். சட்ட விதிகளை*

*மீறியதாக குற்றம்சாட்டபடும் நிறுவனத்தின்(ங்களின்) சட்ட பெயர் மற்றும் முகவரியை(களை) குறிப்பிடவும்.*

- *தகவலானது முறையாக அங்கீகரிக்கப்பட்ட நபரின் கையொப்பத்துடன் பொருண்மைகளை கொண்ட அறிக்கை வடிவில் இருக்க வேண்டும் மற்றும் குற்றஞ்சாட்டப்படுகிற சட்ட விதிமீறல்களின் விவரங்களை கொண்டிருக்க வேண்டும். அதனுடன் துணை ஆவணங்கள், பிரமாண பத்திரங்கள் மற்றும் ஆதாரங்கள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.*

- *ஆணையத்திற்கு அனுப்பப்படுகிற எந்த தகவலும் அல்லது குறிப்பும் அல்லது பதில்களும் நேரிடையாகவோ, பதிவஞ்சலிலோ அல்லது தூதஞ்சலிலோ அல்லது தொலைநகல் பரிமாற்றம் வழியாகவோ செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அனுப்பப்பட வேண்டும்.*

- *இந்திய போட்டி ஆணையம்(போட்டி நிதியம்) புது தில்லி பெயரில் வரைவோலையாக அல்லது செலுத்து ஆணையாக அல்லது வங்கியாளரின் காசோலையாக; அல்லது இந்திய போட்டி ஆணையம் (போட்டி நிதியம்), கணக்கு எண்:1988002100187687 பஞ்சாப் தேசிய வங்கி, பிகாஜி காமா பிளேஸ், புது தில்லி-110066. -க்கு மின்னணு வழி பணபரிமாற்ற சேவை (ECS) மூலம் நேரடியாக கட்டணம் செலுத்தப்பட்ட ஆதாரம் இணைக்கப்பட்டு ஆணையத்தில் தங்களுடைய தகவலை தாக்கல் செய்ய வேண்டும்.*

- *தகவலை தாக்கல் செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைக்கான முழு விவரங்களுக்கு, தயவு செய்து ஆணையத்தின் இணையதளத்தில் கிடைக்கக்கூடிய "தகவலை தாக்கல் செய்வது எப்படி" என்ற தலைப்பில் உள்ள கையேட்டை அல்லது இந்திய வணிகப்போட்டி ஆணையத்தின் (பொது) ஒழுங்குவிதிகள் 2009 தை பார்க்கவும்.*

***வினா 31. பரிந்துரைக்கப்பட்டுள்ள கட்டணங்கள் எவை?***

*பரிந்துரைக்கப்பட்டுள்ள கட்டணங்கள் கீழ் கண்டவாறு:*

*(a)* *தனிநபர் அல்லது பிரிக்கப்படாத இந்து குடும்பத்தைப் பொறுத்த நேர்வில் (HUF) ரூ 5,000/- (ஐந்தாயிரம் ரூபாய்),*

*(b)* *அரசு சாரா அமைப்பு (NGO), அல்லது நுகர்வோர் சங்கம், அல்லது ஒரு கூட்டுறவு சங்கம், அல்லது அறக்கட்டளை ஆகியவற்றை பொறுத்த நேர்வில், ரூ 10,000/- (பத்தாயிரம் ரூபாய்)*

*(c)* *முந்தைய ஆண்டில் இரண்டு கோடி ரூபாய் வரை விற்றுமுதல் கொண்ட நிறுவனம் (உரிமையாளர், கூட்டாண்மை அல்லது வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மை உட்பட) அல்லது நிறுவனம் (ஒரு நபர் நிறுவனம் உட்பட), ஆகியவற்றை பொறுத்த நேர்வில், ரூ 40,000/- (நாற்பதாயிரம் ரூபாய்),*

*(d)* *முந்தைய ஆண்டில் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் ஆனால் 50 கோடி ரூபாய் வரை விற்றுமுதல் கொண்ட நிறுவனம் (உரிமையாளர், கூட்டாண்மை அல்லது வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மை உட்பட) அல்லது நிறுவனம் (ஒரு நபர் நிறுவனம் உட்பட) ஆகியவற்றை பொறுத்த நேர்வில் ரூ. 1,00,000/- (ஒரு லட்சம் ரூபாய்)*

*(e)* *மேலே (a) அல்லது (b) அல்லது (c) அல்லது (d) பிரிவின் கீழ் வராத நேர்வுகளில் ரூ 50,000/- (ஐம்பதாயிரம் ரூபாய்).*

| Regulations Notified by the Competition Commission of India | | |
|---|---|---|
| **No.** | **Title** | **Regulation Date** |
| **1.** | The Competition Commission of India (Meeting for Transaction of Business) Amendment Regulations, 2021 | 05/03/2021 |
| **2.** | CCI (Manner of Recovery of Monetary Penalty) Amendment Regulations, 2021 | 17/02/2021 |
| **3.** | CCI (Procedure in regard to the transaction of business relating to combinations) Amendment Regulations, 2020 | 26/11/2020 |
| **4.** | The Competition Commission of India (General) Amendment Regulations, 2020 | 06/02/2020 |
| **5.** | The Competition Commission of India (General) Amendment Regulations, 2019 | 20/11/2019 |
| **6.** | The Competition Commission of India (Procedure in regard to the transaction of business relating to combinations) Second Amendment Regulations, 2019 | 30/10/2019 |
| **7.** | CCI (Procedure in regard to the transaction of business relating to combinations) Amendment Regulations, 2019 | 13/08/2019 |
| **8.** | The Competition Commission of India (General) Amendment regulations, 2018 | 06/12/2018 |
| **9.** | CCI (Procedure in regard to the transaction of business relating to combinations) Amendment Regulations, 2018 | 09/10/2018 |
| **10.** | The Competition Commission of India (Lesser Penalty) Amendment Regulations, 2017 | 08/08/2017 |
| **11.** | CCI (Procedure in regard to the transaction of business relating to combinations) Amendment Regulations, 2016 | 07/01/2016 |
| **12.** | CCI (Procedure in regard to the transaction of business relating to combinations) Amendment Regulations, 2015 | 01/07/2015 |
| **13.** | CCI (Procedure For Engagement of Experts and Professionals) Amendment Regulations, 2014 | 21/11/2014 |


| | | |
|---|---|---|
| **14.** | CCI (Manner of Recovery of Monetary Penalty) Amendment Regulations, 2014 | 30/07/2014 |
| **15.** | CCI (Procedure in regard to the transaction of business relating to combinations) Amendment Regulations, 2014 | 08/03/2014 |
| **16.** | CCI (General) Amendment Regulations, 2013 (No. 2 of 2013) | 08/10/2013 |
| **17.** | CCI (Procedure in regard to the transaction of business relating to combinations) Amendment Regulations, 2013 (No. 1 of 2013) | 04/04/2013 |
| **18.** | CCI (Procedure in regard to the transaction of business relating to combinations) Amendment Regulations, 2012 (No. 1 of 2012) | 23/02/2012 |
| **19.** | CCI (General) Amendment Regulation, 2011 (2 of 2011) | 22/11/2011 |
| **20.** | CCI (Procedure in regard to the transaction of business relating to combinations) Regulations, 2011 (No. 3 of 2011) | 11/05/2011 |
| **21.** | CCI (General) Amendment Regulation, 2011 (No. 1 of 2011) | 04/04/2011 |
| **22.** | CCI (Manner of Recovery of Monetary Penalty) Regulation, 2011 (No. 1 of 2011) | 08/02/2011 |
| **23.** | CCI (General) Amendment Regulations, 2010 (No. 1 of 2010) | 20/10/2010 |
| **24.** | CCI (Determination of Cost of Production) Regulations, 2009 (No. 6 of 2009) | 20/08/2009 |
| **25.** | CCI (General) Amendment Regulation, 2009 (No. 5 of 2009) | 20/08/2009 |
| **26.** | CCI (Lesser Penalty) Regulations, 2009 (No. 4 of 2009) | 13/08/2009 |
| **27.** | CCI (General) Regulation, 2009 (No. 2 of 2009) | 22/05/2009 |
| **28.** | CCI (Meeting for Transaction of Business) Regulations, 2009 (No. 3 of 2009) | 21/05/2009 |
| **29.** | CCI (Procedure for Engagement of Experts and Professionals) Regulations, 2009 (No. 1 of 2009) | 15/05/2009 |


# Advocacy Booklets


by

Competition Commission of India

























Above booklets are available at
www.cci.gov.in

Fair Competition
For Greater Good

**COMPETITION COMMISSION OF INDIA**

9th Floor, Office Block-1,
Kidwai Nagar (East)
New Delhi: 110023, India
EPABX Board Number 011-24664100
FAX Number 011-20815022
Web: cci.gov.in
Email: advocacy@cci.gov.in